Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 118 | புதன்கிழமை | பங்குனி 11 ஆம் நாள் 24 மார்ச் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 24 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

# இலங்கை அரசுக்கு எதிராக நிறைவேறியது தீர்மானம்!

கொழும்பு, மார்ச் 24

இலங்கை அரசுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் 22 ஆதரவு வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த வாக்கெடுப்பில் இலங்கையின் அயல்நாடான இந்தியா, கலந்துகொள்ளாது நடுநிலைமை வகித்தது. 23 ➤

- **22 நாடுகள் ஆதரவு**
- **11 நாடுகள் எதிர்ப்பு**
- **இந்தியா மதில் மேல் பூனை**
- **14 நாடுகள் நடுநிலைமை**

**ஆதரவு**

ஆஜென்ரீனா, ஆர்மீனியா, ஒஸ்ரியா, பஹாமாஸ், பிரேசில், பல்கேரியா, ஐவரிகோஸ்ட், டென்மார்க், செக் குடியரசு, பிஜி தீவுகள், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, மாலாவி, மாஷல் தீவுகள், மெக்ஸிக்கோ, நெதர்லாந்து, போலந்து, கொரியக் குடியரசு, உக்ரைன், உருகுவே, அயர்லாந்து.

**எதிர்ப்பு**

பங்களாதேஷ், பொலிவியா, சீனா, கியூபா, எரித்திரியா பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், ரஷ்யா, சோமாலியா, வெனிசுவேலா, உஸ்பெஹிஸ்தான்.

**நடுநிலைமை**

இந்தியா, பஹ்றைன், புர்ஹினா பாஸோ,, கமரூன், கபோன், இந்தோனேசியா, ஜப்பான், லிபியா, நமீபியா, நேபாளம், மொறிட்டேனியா, செனகல், சூடான், டாகோ.

## தீர்மானத்தின் பரிந்துரைகளை முழுமையாகச் செயற்படுத்துக

**ஐ.நாவிடம் சம்பந்தன் கோரிக்கை**



கொழும்பு, மார்ச் 24

இலங்கை மீது பிரேரணையைக் கொண்டுவந்த நாடுகளும், ஐ.நா. மனித உரிமைகள் சபை 23 ➤

## ஐ.நாவின் தீர்மானம் இலங்கைக்கு “அடி!”

*ஈ.சரவணபவன் தெரிவிப்பு*



யாழ்ப்பாணம், மார்ச் 24

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசுக்கு எதிராக நிறைவேற்றப்பட் 23 ➤

## எதிர்பார்த்தவை இல்லையெனினும் தீர்மானம் நிறைவேறியது மகிழ்ச்சி

விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 24

எமது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப ஐ.நா. தீர்மானம் அமையவில்லை. எனினும் ஐக்கிய நாடுகள் மேற்பார்வையின் கீழ் இலங்கை இருப்பது நிம்மதி 23 ➤

## ஐக்கிய நாடுகளுக்கு அஞ்சவேமாட்டோம்

*ஆளும்கட்சி சண்டித்தனம்*

கொழும்பு, மார்ச் 24

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அஞ்சமாட்டோம். அதை நிராகரிக்கின்றோம். இந்தத் தீர்மானத் 23 ➤

## விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை!

**பிரிட்டனுக்கே தோல்வி என்கின்றது இலங்கை அரசு**

கொழும்பு, மார்ச் 24

இலங்கை மீதான ஐ.நா. தீர்மா னத்தில், பிரிட்டன் தலைமையிலான 23 ➤

## வவுனியா குளத்தை மீட்க வெள்ளியன்று போராட்டம்

வவுனியா,மார்ச் 24

வவுனியாக் குளத்தை பாதுகாக்குமாறு வலியுறுத்தி எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாபெரும் சத்தியாக்கிரக 18 ➤

## முறையற்ற கொள்கைகளால் பொருளாதாரத் தடை வரலாம்!

*சஜித் அணி எச்சரிக்கை*

கொழும்பு, மார்ச் 24

சர்வதேச நாடுகளுடன் இலங்கை அரசு கொண்டிருந்த முரண்பாடான கொள்கையே ஜெனிவாவில் 23 ➤

## உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தில் அகழ்வு நடவடிக்கைகள் இன்று

எதிர்த்துப் போராட மக்கள் முடிவு

**கிளிநொச்சி, மார்ச் 24**

கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரர் ஆலய வளாகத்தில் இன்று அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகும் என்று தொல்பொருள் திணைக்களம் அறி 18 ➤

## யாழ். நகர மரக்கறி சந்தையில் 9 பேருக்குக் கொவிட் தொற்று!

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாணம் நகரில் உள்ள மரக்கறிச் சந்தையில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 9 பேருக்கு கொரோனா 18 ➤

## குருந்தூரில் மேலும் 400 ஏக்கரை கையகப்படுத்தப் பிரயத்தனம்!

*தொல்லியல் திணைக்களம் புதிய முயற்சி*

முல்லைத்தீவு, மார்ச் 24

முல்லைத்தீவு மாவட்டம் தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையைச் சுற்றிலுமுள்ள மேலும் 400 ஏக்கர் காணியை, 18 ➤

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.70,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் ரூ.க்க் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka)

UNLIMITED
YouTube
HD quality up to 25GB*
மாதாந்தம் ரூ.249 +வரிகள்
அழையுங்கள் #170#> Content Based Plans> YouTube
4G
SLTMOBITEL
www.sltmobitel.lk
TRC/M/Promo/20/01



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# விரைவாக மாகாண சபை தேர்தலை நடத்துங்கள்

## ஜெனிவாவில் இலங்கையிடம் இந்தியா கோரிக்கை

**கொழும்பு, மார்ச் 24**

**இலங்கையில் விரைவாக மாகாண சபைத் தேர்தலை நடத்தி, அரசமைப்பின் 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று இந்தியா கோரிக்கை விடுத்துள்ளது.**

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீதான பிரேரணையின் விவாதத்தின்போது, இந்தியா இவ்வாறு தெரிவித்துள்ளது. மேலும், இலங்கையில் அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்துவதற்கான சர்வதேச சமூகத்தின் அழைப்பை தாம் ஆதரிக்கின்றோம் எனவும் இந்தியா தெரிவித்துள்ளது.

மனித உரிமைகளை மேம்படுத்திப் பாதுகாப்பது நாடுகளின் பொறுப்பாகும் எனத் தெரிவித்துள்ள இந்தியா, அத்தகைய விடயங்களுக்கு ஆக்கபூர்வமான சர்வதேச உரையாடல்களும் ஒத்துழைப்பும் அவசியம் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கைத் தமிழ் மக்களின் சமத்துவம், நீதி, கண்ணியம் மற்றும் அமைதி என்பவற்றுக்கு ஆதரவு தெரிவித்துள்ள இந்தியா, இலங்கையின் ஒற்றுமை, உறுதித்தன்மை மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டை உறுதிசெய்வதிலும் தாம் கவனம் செலுத்துவோம் எனவும் குறிப்பிட்டுள்ளது. இலங்கையின் முன்னேற்றத்தில் மேற்படி இரண்டு குறிக்கோள்களுக்கும் பரஸ்பரம் ஆதரவளிக்கவுள்ளோம் என இந்தியா மேலும் தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணையின் மீது நேற்று வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த வாக்கெடுப்பில் இந்தியா இலங்கைக்குச் சாதகமாக வாக்களிக்க வேண்டும் என்று இலங்கை அரசு கோரிக்கை விடுத்திருந்தது. எனினும் மௌனம் காத்துவந்த இந்தியா வாக்கெடுப்பில் நேற்று நடுநிலை வகித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-22)

# விபத்தில் ஒருவர் காயம்!

வவுனியா, மார்ச் 24

வவுனியா - செட்டிக்குளத்தில் இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்தார். அவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

வவுனியா செட்டிக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முதலியார்குளம் பகுதியில் நேற்று மாலை 5.30 மணியளவில் மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது. செட்டிக்குளம் பொலிஸார் விபத்துத் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-18)

# நாடாளுமன்ற விவாதங்கள்!

கொழும்பு, மார்ச் 24

நாடாளுமன்றம் நேற்றுக் கூடியுள்ளது. எதிர்வரும் 26ஆம் திகதி வரையில் இந்த அமர்வு இடம்பெறவுள்ளது. இன்றைய தினம் மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழான இரண்டு ஒழுங்குவிதிகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை நடத்திய ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் இறுதி அறிக்கை குறித்த சபை ஒத்திவைப்பு விவாதம் மார்ச் 25 மற்றும் 26 ஆகிய தினங்களில் இடம்பெறவுள்ளது. (ம)

# காசநோய் உள்ளோருக்கு கொரோனா ஆபத்தானது

## மருத்துவர் யமுனானந்தா எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 24

காசநோய் உள்ளவர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டால் இறப்பு வீதம் மூன்று மடங்கு அதிகம் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்தார்.



இன்று உலக காசநோய் தினம். இதைமுன்னிட்டுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

காசநோயானது 1882ஆம் ஆண்டு ரொபேட் பைச்ஸ் என்ற விஞ்ஞானியால் நுணுக்குக்காட்டியினூடாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அந்தத் தினமே சர்வதேச காசநோய் தினமாக அறிவிக்கப்பட்டது.

அந்தவகையில் காசநோய் தினத்தில், காசநோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். குறிப்பாக கொரோனாத் தொற்றுள்ள இந்தக் காலகட்டத்தில் காசநோய் பற்றிய விழிப்புணர்வானது இன்றியமையாததாகும்.

கொரோனாத் தொற்று காரணமாக கடந்த 12 மாதங்களில் உலகளாவிய ரீதியில் காசநோய் கட்டுப்பாட்டின் வீதமானது 12 ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றுள்ளது.

அதாவது காசநோய் உடையவர்கள் மருத்துவமனைகளுக்கு வருவதில் தயக்கம் காட்டுவதும், மருத்துவமனையில் காசநோய் தொற்றுள்ளவர்களுக்கான சிகிச்சைகளை வழங்குவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களும் இந்தப் பின்னடைவுக்கு முதன்மைக் காரணங்களாக உள்ளன.

காசநோயின் அறிகுறிகளாக தொடர்ச்சியாக இரண்டு மூன்று வாரங்களுக்கு இருமல், மாலைநேரக் காய்ச்சல், சளியுடன் இரத்தம் வெளிவருதல், உடல் மெலிதல், களைப்பு ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இத்தகைய அறிகுறி இருப்பவர்கள் கட்டாயம் சளிப் பரிசோதனை செய்தல் வேண்டும்.

தற்போது கொரோனாத் தொற்று இருப்பதனால் இவ்வாறு அறிகுறிகள் இருப்பவர்களும் அடையாளம் காணப்படுவது குறைவாகவுள்ளது.

இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக ஒன்பதாயிரம் பேர் காசநோய் தொற்றுக்குள்ளாகி இனங்காணப்படுகின்றமை வழமை. கடந்த ஆண்டில் ஏழாயிரத்து இருநூறு பேர் காசநோயால் இனங்காணப்பட்டுள்ளனர். யாழிலும் கடந்த ஆண்டு 215 பேரளவில் இனங்காணப்பட்டுள்ளனர். சாதாரணமாக 300 பேரளவில் காசநோயால் கண்டறியப்பட வேண்டும். காசநோயாளர்களை இனங்காண்பதில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சிக்கு தற்போதுள்ள சூழலும் ஒரு காரணமாகும்.

கொரோனாத் தொற்று விழிப்புணர்வு ஏற்படுத்தும் இந்த வேளையில் நாம் காசநோய் தொற்று விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும். உலக சுகாதார நிறுவனம் 2035ஆம் ஆண்டில் காசநோயை இல்லாதொழிக்க செயற்படுகின்றது. ஆனால் அதற்கு தற்போது சில பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன - என்றார். (ம-27)

# யாழில் ஆறாவது தடவை சர்வதேச திரைப்பட விழா

யாழ்ப்பாணம், மார்ச் 24

2020ஆம் வருடத்துக்கான யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழாவின் இறுதித் திரையிடல்கள் காகில்ஸ் திரை அரங்கிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கிலும் நடைபெற்று வருகின்றன.

இன்று மாலை 6 மணிக்கு காகில்ஸ் திரை அரங்கில் 'அன்ரிகனி' என்ற கனடா நாட்டுத் திரைப்படம் திரையிடப்படுகிறது.

கிரேக்க துன்பியல் நாடகமாக அன்ரிகனியைத் தழுவி கபிலியாவில் கண்ணுக்கு முன்னால் உயிரிழப்புகளைக் கண்ட கனடாவில் வாழும் அகதிக் குடும்பம் ஒன்றின் வாழ்க்கையை இது சித்தரிக்கிறது.

நாளை 25 ஆம் திகதி வியாழக்கிழமை மதியம் 2.30 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் ஈழத்து தமிழ் சினிமா பற்றிய ஓர் கலந்துரையாடலை நுண்கலைத்து றையும் பல்கலைக்கழக திரைப்படச் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன. இதில் சமகால திரைப்பட இயக்குநர்களான பேராசிரியர் சுமதி சிவமோகன், அனந்த ரமணன் மற்றும் ராஜ் சிவராஜ் என்பவர்களுடன் விமர்சகரான சாமிநாதன் விமலும் கலந்துகொள்கிறார். கலந்துரையாடலை கலாநிதி தா.சனாதனன் நெறிப்படுத்துகிறார்.

அதேவேளை காலை 10.30க்கு 'கலிபோய்' என்ற ஹிந்தி மொழிப்படமும், மாலை 4 மணிக்கு 'கோபோ செலஸ்' என்கின்ற இத்தாலிய மொழித் திரைப்படமும் திரையிடப்படுகின்றன.

மாலை 6.30 மணிக்கு திரைப்படவிழாவின் இறுதிப் படமான 'தனி டம்பிளர்' என்ற இலங்கைத் திரைப்படம் திரையிடப்படுகிறது. இதை சுமதி சிவமோகன் இயக்கியுள்ளார். திரையிடல்களுக்கான அனுமதி இலவசம். திரைப்பட விழாவில் தற்போது நடைமுறையில் உள்ள சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து எவரும் கலந்துகொள்ள முடியும். (ம)

# சீனி இறக்குமதியில் மோசடிகள் இல்லை

## நிவாட் கப்ரால் விளக்கம்

கொழும்பு, மார்ச் 24

சீனி இறக்குமதிக்கான வரிக் குறைப்பால் அரச வருமானம் இழக்கப்பட்டுள்ளதே தவிர எவ்வித ஊழல் மோசடிகளும் இடம்பெறவில்லை. வரிக் குறைப்பின் பிரதிபலன் மக்களுக்கே சென்றுள்ளது என்று நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தாவது,

'சீனி இறக்குமதிக்கான வரி குறைப்புத் தொடர்பில் எதிர்க்கட்சியினர் தவறான பரப்புரைகளை கடந்த இரண்டு வாரங்களாக நாட்டில் முன்னெடுத்து வருகின்றனர்.

35 ரூபாவிலிருந்த சீனியின் வரியை 50 ரூபாவாக அதிகரித்து பின்னர் 25 சதமாகக் குறைத்திருந்தோம். சீனியின் வரியை மாத்திரம் நாம் குறைத்திருக்கவில்லை. பெரிய வெங்காயம், பருப்பு மற்றும் ரின் மீன் உள்ளிட்ட பொருள்களின் வரியையும் 25 சதமாக குறைத்திருந்தோம். பொதுவாகவே வரியை குறைத்திருந்தோம். சீனிக்கான இறக்குமதி வரிக் குறைப்பால் 15.5 பில்லியன் ரூபாவை நாம் பெற்றுக்கொள்ளவில்லை. இது ஊழல் அல்ல. நாம் மக்களுக்கான சலுகையையே இதன்மூலம் பெற்றுக் கொடுத்துள்ளோம். வருமான இழப்பு ஏற்பட்டாலும் அதன் பிரதிபலன் மக்களுக்குச் செல்லும் வகையிலேயே இந்த வழிமுறை வகுக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கு சலுகை செல்லவில்லையென கூறுகின்றனர். வரிக்குறைப்பு செய்யப்பட்ட உடனே பிரதிபலன் மக்களுக்கு கிடைக்காது. சிறிதுகாலம் செல்லும். இது தான் பொருளியல் கோட்பாடு. வரி அதிகரிக்கப்பட்டால் உடனடியாக பொருள்களின் விலை அதிகரிக்கும். ஆகவே, சீனி இறக்குமதியில் எவ்வித மோசடியும் ஏற்படவில்லை - என்றார். (ம-44)

# கூடுதலாகப் பொய் சொல்பவர்கள் அதிக வாக்குகளைப் பெறுகின்றனர்

*அங்கஜனை மறைமுகமாகச் சாடுகிறாரா டக்ளஸ்?*

**யாழ்ப்பாணம், மார்ச் 24**

**இன்று யார் கூடுதலாக பொய் சொல்லுகின்றார்களோ அல்லது யார் கூடுதலாக பணம் செலவழிக்கின்றார்களோ அல்லது யார் மக்களை ஏமாற்றுகின்றார்களோ அவர்களே அதிக வாக்குகளைப் பெறும் நிலை காணப்படுகின்றது. இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

தொலைக்காட்சி ஒன்றின் அரசியல் விவாத நிகழ்சியில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார் என, அவரது ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுக்கும் இடையிலான அரசியல் போர் தீவிரமாக இடம்பெற்று வருகின்றது. இருவரும் பொதுவெளிகளில் ஒருவரை ஒருவர் சாடி மறைமுகமாகக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இந்த நிலையில் அண்மையில் கிளிநொச்சியில் உரையாற்றிய அங்கஜன், நெருப்பாற்றைக் கடந்தவர்களைக் கடந்து வந்தவன் நான் என்று கூறியிருந்தார். 2020ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் டக்ளஸ் தேவானந்தாவை விட அங்கஜன் இராமநாதன் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே டக்ளஸ் தேவானந்தா மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மைய காலங்களில் யாழ். மாவட்டத்தில் மக்கள் சேவையை முன்னெடுக்கும் அரச அதிகாரிகளை அச்சுறுத்துவது மற்றும் பழிவாங்குவது உள்ளிட்ட செயற்பாடுகள் அதிகரித்துள்ளன எனவும் இதனால் குறித்த அரச அதிகாரிகள் பலர் இடமாற்றங்களை சந்தித்துள்ளதுடன் ஒரு சிலர் குறித்த தரப்பினரது கைப்பாவைகளாகவும் இருந்து செயற்படுவதால் மக்களின் சேவைகள் மட்டுமல்லாது அரச இயந்திரமும் ஒரு ஸ்திரமற்ற நிலையில் காணப்படுகின்றது எனவும் பலதரப்பினரால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து எனது கவனத்துக்கு நாளாந்தம் வருகின்றன.

அதேநேரம் நான் அரச அதிகாரிகளை மக்களின் நலனிலிருந்தே இன்றுவரை பார்த்து வருகின்றேனே தவிர அதிகாரிகளை பழிவாங்கியதோ அசௌகரியங்களுக்கு உட்படுத்தியதோ கிடையாது. ஆனால் இன்று சிலர் அரச அதிகாரிகளை சுதந்திரமாக செயற்படுவதற்கு இடையூறாக உள்ளனர் என்பது கவலை தரும் ஒன்றாக உள்ளது.

நான் தமிழ் மக்களுக்கான உரிமை போராட்டத்தில் நேரடியாக தலைமை தாங்கிய ஒருவன். அதேநேரம் அரசியல் நீரோட்டத்துக்கு வந்தபின்னர் பலதரப்பட்டவர்களது இடையூறுகள் கொலை அச்சுறுத்தல்கள் உள்ளிட்ட பெரும் நெருப்பாற்றை கடந்து வந்தவன். அந்த காலகட்டங்களில் தான் நான் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றம் சென்று மக்களின் நலன்களைப் பாதுகாத்துவரும் ஒருவன். இதனால்தான் நான் கடந்த 27 ஆண்டுகளாக நாடாளுமன்றை தமிழ் மக்களின் சார்பாக யாழ். ,கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து தொடர்ச்சியாக பிரதிநிதித்துவம் செய்து வருகின்றேன். என்னை எனது மாவட்ட மக்கள் எனது நலனுக்காக அன்றி தமது நலன்களுக்காகவே இவ்வாறு தொடர்ச்சியாக நாடாளுமன்றம் அனுப்பி வருகின்றனர்.

ஆனால் இன்று யார் கூடுதலாக பொய் சொல்லுகின்றார்களோ, அல்லது யார் கூடுதலாக பணம் செலவழிக்கின்றார்களோ, அல்லது யார் மக்களை ஏமாற்றுகின்றார்களோ அவர்களே அதிக வாக்குகளை பெறும் நிலை காணப்படுகின்றது. இதனால் தான் இவ்வாறான சம்பவங்கள் அரங்கேற வாய்ப்பேற்பட்டுள்ளது. அந்தவகையில் இது தொடர்பில் நிச்சயமாக விரைவில் காத்திரமான நடவடிக்கை எடுக்க உள்ளேன் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும் தனியார் தொலைக்காட்சி ஒன்று தனது செய்தி அறிக்கையில் கிளிநொச்சி மாவட்ட வீட்டுத் திட்டத்தில் டக்ளஸ் தேவானந்தா மிகப் பெரிய மோசடி செய்தார் எனவும் அவருடன் இணைந்து மாவட்டச் செயலரும் அதை முன்னெடுத்துள்ளார் என்றும் தெரிவித்திருந்தது.

இதை நான் முழுமையாக மறுக்கின்றேன். அவ்வாறு செயற்படுத்தும் தேவை ஒருபோதும் எனக்கிருந்ததில்லை. ஆனால் இது அரசியல் உள்நோக்கத்துடன் சொல்லப்பட்டுள்ளது. இது தொடர்பில் நான் ஆராய்ந்தபோது கடந்த காலத்தில் இருந்த ஒருங்கிணைப்பு குழு தலைமை இதை செய்ததாக தெரியவருகின்றது. இந்நிலையில் குறித்த செய்தியை தவறானது என்றும் அதை தெளிவுபடுத்தி குறித்த தொலைக்காட்சிக்கு எதிராக அதன் நிறுவனருக்கு கடிதம் எழுதியுள்ளேன் எனவும் மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார்.

இது என்னை மட்டுமல்லாது அந்த அரச அதிகாரியையும் மாசுபடுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் தான் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது, என்றுள்ளது. (ஒ.ப)

## இனப் படுகொலையாளிகளுக்கு சூழற் படுகொலையும் சகஜமே

*ஐங்கரநேசன் காட்டம்*

யாழ்ப்பாணம், மார்ச் 24

உலகின் உயிர்ப் பல்வகைமை மிக்க வெகுசில இடங்களில் ஒன்றாகப் பாதுகாக்கப்படும் சிங்கராஜ வனத்தைச் சீர்குலைப்பது ஒரு சூழற்படுகொலையே அன்றி வேறல்ல. இனப் படுகொலையாளிகளான இவர்களுக்கு இது ஒரு பொருட்டாகவே இல்லை என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

மகிந்த ராஜபக்சவின் பிறந்த இடமான அம்பாந்தோட்டையின் வீரக்கெட்டிய நகரத்துக்கு ஜின் கங்கையில் இருந்தும் நிலவள கங்கையில் இருந்தும் தண்ணீர் கொண்டு செல்வதற்காகவே சிங்கராஜக் காட்டின் உள்ளே இரண்டு நீர்த்தேக்கங்களைக் கட்டும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன அமைச்சரும் ராஜபக்ச சகோதரர்களில் ஒருவருமான சமல் ராஜபக்ச அழிக்கப்படும் காட்டுக்குப் பதிலாகப் புதிதாகக் காடு உருவாக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார். பல்லாயிரக்கணக்கான வயதுடைய இந்தக் காட்டை எந்தப் புதிய காட்டாலும், ஈடு செய்ய முடியாது.

இலங்கையின் அரசியல் ஸ்திரத் தன்மை பற்றிக் கருத்திற் கொள்ளாமல் சீன சார்பு நிலையெடுத்து இலங்கையை வல்லரசுகளின் போட்டிக் களமாக்கியுள்ள அரசு இப்போது இலங்கையின் சூழல் ஸ்திரத் தன்மையையும் சீர்குலைப்பதில் முனைப்பாக ஈடுபட்டு வருகின்றது.

இவை தென்னிலங்கைச் சம்பவங்கள் என்று நாம் பேசாது இருக்க முடியாது. இயற்கைச் சூழலுக்கு எல்லைகள் இல்லை.

இவை தென்னிலங்கையை மாத்திரம் அல்ல் ஒட்டுமொத்த இலங்கையையும், உலகையும் பாதிக்கப்போகின்ற சூழற் பேரழிவுகள். இவற்றின் காரணமாகத் தென்னிலங்கையில் காடழிப்புக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுத்துள்ள பேராட்டத்தை நாம் வரவேற்கிறோம்- என்றார். (ப-20)

## சோதனைச் சாவடியை மோதித்தள்ளியது வான்

**பொலிஸ் உள்ளிட்ட இருவர் சாவு**

கொழும்பு,மார்ச் 24

வாகன சோதனைச் சாவடியில் நடந்த விபத்தில், உப பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்ட இருவர் உயிரிழந்தனர். இந்த விபத்து வெலிகடை ஆயுள்வேத சுற்றுவட்டத்தின் அருகே நேற்று அதிகாலை 4.30 மணியளவில் நடந்துள்ளது. விபத்தில் உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் லொறியின் உதவியாளர் ஆகியோர் உயிரிழந்தனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

வெலிகடை மேம்பாலம் மற்றும் ஆயுர்வேத சுற்று வட்டத்துக்கு இடைப்பட்ட வலயத்தில் கொழும்பு அவசர நிலை பதிலளிப்பு பிரிவின் பொலிஸ் அதிகாரிகள், வாகனச் சோதனையில் ஈடுபட்டுள்ளனர். சிறிய ரக லொறியொன்றை அவர்கள் சோதனை செய்து கொண்டிருந்த போது, பொரளை நோக்கி வேகமாகப் பயணித்த வான் அவர்கள் இருவரையும் மோதியது என்று தெரிவிக்கப்படுகிறது. விபத்தை ஏற்படுத்திய வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (க-இ)

## வீட்டுத் திட்டத்துக்கு தெரிவானோர் விவரம் பொதுமக்கள் பார்வைக்கு

**ஆளுநரின் அறிவுறுத்தலையடுத்து நடைமுறையாகின்றது**

கோப்பாய், மார்ச் 24

யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களுக்குத் தெரிவு செய்யப்படும் வாய்ப்பை ஆளும் கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதி தனக்கு வேண்டப்பட்டவர்களுக்கு வழங்கி வருகின்றார் என்ற குற்றச்சாட்டுக்கள் பலமாக எழுந்துள்ள நிலையில், சகல பயனாளிகள் பட்டியலும் பொதுமக்களுக்கு காட்சிப் படுத்தப்பட்டே இறுதி செய்யப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் அறிவுறுத்தியிருந்தார். இது தற்போது பிரதேச செயலகங்களால் நடைமுறைப்படுத்தப்படத் தொடங்கி யுள்ளது. முதற்கட்டமாக கோப்பாய் பிரதேச செயலகம் தனது பயனாளிகள் பெயர்ப் பட்டியலை கிராம அலுவலர் அலுவலகங்கள் தோறும் காட்சிப் படுத்தியுள்ளது என அறிவித்துள் ளது.

வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவுக்கு ஏற்புடைய நிபந்தனைக்கு பொருத்தமில்லாதவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தால் அது தொடர்பான ஆட்சேபனைகளையும் வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவுக்கு தகுதி உடையவர்கள் அது தொடர்பான கோரிக்கை விண்ணப்பத்தையும் இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் சமர்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆட்சேபனைகள் மற்றும் விண்ணப்பங் களை பிரதேச செயலகத்தில் உள்ள அதற்குரிய பெட்டியில் போடுமாறும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வீடமைப்பு அமைச்சின் இந்த வீட்டுத்திட் டத்தில் 2 பேர் உள்ள குடும்பங்க ளுக்கு 6 லட்சம் ரூபாவும், 2 பேருக்கு மேற்பட்டோர் கொண்ட குடும்பங்க ளுக்கு 10 லட்சம் ரூபாவும் வீடு கட்டுவதற்கு வழங்கப்படவுள்ளன. (ஒ.ஐ11)

# மாகாண சபைத் தேர்தலில் விமலுடன் இணையும் சு.க.?

### இன்னும் முடிவில்லை என்கிறார் அமரவீர

கொழும்பு.மார்ச் 24

மாகாணசபைத் தேர்தலில் தனித்து போட்டியிடுவது தொடர்பில் எந்தவொரு கட்சியுடனும் தமது கட்சி இன்னமும் பேச்சு நடத்தவில்லை என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும், அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணி அரசியலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி ஆகியவை பங்காளிக் கட்சிகளாக அங்கம் வகிக்கின்றன.

இந்நிலையில் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் இவ்விரு கட்சிகளும் கூட்டணி அமைத்து, தனித்துக் களமிறங்கும் என்று வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் வினவிய போதே அமைச்சர் மஹிந்த அமரவீர இதனைத் தெரிவித்தார். மாகாண சபைத் தேர்தலில் இரு கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் இன்னமும் பேச்சு நடைபெறவில்லை. அது தொடர்பில் கோரிக்கையும் முன்வைக்கப்பட வில்லை.

அதேவேளை ,தற்போதைய அரசைப் பலவீனப்படுத்துவதற்கு சுதந்திரக்கட்சி ஒரு போதும் இடமளிக்காது. ஐக்கிய தேசியக்கட்சி தரப்புடன் இணைந்து பயணிக்கும் திட்டம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (சு-44)



# இந்தியாவைத் திருப்திப்படுத்த தேர்தலை நடத்தக்கூடாது

### சிங்கள கடும்போக்கு அமைப்பு அரசுக்கு எதிராகப் போர்க்கொடி

கொழும்பு, மார்ச் 24

**நாட்டைப் பிளவுபடுத்தும் நோக்கிலேயே மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு இந்தியாவும், மேற்குலகமும் ஜெனிவாத் தொடரில் வலியுறுத்தி வருகின்றன. மேற்படி அழுத்தங்களுக்கு அரசு அடிபணியக்கூடாது. மாறாக இந்தியாவையும், மேற்குலகையும் திருப்திப்படுத்துவதற்காக தேர்தல் நடத்தப்படுமானால் மிகப் பெரிய விளைவுகளை சந்திக்க வேண்டிய நிலை அரசுக்கு ஏற்படும்.**

இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய மாகாணசபை முறைமை என்பது நிர்வாக ரீதியில் வெள்ளை யானையாகும். நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு எஞ்சியுள்ள வழியாகவும் அது அமைந்துள்ளது. எனவே, அத்தகைய முறைமைக்கு அரசு உயிர் கொடுக்க முற்படக்கூடாது.

புதிய அரசமைப்பு ஊடாக அபிவிருத்தி சபைகள் உருவாக்கப்பட்டு, பிரிவினைவாதச் சிந்தனைகள், கோட்பாடுகளைத் தடைசெய்துவிட்டு வேண்டுமானால் அந்த அபிவிருத்தி சபைகளுக்கு அரசு தேர்தலை நடத்தலாம்.

அதற்கு முன்னர் நடத்தக்கூடாது. 13ஆவது திருத்தச்சட்டமும் எமது நாட்டுக்கு அவசியம் இல்லை, என்றார். (ஒ.44)

# தனித்து போட்டியிட விமல் தீர்மானம்?

கொழும்பு.மார்ச் 24

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், அமைச்சருமான விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, அடுத்த மாகாண சபைத் தேர்தலில் தனித்துக் களமிறங்கத் தீர்மானத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவராக நியமிக்க வேண்டும் என்று விமல் வீரவன்ச தெரிவித்த கருத்து, அரசுக்குள்ளும், பொதுஜன பெரமுனவுக்குள்ளும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டிடுவதற்கு, கட்சிக்குள் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச அதிரடியான அறிவிப்பை வெளியிடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (சு-இ)

# சீனி இறக்குமதி மோசடி; விவாதத்துக்கு இரு நாள்கள்

### எதிர்க்கட்சி சபையில் கோரிக்கை

கொழும்பு.மார்ச் 24

சீனி இறக்குமதியின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பில் நாடாளுமன்றில், இரு நாள்கள் விவாதம் அவசியம் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

சபாநாயகர் அறிவிப்பு, பொது மனுத்தாக்கல் மற்றும் வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று ஆகியவை உட்பட பிரதான சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் அமைச்சு தொடர்பான அறிவிப்பை விடுப்பதற்கு நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

சீனி இறக்குமதிக்கான வரி திட்டமிட்ட அடிப்படையில் குறைக்கப்பட்டதால், சீனி இறக்குமதியின்போது பெரும் மோசடி இடம்பெற்றுள்ளது என்று எதிர்க்கட்சிகளால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு, இராஜாங்க அமைச்சர் விரிவான பதில்களையும், விளக்கத்தையும் முன்வைத்தார்.

எதிரணிகளால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை நிராகரித்தார்.

பொய்யுரைப்பதே எதிரணிக்கு எஞ்சியுள்ள ஆயுதம் என்று விமர்சித்து, வரிக் கொள்கைகள் பற்றியும் விபரித்தார்.

இராஜாங்க அமைச்சரின் உரையின் பின்னர் கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சீனி விவகாரம் குறித்து இராஜாங்க அமைச்சர் நீண்டதொரு உரை நிகழ்த்தினார். அது தொடர்பில் ஆழமாக கலந்துரையாடுவதற்கு இரு நாள்கள் விவாதம் அவசியம். என்றார். (சு-44)

# ஒரு நாள் சேவை விரைவில் மீண்டும்

கொழும்பு.மார்ச் 24

ஒருநாள் சேவையின் கீழ் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்டம் விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொரோனாத் தொற்று அச்சம் காரணமாக ஒருநாள் சேவையின் கீழ் தேசிய அடையாள அட்டை வழங்கும் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

எனினும், அரச திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்கள் வழமைக்கு திரும்பி வருவதால், ஒரு நாள் சேவையின் கீழ் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான முயற்சி களை, ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

அதேவேளை தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளும் ஒருவர் பத்தரமுல்லையிலுள்ள தலைமைக் காரியாலயத்துக்கு அல்லது தென் மாகாண காரியாலயத்துக்கு வருகை தருவதாக இருந்தால், திகதி மற்றும் எண்ணை முன்பதிவு செய்வது கட்டாயமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-இ)


# நாலக கலுவேவ பதவி விலகினார்

கொழும்பு.மார்ச் 24

அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாலக கலுவேவ, தனிப்பட்ட காரணங்களுக்காக, தனது பதவியை விட்டு விலகி யுள்ளார் என்று வெகுஜன ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இவர் 2018 ஆம் ஆண்டு அரசியல் நெருக்கடி காலகட்டத்தில் குறித்த பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். (சு-இ)





சர்வதேச மனநலிவுடையோர் தினத்தை முன்னிட்டு வவுனியா ஓஹான் நிறுவன புதுவாழ்வுப் பூங்காவில் நேற்றுமுன்தினம் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. (ஐ-222)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




## நீதி எட்டாக்கனி தானா ?

எல்லோரும் பரபரப்போடு எதிர்பார்த்திருந்த ஜெனிவாப் பரீட்சைப் பெறுபேறு நேற்று வெளியாகிவிட்டது. மனித உரிமைகள் பேரவையில் வாக்களிக்கத் தகுதியான 47 நாடுகளில், 22 நாடுகள் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட பிரேரணையை ஆதரித்திருந்தன. 11 நாடுகள் இலங்கை மீதான தம் பாசத்தை வெளிப்படுத்தும் வகையில் பிரேரணையை எதிர்த்திருந்தன. இந்தியா உள்ளிட்ட 14 நாடுகள் மதில்மேல் பூனைகளாக நடுநிலை வகித்திருந்தன.

வெளிப்படையாகப் பார்க்கையில் இது இலங்கைக்கு உலக அரங்கில் கிடைத்த மற்றொரு தோல்வியே. பிரிட்டன் தலைமையிலான நாடுகளால் தனக்கெதிராகக் கொண்டுவரப்படும் பிரேரணையை சீனாவின் துணையோடு தோற்கடித்து விடலாம் என இலங்கை இறுதிவரை உறுதியாக நம்பியது. அதனாலேயே ஐ.நா. மனித உரிமைகள் பேரவையைச் சீண்டும் வகையிலான கருத்தை இலங்கை அரசாங்கத் தரப்பு தொடர்ச்சியாக வெளியிட்டும் வந்தது. ஆனால் இறுதியில் நேற்றைக்கு உலக அரங்கில் இலங்கை மண்கவ்வி விட்டது. என்றாலும் விழுந்தும் மீசையில் மண் படவில்லை என்ற கதையாக, பிரேரணைக்கு எதிராகவும், நடுநிலையாககவும் நின்ற நாடுகளின் எண்ணிக்கையைக் கூட்டி, அதாவது 47 நாடுகளில் 25 நாடுகள் தங்கள் பக்கமே நின்றன என்றும், அதனால் பெரும்பான்மை தங்கள் பக்கமே என்றும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நேற்று இரவோடிரவாக கூறியிருக்கிறார். ஆனால் மாறாக, நடுநிலை வகித்த நாடுகளை, பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகள் தங்கள் பக்கம் கூட்டிச்சொன்னால் கணக்கு இடிக்குமே என்று அமைச்சர் கொஞ்சமேனும் யோசிக்கவில்லை.

என்னதான் பிரேரணை வென்றாலும், மறுபுறத்தில் ஈழத்தமிழர்களுக்கும் தோல்வியே. ஏனெனில் வழக்கம் போல பொறுப்புக்கூறல் இலங்கை அரசின் வசமே கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த அரசு போர்க் குற்றம் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டதோ, அதே அரசிடமே அதற்கான நீதியை வழங்கும்படி கோரப்பட்டுள்ளது. கொலை செய்தவனே நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் வேடிக்கை. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டுமென்று 2015இலும் இதே ஐ.நா மனித உரிமைகள் பேரவைப் பிரேரணையில் கூறப்பட்டிருந்தது. இப்போது அதை மென்மையாக்கி, ஐ.நா. சாசனப்படி அமைந்தாலே போதுமென்ற விட்டுக் கொடுப்பும் இலங்கைக்குச் செய்யப்பட்டிருக்கிறது.

இவற்றையெல்லாம் விட முக்கியமானது சாட்சியங்களைத் திரட்டுவது தொடர்பானது. அதாவது போர்க் குற்றம் தொடர்பில் சாட்சியங்களைத் திரட்டுவதனூடாக இலங்கையில் போர்க்குற்றம் நிகழ்ந்ததை உறுதிப்படுத்துவது தொடர்பில் இந்தப் பிரேரணை வலியுறுத்தியுள்ளது. ஆனால் பலமுறை இலங்கையில் போர்க்குற்றம் நிகழ்ந்தமைக்கான புகைப்படங்கள், காணொலிகள், குரல் வழிப் பதிவுகள், பாதிக்கப்பட்டவர்களின் நேரடி வாக்குமூலங்கள், எழுத்துமூலமான ஆதாரங்கள் என பல்லாயிரக்கணக்கான சாட்சியங்கள் ஐ.நா. சபையிடம் பல்வேறு அமைப்புகளும் வழங்கியிருந்தன. ஆனால் அவையெல்லாவற்றையும் மறந்துவிட்டது போல நடிக்கும், ஐ.நா.மனித உரிமைகள் சபை மறுபடியும் முதலில் இருந்தே சாட்சியங்களைத் திரட்டுவது பற்றிச் சொல்லி நிற்கின்றது. மீண்டும் தமிழர்களின் நீதிக்கான குரல் தொடக்கப் புள்ளிக்கே சறுக்கிச் சென்றுள்ளது. எமக்கான நீதிக்காக தனியே ஐ.நாவின் கதவை மட்டும் தட்டிக் கொண்டிருப்பதில் எவ்வித பயனுமில்லை என்பதை மீண்டுமொருமுறை ஜெனிவா தெளிவாக உணர்த்தியிருக்கிறது. நீதிக்கான பயணத்தில் புதிய வழிகளைத் தமிழர்கள் கண்டடையத் தவறின், எமக்கான நீதி என்றைக்குமே எட்டாக்கனியாகவே மாறிவிடும்.



# ஆங்கில ஆசிரியர்களாக டிப்ளோமா பட்டதாரிகள்!

### நியமனக் கடிதங்கள் நேற்று வழங்கி வைப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 24**

**வட மாகாணத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கான ஆங்கில ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வும், வடமாகாண விவசாய அமைச்சுக்கு கீழான விவசாய போதனாசிரியர்கள், விவசாய தொழில்நுட்பவியலாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வும் யாழ்பாணம் மத்திய கல்லூரி 'தந்தை செல்வா' மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.**

வடக்கு மாகாணத்தில் முதன் முறையாக டிப்ளோமா பட்டதாரிகளுக்கு ஆங்கில ஆசிரியர்கள் நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று நிகழ்வில் கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஆங்கில, கணித, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆசிரியர்களுடைய ஆளணிப் பற்றாக்குறை வடமாகாண கல்வித் தரத்திலும் கல்வி நிலையிலும் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளன. அதனை நிவர்த்தி செய்யும் முதல் படியாக இந்த ஆங்கில ஆசிரியர் நியமனம் அமையும். இனிவரும் காலங்களில் அத்தனை கிராமப்புறப் பாடசாலைகளிலும் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஆசிரியர்கள் தேவைக்கு ஏற்ப, தகுதிகளின் அடிப்படையில் நியமிக்கபடவுள்ளதால் கல்விசார் செயற்பாடுகள் சரியாக புகட்டப்பட வேண்டும். அத்துடன் மாணவர்கள் பல்கலைக் கழகங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் அந்தந்த துறைகளில் பயிற்றுவிக்கப்பட வேண்டும். சர்வதேச தரத்திலான கல்வியை மாணவர்கள் பெற்று கொள்ள வேண்டும்.

இலங்கையில் பாரம்பரிய முறையிலான உற்பத்தி முறைகளே தற்போதும் காணப்பட்டு வருவதால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் உற்பத்தி விலை அதிகமாக காணப்படுகிறது. அதுவே பொருள்கள் இறக்குமதி செய்யக் காரணமாகிறது. இந்த நிலையை மாற்றி நவீன தொழில்நுட்ப முறைகளை விவசாயிகள் மற்றும் கால்நடை உற்பத்தியாளர்களுக்கு பயிற்றுவித்து நவீன தொழில்நுட்ப முறைகளின் மூலம் உற்பத்திச் செலவைக் குறைத்து உற்பத்தித் துறையிலே ஒரு புதிய புரட்சியை கொண்டு வர வேண்டும் எனும் நோக்கத்துடன் தான் இந்த நியமனங்கள் வழங்கப்படுகின்றன - என்றார். (ப)



## முகக்கவச இயந்திரம் சீனாவால் நன்கொடை

கொழும்பு, மார்ச் 24

இலங்கைக்கு தானியங்கி முகக் கவச உற்பத்தி இயந்திரங்கள், சீனாவால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

சீனாவின் டி.எம்.ஐ. தொழில்துறை குழுமத்தால் குறித்த இயந்திரங்கள் வழங்கப்பட்டன என்று இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

சுமார் 550 மில்லியன் ரூபா பெறுமதியான இயந்திரங்கள் வழங்கப்பட்டன என்றும் தூதரகம் தெரிவித்துள்ளது. (க-இ)

## காணாமல் ஆக்கப்பட்ட மகனை தேடி அலைந்த தந்தை சாவு!

வவுனியா,மார்ச் 24



வவுனியாவில் காணாமல் போன தனது மகனைத் தேடி போராடி வந்த தந்தை ஒருவர் சுகவீனம் காரணமாக நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். வவுனியா விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த கனகையா றஞ்சனாமூர்த்தி (வயது-63)என்ற தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவரது மகன் செல்வநாதன் (வயது-40) கடந்த 2007ஆம் ஆண்டு தந்தைக்கு உணவு கொண்டுசெல்லும் போது வவுனியாவில் வைத்து கடத்தப்பட்டிருந்தார்.

அவரைத்தேடி வவுனியாவில் ஆயிரத்து 495 நாள்களாக முன்னெடுக்கப்பட்டு வந்த சுழற்சிமுறை உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு தனது மகனை கண்டுபிடித்துத் தருமாறு போராடியிருந்தார். இந்த நிலையில் தனது மகனை காணாமலேயே அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-110)

# ஏப்.21. தாக்குதல் அறிக்கை; யோசனைகள் செயற்படுத்தப்படும்

## கத்தோலிக்கர்கள் அச்சமுற தேவையில்லை என்கிறார் ஜோண்ஸ்டன்

**கொழும்பு,மார்ச் 24**

**ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில், ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் அனைத்தும் முழுமையாகச் செயற்படுத்தப்படும். இந்த விடயத்தில் கத்தோலிக்க மக்கள் சந்தேகம் கொள்வது அநாவசியமானது.**

இவ்வாறு நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் ஜோண்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ராகம பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆணைக்குழுவின் அறிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை சட்டத்தின் முன் முன்னிலைப்படுத்துங்கள் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆணைக்குழுவின் அறிக்கை முழுமையாக சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்க வேண்டிய அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை சட்டமா அதிபரே தீர்மானிப்பார். இந்த விசாரணை அறிக்கையை விமர்சித்து எதிர்த்தரப்பினர் நாடாளுமன்றிலும், பொது மேடைகளிலும் அரசியல் இலாபம் தேடிக் கொள்ள முயற்சிக்கின்றனர்.

அறிக்கையில் குற்றவாளிகள் எனச் சந்தேகிக்கப்பட்டு பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை அரசுக்குக் கிடையாது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பாதுகாத்துக் கொள்ள மக்களுக்கு துரோகமிழைக்க முடியாது. போலியான குற்றச்சாட்டுக்களால் அரசு முன்னெடுக்கும் அபிவிருத்திப் பணிகளைத் தடுக்க முடியாது. என்றார். (க-இ)

### நாவல் வெளியீட்டு விழா

கொழும்பு,மார்ச் 24

ரூபன் சிவா தொகுப்பில் வெளிவந்த முதல் தமிழ் நாவலான 'உறவுகள் தொடர்கதை' நாவலின் வெளியீட்டு விழா 'சூம்' வாயிலாக எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க வினோதன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வைத்திய கலாநிதி தி. ஞானசேகரன் தலைமையில் இந்த வெளியீட்டு விழா இடம்பெறவுள்ளது. உலகத்தில் பரந்து வாழும் இருபது தமிழ்ப் படைப்பாளிகள் இணைந்து இந்த நாவலை எழுதியுள்ளனர். இந்த வெளியீட்டு விழாவில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ற)

# நெடுந்தீவு மக்களுக்கு வழங்கப்பட்டது பஸ்

## நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றம்



நெடுந்தீவு, மார்ச் 24

நெடுந்தீவு மக்களின் நீண்டநாள் கோரிக்கைக்கு அமைவாக இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் நெடுந்தீவு பிரதேச செயலாளர் சத்தியசோதியிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

சிறிலங்கா பொதுஜன பெரமுன முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் த.ரஜீவ்வால் இந்த பஸ் கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவின் வடக்கு மாகாண இணைப்பாளர், வனப் பாதுகாப்பு அமைச்சரின் வடக்கு மாகாண இணைப்பாளர், தென்மராட்சிப் பிரதேச அமைப்பாளர், வலிகாமம் கிழக்குப் பிரதேச அமைப்பாளர் மற்றும் கிராம மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இங்குள்ள பஸ் அடிக்கடி பழுதடைகின்றது என்று மக்கள் மேற்கொண்ட முறைப்பாட்டை அடுத்து புதிய பஸ் வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# கோத்தாபய அரசுக்கு இரட்டைக் கொள்கை

## வெட்கப்பட வேண்டும் என்கிறது ஐ.ம.ச.

கொழும்பு, மார்ச் 24

முஸ்லிம் நாடுகளை வளைத்துப் போடுவதற்கு ஒரு கொள்கையையும், தேர்தலில் வாக்குகளைச் சுருட்டுவதற்கு இன்னொரு கொள்கையையும் முன்னெடுக்கும் கோத்தாபய அரசின் இரட்டைக் கொள்கைப் போக்கு வெட்கப்பட வேண்டிய ஒன்றாகும். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்ய முடியாது என்று பிடிவாதமாக இருந்து வந்த அரசு, ஜெனிவாவில் அந்த விடயத்தை யும் உள்ளடக்கி தீர்மான வரைவு முன்வைக்கப்பட்டதும் சடலங்களை அடக்கம் செய்வதற்கு இணங்கியது.

மாகாணசபைச் சட்டத்தில் திருத்தம் செய்யாமல் தேர்தலை நடத்த முடியாது. புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்ட பின்னரே மாகாணசபைத் தேர்தலை நடத்தலாம் என்றெல்லாம் கதையளந்த கோத்தாபய அரசு, ஜெனிவாவில் இந்தியாவைச் சமாளிப்பதற்காக மாகாணசபைத் தேர்தலை துரிதமாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அரசின் இதுபோன்ற இரட்டைக் கொள்கைகள் வெட்கப்படவேண்டியவை. ஜெனிவாவில் ஆதரவைப் பெற்றுக் கொள்ள ஓர் நிலைப்பாட்டையும், இலங்கையில் தேர்தலில் வாக்குகளைத் திரட்ட இன்னொரு கொள்கையையும் கடைப்பிடிக்கும் கோத்தா அரசின் நிலைப்பாடு வெட்கத்துக்குரியதே, என்றார். (ஓ.இ)

# சுறா துடுப்புக்கள் 250 கிலோ மீட்பு

கொழும்பு,மார்ச் 24

சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியான, 250 கிலோ கிராம் எடையுடைய, உலர்ந்த சுறாத் துடுப்புக்கள் இலங்கை சுங்கப் பிரிவு அதிகாரிகளால் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டன.

சட்ட விரோதமான முறையில் ஹொங்கொங்குக்கு ஏற்றுமதி செய்வதற்காக கொழும்பு துறைமுகத்தின் சுங்க ஏற்றுமதிப் பிரிவுக்கு இவை கொண்டுவரப்பட்டன.

இதற்காக 300 க்கும் மேற்பட்ட சுறா மீன்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று சுங்க அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர்.

ஒரு கிலோ சுறாத் துடுப்புக்களை 400 அமெரிக்க டொலரையும் விட அதிக விலைக்கு விற்பனை செய்ய முடியும். சீனர்கள் இந்த சுறாத் துடுப்புக்களை ஆடம்பர உணவு தயாரிக்கப் பயன்படுத்துகின்றனர்.

ஏற்றுமதிக்காக சுறாத் துடுப்புக்களை கொழும்பு துறைமுகத்துக்கு எடுத்து வந்த, நீர்கொழும்பைச் சேர்ந்த ஏற்றுமதி நிறுவனத்தின் பணிப்பாளரிடம், இது தொடர்பில் அறிக்கை கோரப்பட்டுள்ளது. (க-இ)

# தூதுவர் – தினேஷ் சந்திப்பு

கொழும்பு, மார்ச் 24

வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன இலங்கையில் உள்ள ஆப்கானிஸ்தான் தூதுவர் அஷ்ரப் ஹைதரியை இருதரப்புக் கலந்துரையாடல்களுக்காக சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்

ஆப்கானிஸ்தானில் நடந்து வரும் சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பில் வெளிநாட்டு அமைச்சர் குணவர்தனவுக்கு தூதுவர் ஹைதரி விளக்கமளித்தார். உடனடி நடவடிக்கையாக, இலங்கை அமைச்சரவை ஏற்கனவே ஒப்புதல் அளித்த உத்தேச புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்த மாதம் நிறைவு செய்து வெளிநாட்டு



அலுவலக அரசியல் ஆலோசனைகளைத் தொடங்குவதற்கு அமைச்சர் குணவர்தன மற்றும் தூதுவர் ஹைதரி ஆகியோர் ஒப்புக் கொண்டனர். (ப)

# இரட்டைத் தீவுடன் இலங்கை உறவு

கொழும்பு,மார்ச் 24

கரிபீயனில் ஒரு சிறிய இரட்டைத் தீவான செயிண்ட் கிட்ஸ் மற்றும் நெவிஸுடன் இலங்கை இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மொஹான் பீரிஸ் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் செயிண்ட் கிட்ஸ் நெவிஸிக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி இயன் மெக்டொனால்ட் லிபர்ட் ஆகியோர் அதற்கான கூட்டு அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர்.

இந்த மாதத்துக்குள் இலங்கை முறையான இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திய இரண்டாவது நாடு இது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை முன்னதாக லிச்சென்ஸ்டைனுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# பேருந்து நிலையக் கடைத் தொகுதியை பிரதேச சபையிடம் கையளிக்கவேண்டும்

## கரைதுறைப்பற்று சபை உறுப்பினர் வலியுறுத்து

**முல்லைத்தீவு, மார்ச் 24**

**முல்லைத்தீவு நகரில் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் உள்ள பேருந்து தரிப்பிட நிலையத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் அமைக்கப்பட்ட 13 கடைத்தொகுதிகளும் பிரதேச சபையிடம் கையளிக்கப்பட வேண்டும் என்று கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் க.விஜிந்தன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;
முல்லைத்தீவு நகரில் கரைதுறைப் பற்று பிரதேச சபையின் ஆளுகை யின் கீழ் உள்ள பேருந்து தரிப்பிட நிலையத்தில் நகர அபிவிருத்தி அதி கார சபையால் 13 கடைத் தொகுதிகள் கட்டப்பட்டு பிரதேச சபையிடம் கைய ளிக்கப்படவுள்ளன என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. குறித்த கட்டடங் கள் தொடர்பில் கடந்த 15 ஆம் திகதி கொழும்பில் இருந்து வந்த நகர அபிவிருத்தி அதிகார சபையால் கேள் விகோரல் அறிவிப்பு விடுக்கப் பட் டுள்ளது.

பிரதேச சபைக்கு வழங்கப்பட இருந்த கடைத்தொகுதி மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச சபை ஆகியவற்றுக் குத் தெரியாத நிலையில் கேள்விகோ ரப்பட்டுள்ளது.

இந்தக் கேள்வி கோரலை உடனடி யாக நிறுத்த வேண்டும். இது தொடர் பில் ஆளுநர், பிரதம செயலாளர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கள் ஆகியோருக்கு தெரியப்படுத்தி யுள்ளோம். இதை பிரதேச சபையிடம் ஒப்படைத்து பிரதேசத்துக்கு உட்பட்ட மக்களுக்கு பயன் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் சட்ட நடவடிக்கை எடுப் போம் - என்றார். (ஐ-19)

# நெஞ்சு வலியால் மூதாட்டி சாவு

சாவகச்சேரி, மார்ச் 24

மிருசுவிலைச் சேர்ந்த மூதாட்டி ஒருவர் நெஞ்சுவலி ஏற்பட்டு நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

இராசநாயகம் ராணி என்பவரே இவ் வாறு உயிரிழந்துள்ளார்.

அவருக்கு நேற்றுமுன்தினம் இரவு நெஞ்சுவலி ஏற்பட்டதை அடுத்து, அவரை சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு சென்று பரிசோதனைக்குட் படுத்திய போது, அவர் ஏற்கனவே உயி ரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு, சாவ கச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (ற-9)

# பிரிவுபசார நிகழ்வு

சாவகச்சேரி, மார்ச் 24

ஓய்வு பெற்ற சமூக, விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் சி.நாகராஜாவுக்கு பிரிவுபசார நிகழ்வு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வை தென்மராட்சி கல்வி வலய சமூக, விஞ்ஞான ஆசிரியர்கள் நடத்தவுள் ளனர்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியர் பா.செவ்வேள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு, முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் கலந்துகொள்ளவுள்ளார். (ற-9)



கிளிநொச்சி மகாதேவ சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி கடந்த ஞாயிற் றுக் கிழமை நடைபெற்றது. (ஐ-222)

முல்லைத்தீவு

# கலைமகள் வித்தியாலயத்தின் கட்டடங்களை பூர்த்தி செய்க!

## பெற்றோர் கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 24

முல்லைத்தீவு முள்ளியவளை கலைமகள் வித்தியா லயத்தில் கட்டடங்கள் பூர்த்தி செய்யப்படாது அவரை குறையாகக் காணப்படுகின்றன. இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி இந்தக் கட்டடங் களை விரைவில் பூர்த்திசெய்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பெற்றோர் கோரிக்கை விடுகின்றனர்.

இப் பாடசாலையில் தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை யான வகுப்புகளில் 730 மாணவர்கள் கல்வி கற் கின்றனர். இப் பாடசாலையில் காணப்படுகின்ற இட நெருக்கடிக்குத் தீர்வுகாண தொடங்கப்பட்ட கட்டட வேலைகளே நிவர்த்தி செய்யப்படாது காணப்படுகின் றன.

இது தொடர்பாக கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பாடசா லையில் கட்டடங்கள் பூர்த்தி செய்யப்படாது காணப் படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்ட போது கூட்டத்தில் இணைத் தலைவர்களில் ஒருவரான வடக்கு மாகாண ஆளுநர் ஜி.எம்.சாள்ஸ் தெரிவித்ததாவது,

இக்கட்டடங்கள் கடந்த ஆட்சிக் காலத்தில் இந்திய அரசின் உதவியுடன் தொடங்கப்பட்டவை. இது தொடர் பாக இந்தியத் தூதுவர் அலுவலகத்துடன் பேச வேண் டும்.

மாகாண நிதியில் இருந்து இந்தக் கட்டடங்கள் அமைக்கப்பட்டிருந்தால் ஏதாவது முயற்சிகள் செய் திருக்கலாம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை மத்திய அரசின் புனர்வாழ்வு அமைச்சால் வழங்கப்பட்ட நிதியில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் இப் பாடசாலையில் மற்றொரு கட்டடப் பணிகளைத் தொடங்கி அதுவும் அத்திபாரத் துடன் உள்ளது.

இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்தவர்கள் கட்டடத்தை முழுமைப்படுத்துவதற்கு நிதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பது பெற்றோர்களின் வேண்டு கோளாக உள்ளது. (ற-13)






# நுண்கடனுக்கு எதிராக வவுனியாவில் சுவரொட்டிகள்

வவுனியா,மார்ச் 24

'கொலைகார நுண்கடன் பொறிக்கு' எதிராக வவுனியா நகரப்பகுதி எங் கும் பரவலாக சுவரொட்டிகள் ஒட்டப் பட்டுள்ளன.

இலங்கையில் சுமார் 24 லட்சம் பேர் நுண்கடனால் பாதிக்கப்பட்டுள்ளதை அடுத்து இதற்குத் தீர்வு வழங்கக் கோரி கடந்த எட்டாம் திகதி பொலநறு வையில் ஆரம்பிக்கப்பட்ட போராட் டம் இன்றுடன் 16 ஆவது நாள்களாக சுழற்சி முறையில் இடம்பெற்று வரு கின்றது.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வவுனியா பஜார் வீதி, நகரசபை வீதி, இறம்பைக் குளம் மற்றும் குருமன்காடு போன்ற நகர்ப்பகுதிகளில் 'கொலைகார நுண் கடன் பொறிக்கு எதிரான போராட்டத் தில் இணைந்து கொள்ளுங்கள்' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட சுவ ரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (ஐ-110)

# மன்னார் பியர் ரயில் கடவையை டிஜிற்றல் முறையில் அமையுங்கள்

## *அருட்பணி அகஸ்ரி புஸ்பராஜ் அடிகளார் வேண்டுகோள்*

தலைமன்னாரில் மிகவும் முக்கி யத்துவம் கொண்ட ரயில்வே கடவையான பியர் ஐந்து சந்தி யில் உள்ள ரயில் கடவையை டிஜிற்றல் முறையில் அமைப்ப தற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அருட் பணி அகஸ்ரி புஸ்பராஜ் அடிக ளார் தெரிவித்துள்ளார்.

தலைமன்னார் பியரில் கடந்த வாரம் இடம்பெற்ற ரயில் மற்றும் பேருந்து விபத்தைக் கண்டித்து இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன் றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த விபத்து நடந்த பகுதி ஐந்து வீதிகள் சந்திக்கும் ஒரு சந்திப் பகுதியாகும். அங்குள்ள ரயில்வே கடவையைக் கடப்பதற்கு ஒரே நேரத்தில் ஐந்து வீதிகளில் இருந் தும் வாகனங்கள் வரும் நிலையே இந்தக்கடவையில்காணப்படுகிறது. இது ஒரு ஆபத்தான பகுதியென எம்மால் கருதப்படுகின்றது. எனவே இந்தக் கடவையை ஒரு முக்கியமான கடவையாகக் கருதி இதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என நாம் சம்பந்தப் பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கின்றோம். இலங்கையின் பல மாவட்டங்களிலிருந்து மன் னார் பகுதிக்கு வரும் பேருந்து கள் இறுதியாக வந்து சேர்கின்ற போது, தலைமன்னார் பியரில் உள்ள இந்தக் கடவையைக் கடந்து தான் வரவேண்டும். அதுமட்டு மல்ல தலைமன்னார் ஒரு சுற் றுலா மையமாகவும் அமைந் துள்ளது. சுற்றுலா மையமாக அமைந்துள்ள இந்த இடத்தில் இலங்கையின் சகல பகுதிகளிலி ருந்தும் சுற்றுலாவுக்கு மக்கள் வருகின்றபொழுது அவர்களும் இந்த ரயில்வே கடவையை கடந்தே செல்லவேண்டும். இவ் வாறு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கடவையில் இரண்டு தடிகள் தான் காணப்படுகின்றன. இந்தத் தடிகளை மூடித் தடுத்தாலும் அதற்குள்ளாக எவரும் சென்று வரும் வாய்ப்புக்கள் நிறையக் காணப்படுகின்றன. எனவே ஏனைய முக்கிய இடங்களிலுள்ள டிஜிற்றல் முறையிலான கடவை கள் போல சம்பந்தப்பட்ட அதிகா ரிகள் இந்தக் கோரிக்கையை மிக அவதானமாக கருத்திற்கொண்டு இந்தக் கடவையை டிஜிற்றல் முறை யில் தரம் உள்ள ரயில் கடவை யாக அமைக்க நடவடிக்கை எடுக் கவேண்டும் - என்றார். (ப-60)

# பதிவு செய்யப்படாத சட்ட விரோத தொழில் முகவருக்கு பணம் செலுத்துதல்
# நேற்றைய கதையின் தொடர்ச்சி
## அங்கம் 3

நீங்கள் வேலைவாய்ப்பிற்காக அல்லது நிரந்தரமாக வதிவதற்காக வேண்டி வெளிநாட்டுக்குச்செல்ல விரும்புகிறீர்களா. தயவுகூர்ந்து உங்களினதும் உங்களின் நெருங்கிய உறவுகளினதும் பாதுகாப்பை பற்றி முதலில் அக்கறை எடுத்துக்கொள்ளுங்கள். வெளிநாட்டுக்கு செல்ல விரும்பினால் எப்பொழுதும் பாதுகாப்பான பாதையை தெரிவு செய்யுங்கள். இந்த சித்திரக்கதையில் ராஜாவுக்கு என்ன நிகழ்கின்றது என்பதை தொடர்ந்து அவதானிக்கும் போது பாது காப்பான புலம்பெயர்வை பற்றிய உங்களின் பார்வைக்கோணத்தை அதிகரித்துக்கொள்ள முடியும். **இப்பத்திரிகையில் 7 நாட்களுக்கு தொடராக பிரசுரிக் கப்படவிருக்கும் சித்திரக்கதையின் 3ஆவது அங்கம் இதுவாகும். ஒவ்வொரு அங்கத்தின் இறுதியிலும் பரிசுகளை பெறும் வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ளது.**

**மனித கடத்தல்காரர்கள் பற்றி விழிப்புடனிருங்கள்! பாதுகாப்பான வெளிநாடு செல்லும் பாதையை தெரிவு செய்வதற்கு IOM நிறுவனத்தின் நேரடி இலக்கம் 0774410086 இற்கு அழையுங்கள்.**



அர்னோல்டை நம்பிய ராஜா பெற்றோரின் எதிர்ப்புக்கு மத்தியில் அவர்களின் வீட்டை அடகு வைத்து பிரயாணத்திற்காக பெருமளவு பணத்தை ஏற்பாடு செய்தார்.



தகுதி மற்றும் தொழில் வீசா இன்றி தனது பயண ஏற்பாடுகளை செய்வதற்காக வேண்டி அர்னோல்டுக்கு ராஜா 20 இலட்சம் ரூபாய்களை கட்டணமாக செலுத்தினார்.



பணக்கொடுப்பனவிற்கான எந்த ஆவணமும் அர்னோல்டிடமிருந்து ராஜாவுக்கு கிடைக்கவில்லை.



அர்னோல்டிடம் அவரது தொலைபேசி இலக்கத்தை ராஜா கேட்ட போதும்



தான் அடிக்கடி வெளிநாடு செல்வதால் தன்னிடம் வட்சப் வைபர் மட்டுமே உள்ளதாகவும்



அவற்றினூடாக மட்டுமே கதைக்குமாறும் அர்னோல்ட் ராஜாவுக்கு கூறினார்.

**வினா : எந்தவிதமான ஆவணங்களோ பற்றுச்சீட்டோ இல்லாது தொழில் முகவராக தோன்றும் ஒருவரிடம் பணத்தை கொடுப்பது பொருத்தமா?**



**விடை 1: இல்லை. பணம் கொடுக்கலுக்கான எந்த அத்தாட்சியுமின்றி அல்லது தொழில் முகவர் பதிவு செய்யப்பட்டவரா என்பதை உறுதிப்படுத்தாமல் பணத்தை செலுத்துவது தவறாகும்.**



**விடை 2: ஆம். தொழில் முகவர் உங்களுக்கு தெரிந்த அல்லது உங்களுக்கு தெரிந்தவருடன் தொடர்புபட்டவராயின் அது பிரச்சினைக்குரிய விடயமல்ல.**

மேலுள்ள கேள்விக்கு சரியான விடையை தெரிவு செய்வதன் மூலம் நாளாந்த பரிசுக்குலுக்களில் பரிசினை வெல்லுங்கள். உங்களின் விடையை அல்லது விடைகளை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுடன் IOM நிறுவனத்தின் 0774410086 என்ற நேரடி இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.
விடைகளை SMS அல்லது வட்சப் அல்லது வைபர் மூலமாக 0774410086 என்ற இலக்கத்திற்கு அனுப்ப முடியும். S3 என்ற குறியீட்டை தவறாமல் குறிப்பிடவும்.

**S3விடை எண்(கள்), பிரசுரமான திகதி, பத்திரிகையின் பெயர்**
**பால்: ஆண் / பெண், வயது, ஊர் – மாவட்டத்தின் பெயர்**
**உதாரணம்: S3 3,4 22.03.2021 – உதயன், ஆண் 20 சிலாபம் – புத்தளம் மாவட்டம்.**

**விடைகள் 07.04.2021 திகதி வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.**

**பாதுகாப்பான மற்றும் முறையான புலம்பெயர்வு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இச்சித்திரக்கதை IOM நிறுவனத்தினால் பிரசுரிக்கப்பட்டுள்ளது.**

## புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம் (IOM)
9ஆம் மாடி, IBSL கட்டிடம்,
80A, எல்விடிகலை வீதி, பொறல்லை, கொழும்பு 8.

# நிவாரணம் என்ற பெயரில் அரசு இழிகரமான செயல்

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

**கொழும்பு,மார்ச் 24**

**அரசு பண்டிகைக் காலங்களில் நிவாரணப்பொதி என்ற போர்வையில், மக்களுக்குப் பாவனைக்குதவாத பொருள்களைப் பகிர்ந்தளிக்கின்றது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசின் இத்தகைய மோசமான செயற்பாடுகளை விரைவில் வெளிப்படுத்துவோம்.**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி எச்சரித்துள்ளது.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்ததாவது,

எதிர்வரும் வாரங்களில் தமிழ் சிங்கள சித்திரைப்புத்தாண்டுப் பண்டிகை கொண்டாடப்படவுள்ளது. எனினும் இம்முறை மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளமையால், அதனை கொண்டாட முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். அத்தியாவசியப் பொருள்களின் விலை பெருமளவில் அதிகரித்துள்ளது. சில பொருள்களின் நிர்ணய விலை தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படுகின்ற போதிலும், அவை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

புத்தாண்டை முன்னிட்டு சதொச விற்பனை நிலையத்தில் பொருள்களை கொள்வனவு செய்வதற்கு ஏப்ரல் முதலாம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை நிவாரணம் வழங்கப்படும் என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் இவ்வாறு நிவாரணம் வழங்குவதாகக் கூறி மக்களுக்கு பாவனைக்குதவாத பொருள்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இதற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் இடமளிக்காது - என்றார். (க-இ)

# 'ஸ்பூட்னிக் வி' தடுப்பூசி ஒரு டோஸ் 9.95 டொலர்

கொழும்பு,மார்ச் 24

ரஷ்ய தயாரிப்பான 'ஸ்பூட்னிக் வி' கொவிட்-19 தடுப்பூசி, ஒரு டோஸுக்கு 9.95 அமெரிக்க டொலரை வழங்க இலங்கை ஒப்புக் கொண்டுள்ளது.

6.5 மில்லியன் தடுப்பூசிகளை ரஷ்யாவிடமிருந்து வாங்குவதற்கான உத்தரவு விரைவில் வழங்கப்படும் என்று ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட தடுப்பூசி விலை நிர்ணயம் தொடர்பான குழு, ரஷ்யாவின் கமலேயா ஆராய்ச்சி நிறுவனத்துடன் பேச்சு நடத்தியுள்ளது. தடுப்பூசி ஒரு டோஸை 9.95 அமெரிக்க டொலருக்கு வழங்க ரஷ்யா ஒப்புக் கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு நபருக்கும் அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசிக்கு ஒத்த இரண்டு 'ஸ்புட்னிக் வி' தடுப்பூசி டோஸ்கள் தேவைப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-இ)

# இயற்கைக்கு எதிரான அரசென ஜனாதிபதி மீது விமர்சனமாம்

## பொங்கினார் அங்கஜன் எம்.பி.

கிளிநொச்சி, மார்ச் 24

வடக்கில் உள்ள ஆறுகள் மற்றும் நதிகளைப் பாதுகாப்பதற்கும் அரசு திட்டங்களை முன்னெடுத்துள்ளது. எனினும் அரசை திட்டமிட்டு குறை கூற வேண்டும் என்பதற்காக இயற்கைக்கு குந்தகம் விளைவிக்கும் அரசாகக் காண்பிக்க சிலர் முயல்கின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆறுகளைப் பாதுகாப்போம் தேசிய வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

யாழ் மாவட்டம் நதிகளே இல்லாத ஒரு பிரதேசம். ஆனால் வடக்கு மாகாணத்தில் ஏனைய மாவட்டங்களில் ஆறுகள், நதிகள் காணப்படுகின்றன. இவை இப்போது உள்ள அரசால் பாதுகாக்கப்படுகின்றன. இந்த அரசாங்கத்தை திட்டமிட்டு குறை கூற வேண்டும் என்பதற்காக இன்றைய அரசை இயற்கைக்கு குந்தகம் விளைவிக்கும் அரசாகக் காண்பிக்க சிலர் முயல்கின்றனர்.

எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் பொது மக்கள் விவசாயம் செய்த, மற்றும் செய்யக்கூடிய காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதியிடம் நான் கோரிக்கை விடுக்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப-6)

# என்னை விமர்சிப்போர் விரைவில் போற்றுவர்

## கோத்தா நம்பிக்கை



கொழும்பு,மார்ச் 24

சுற்றாடல் என்பது மக்களுக்கு வாழ்வதற்கு ஏற்றவகையில் அமைய வேண்டும். அதனால் சுற்றாடலை மீள் நிர்மாணம் செய்து அவற்றை அழகுபடுத்தினோம். ஆனால் நான் மட்டுமே சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றேன் என்று சமூக ஊடகங்களில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் நான் ஏற்படுத்திய மாற்றங்களை என்னை ஆதரிக்கும் மக்கள் நன்கு அறிவர். அவர்களுக்குக் கிடைக்கும் நன்மைகளைப் புரிந்து கொள்வர்.

இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

'நதிகளைப் பாதுகாப்போம்' என்ற தொனிப்பொருளில் தேசிய வேலைத்திட்டம், மாணிக்க கங்கைக்கு அருகில் றுஹுணு கதிர்காம புனித தலத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

இன்று சுற்றாடல் பாதுகாப்பு பெருமளவானோர் மத்தியில் பிரதான பேசுபொருளாகியுள்ளது. இதனூடாக போலியான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. சமூக ஊடகங்கள் ஊடாக போலி பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக நான் செயற்பட்ட போது, சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளேன். இதனை மக்கள் நன்கு அறிவார்கள்.

மக்களால் இழைக்கப்படும் தவறுகளாலேயே பணத்தைச் செலவிட்டு இத்தகைய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியேற்பட்டுள்ளது.

தற்போது எம்மை அதிகளவில் விமர்சிக்கும் கொழும்பு வாழ் மக்களுக்கு கொழும்பில் எவ்வாறு குப்பை மலைகள் குவிந்திருந்தன என்பது நன்றாகத் தெரியும். எனினும் நாம் குறுகிய காலத்தில் அவற்றை அப்புறப்படுத்தி, அழகான சூழலை உருவாக்கினோம். கொழும்பில் முறையற்ற வகையில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள் , பதுங்கு குழிகள், நிலத்தை பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட முள்வேலிகள், சுவர்கள் என்பவற்றால் கட்டட (கொங்ரீட்) வனங்கள் உருவாகியிருந்தன. அன்று காணப்பட்ட அநாகரிகமான நிலைமையை எம்மால் மாற்றியமைத்து இயற்கைச் சூழலை உருவாக்க முடிந்தது - என்றார். (க-இ)



# நாடாளுமன்ற வளாகத்தை சுற்றிவளைத்தது சஜித் அணி

காடழிப்பை நிறுத்துமாறும், சுற்றாடலைப் பாதுகாக்குமாறும் வலியுறுத்தி பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று (23) கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இப்போராட்டத்தில் பங்கேற்றதுடன், காடழிப்புக்கு எதிராகவும்,சுற்றாடலைப் பாதுகாக்குமாறும் கோரும் பதாகைகளை ஏந்தியிருந்தனர். இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் கருத்து வெளியிடுகையில், "காடழிப்புக்கு எதி ராகவும், சுற்றாடலைப் பாதுகாப்பதற்குமான எமது பிரதான போராட்டம் நாளை (இன்று) மாலை 3 மணிக்கு விகாரமகாதேவி பூங்காவில் நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்குமாறு மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம். காடழிப்பில் ஈடுபடுபவர்களே இன்று நாட்டை ஆள்கின்றனர். சுற்றுச்சூழல்கூட வேட்டையாடப்படுகின்றது." என்றார். (ந-44)

# காடழிப்புக்கு எதிராக ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம்



கொழும்பு,மார்ச் 24

மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில், (ஜே.வி.பி.)"காடழிப்புக்கு எதிராக நாம் கொழும்புக்கு' என்ற தொனிப்பொருளில், காடழிப்பைத் தடுக்கக் கோரி கொழும்பில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு தொழில்நுட்பசந்தியில் ஆரம்பிக்கப்பட்ட பேரணி, கோட்டை ரயில் நிலையம் வரை சென்றது.

காடழிப்பின் மூலம் எதிர்காலத்தில் சுவாசிப்பதற்கு ஒட்சிசன் இல்லாமல் போகும் நிலை ஏற்படும் என்பதை வலியுறுத்தி,ஆதிவாசிகளைப் போன்று ஆடை அணிந்திருந்தவர்கள், செயற்கை சுவாசக் கருவிகளைப் பொருத்தியவாறு பேரணிக்கு முன் நடந்து சென்றனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் உருவப்படம் பதித்த முகமூடியை அணிந்திருந்த சிலர், கைகளில் செடிகளின் படங்களையும் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

'ஆட்சியாளர்களே, சுற்றாடல் அழிப்பை உடனடியாக நிறுத்துங்கள்', 'ஆதிவாசிகளும் நீதிமன்றம் செல்கின்றனர்', 'காடழிப்பதைத் தடுப்பதற்கு எம்முடன் இணையுங்கள்', 'சிங்கராஜ வன அழிப்பின் பாதிப்பு நாட்டுக்கன்றி வேறு யாருக்கு?' மற்றும் 'அரசின் நலன் விரும்பிகளுக்கு முத்துராஜ வெல' என்பவை உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு, கோஷங்களையும் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்த்தில் ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய , பொதுச் செயலாளர் டில்வின் சில்வா , முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பிமல் ரத்னாநாக்க, நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் சுனில் ஹந்துன்னெத்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர். (க-இ)

# பேக்கரி உணவுகளின் விலை புத்தாண்டில் அதிகரிக்கலாம்

கொழும்பு,மார்ச் 24

**எதிர்வரும் தமிழ் சிங்களப் புத்தாண்டுக் காலத்தில் அனைத்து பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலையை அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று அனைத்து இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.**



இறக்குமதிக்குக் கட்டுப்பாடு, அதிகப்படியான வரி மற்றும் பொருள்களின் விலை அதிகரிப்பு என்பவை பேக்கரி உரிமையாளர்களுக்கு நெருக்கீடாகவுள்ளன.

இறக்குமதி செய்யப்பட்ட பாமெண்ணையின் விலை அதிகரிப்பு காரணமாக, பேக்கரி தொழிலை தொடர்ந்து நடத்துவதில் உரிமையாளர்கள் பெரும் சிக்கலை எதிர்கொண்டுள்ளனர்.

எனவே பாமெண்ணையின் மீதான இறக்குமதி வரியைக் குறைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். பொருள்களின் விலையையும் குறைக்க வேண்டும் என்று அவர் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (க-இ)

# சீனப் பொருள்களின் இறக்குமதி அதிகரிப்பு

### மீண்டும் நாணய மாற்று ஒப்பந்தம்

இலங்கையில் அதிக அளவு சீனப் பொருள்களே இறக்குமதி செய்யப்படுகின்றன. கடந்த வருடம் சீன இறக்குமதி 3.6 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சீனா -- இலங்கை நாடுகளுக்கிடையே, 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் நாணய இடமாற்று ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி (சி.பி.எஸ்.எல்) மற்றும் பீப்பிள்ஸ் பாங்க் ஆப் சீனா (பி.பி.ஓ.சி) ஆகியவற்றுக்கு இடையே இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இரண்டு நாடுகளின் பொருளாதார வளர்ச்சி, வர்த்தகம் மற்றும் நேரடி முதலீட்டை ஊக்கு விக்கும் நோக்குடன், குறித்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் இரு நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்களும் கையொப்பமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# தேவையற்று நடமாடிய பெண்களுக்கு தண்டம்

வீதிகளில் அநாவசியமாகச் சுற்றித் திரிந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட பெண்கள் நால்வருக்கு, தலா 50 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

எவ்விதமான காரணங்களும் இன்றி, இரவு வேளையில் வீதியில் நடமாடிய பெண்கள் நால்வர், கோட்டை பொலிஸ் நிலைய அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டனர்.

நால்வரும் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு தலா 50 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# ரயில் கடவை காப்பாளர்கள் பணி இடைவிலகத் திட்டம்

### ரயில் விபத்துக்கள் அதிகரிக்க வாய்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24

எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக தமது நிரந்தர நியமனம் தொடர்பிலான நிலைப்பாட்டை அரசு வெளிப்படுத்தத் தவறும் பட்சத்தில் நாடுதழுவிய ரீதியில் உள்ள 2 ஆயிரத்து 64 ரயில் கடவை காப்பாளர்களும் ஒருமித்து இடைவிலகல் மேற் கொள்வது தொடர்பில் கலந்தாலோசித்து வருகின்றோம் என்று வடக்கு கிழக்கு ரயில் கடவை காப்பாளர் ஒன்றியத்தின் தலைவர் றெகான் ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னதாக எங்களுக்கு நிரந்தரத் தீர்வு வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக நிரந்தர நியமனம் தொடர்பிலான நிலைப்பாட்டை அரசு முன்வைக்கத் தவறும் பட்சத்தில் நாடு தழுவிய ரீதியில் உள்ள 2 ஆயிரத்து 64 ரயில் கடவை காப்பாளர்களும் ஒருமித்து இடைவிலகல் மேற்கொள்வது தொடர்பில் கலந்தாலோசித்து வருகின்றோம்.

வடக்கு கிழக்கில் 145 ரயில் கடவைகளில் 450க்கும் உட்பட்ட ஊழியர்கள் கடமையாற்றி வருகின்றார்கள் வடக்கு கிழக்கில் சுமார் 25 கடவைகள் முழுமையாகப் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளன. காரணம் 250 ரூபா சம்பளம், பொலிஸாரின் அச்சுறுத்தல்கள், பழிவாங்கல்கள் போன்ற செயற்பாடுகளால் ஊழியர்கள் இடை விலகியுள்ளார்கள்.

அரசால் ஊழியர் நலன்சார்ந்த எந்தத் திட்டங்களும் முன்வைக்கப்படுவதில்லை, கொட்டகை வசதி இல்லை, மின்சார வசதி இல்லை, குடிதண்ணீர் வசதியில்லாத நிலையில் ஊழியர்கள் கடமையாற்றுகின்றனர். பெரும்பாலான இடங்களில் தடைகளே இல்லை. ஊழியர்கள் தங்கள் கைகளாலேயே சைகை காட்ட வேண்டும். ரயில் வருகின்றது என்றால் கண்ணால் கண்டு, அல்லது அதன் சத்தத்தை கேட்டுத்தான் பாதுகாப்பை வழங்குகின்றோம். கடந்த ஏழு ஆண்டுகளாக இவ்வாறு பணியாற்றும் ஊழியர்கள் மன நிலை பாதிக்கப்பட்டுள்ளார்கள் - என்றார். (ப-19)

# மன்னார் ரயில் விபத்தின் எதிரொலி; 6 காப்பாளர்கள் பணி விலகினர்

### வட,கிழக்கு ரயில் கடவை காப்பாளர் ஒன்றியத் தலைவர் ஆதங்கம்

முல்லைத்தீவு, மார்ச் 24

கடந்த 16 ஆம் திகதி மன்னாரில் இடம்பெற்ற ரயில்-பஸ் விபத்தின் பின்னர் ரயில் கடவை காப்பாளர்கள் மன அளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தலைமன்னார் பகுதியில் உள்ள இரண்டு கடவைகளில் பணியாற்றுகின்ற ஆறு ஊழியர்கள் தங்கள் பதவி விலகல் கடிதத்தை பொலிஸ் நிலையத்தில் கொடுத்துள்ளார்கள் என்று வடக்கு கிழக்கு ரயில் கடவை காப்பாளர் ஒன்றியத்தின் தலைவர் றெகான் ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

தலைமன்னாரில் இடம்பெற்ற ரயில் விபத்தில் உயிரிழந்த மாணவனுக்கும் அவனது குடும்பத்துக்கும் அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம். இந்த விபத்துக்கு ரயில்வே திணைக்களமே முழுமையாகப் பொறுப்புக்கூற வேண்டும். வடக்கு கிழக்கில் ரயில் கடவைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ரயில் திணைக்களத்தின் நேர அட்டவணை வழங்கப்படுவதில்லை, சமிக்ஞை காண்பிக்கும் சிவப்பு, பச்சை நிறக் கொடிகள் வழங்கப்படவில்லை. 180 நாள்கள் அரச சேவையில் பணியாற்றி இருந்தால் சேவையில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்ற சட்டத்துக்கு அமைய 2013 ஆம் ஆண்டு உள்வாங்கப்பட்ட ரயில் கடவை காப்பாளர்களுக்கு நாளாந்தம் 250 ரூபா கொடுப்பனவு பொலிஸ் திணைக்களம் ஊடாக வழங்கப்படுகிறது. எமக்கான முழுமையான பராமரிப்பில் பொலிஸ் திணைக்களமே பொறுப்புக்கூறுகின்றது. இவ்வாறான விபத்துக்கள் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் பாதுகாப்பு கடவை காப்பாளர்களைப் பாதிக்கும் விதத்தில் செயற்படுகின்றமை தொடர்பில் சரியான விசாரணையை மேற்கொள்ளவேண்டும் - என்றார். (ப-19)

# காடழிப்பில் ஈடுபட்டாரென பிரதேச சபை உறுப்பினர் கைது

கொழும்பு,மார்ச் 24

சட்ட விரோதமாகக் காடழிப்பில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் பத்தேகம பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர், பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை வனப்பகுதியை அழித்து, வேறு தரப்பினருக்குக் காணிகளைப் பகிர்ந்தளித்தார் என்ற குற்றச்சாட்டில், கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கடந்த வாரம் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# நாடு திரும்பியவர்களில் 40 பேருக்கு கொரோனா

கொழும், மார்ச் 24

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்களில், 40 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று கொவிட் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் 314 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது. அவர்களில் 40 பேர் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்கள். ஏனைய 274 பேர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கண்டறியப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 90 ஆயிரத்து 514 ஆகவும், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 551 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# பெண் தலைமைத்துவ குடும்பங்களை ஏமாற்றும் பெரும் சூழ்ச்சி முறியடிப்பு?

வவுனியா,மார்ச் 24

பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உதவிசெய்கிறேன் என்று அவர்களுடைய விவரங்களைப் பெற்றவரை சமூக ஆர்வலர் அமைப்பு ஒன்று விசாரணைக்கு உட்படுத்தியபோது, அவர் தலைமறைவாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் வவுனியாவில் இடம்பெற்றுள்ளது. வவுனியா மாவட்டச் செயலகத்திலுள்ள திணைக்களம் ஒன்றுடன் தொடர்பு கொண்ட குறித்த நபர், வவுனியாவிலுள்ள வசதியற்ற பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உதவி செய்வதற்கு தொடர்புகளை ஏற்படுத்தித்தருமாறு கோரியுள்ளார்.

வவுனியாவில் இயங்கிவரும் சமூக ஆர்வலர் அமைப்புடன் தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. தொடர்பை ஏற்படுத்தியவர் தன்னை அறிமுகப்படுத்தியுள்ளார். அவரது உரையாடலில் சந்தேகமடைந்த வவுனியா சமூக ஆர்வலர் அமைப்பைச் சேர்ந்தவர்கள் அவரிடம் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முற்பட்டபோது, அவர் முன்னுக்குப்பின் முரண்பட்ட தகவல்களை வழங்கியுள்ளார்.

அத்துடன் தொலைபேசியைத் துண்டித்து, தலைமறைமாகியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அழைப்புக்களை ஏற்படுத்துபவர்களிடம் பொதுமக்கள் விழிப்பாக இருக்குமாறும், இவ்வாறு முன்பின் அறியாதவர்களுடன் தொலைபேசியில் தொடர்புகளை ஏற்படுத்தி ஏமாற்றமடைய வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ப-110)

## இன்றைய நாள்

**மேடம்:** தேங்கிக் கிடந்த பணிகளை விரைந்து முடிப்பீர்கள். கவர்ச்சி அம்சம் காரணமாக உங்களின் முக்கியத்துவம் கூடும். பணியாளர்களுக்கு பதவி, சம்பள உயர்வு உண்டு.

**இடபம்:** சிலருக்கு வெளிநாட்டு நிறுவனத்தில் வேலை அமையும். உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார். பிள்ளைகளால் ஏற்பட்டிருந்த கலக்கம் தீர ஆரம்பிக்கும்.

**மிதுனம்:** முன்பிருந்ததைக் காட்டிலும் நிதி நிலை பலப்படும். வீடு, மனைகளால் ஆதாயம் ஏற்படும். லாபமான நாள். பெண்களுக்கு இருந்து வந்த உடல் உபாதைகள் நீங்கும்.

**கடகம்:** மனம் மகிழும். நல்ல நிறுவனத்தில் வேலை அமையும். நண்பர்களை சந்திப்பீர்கள். உங்கள் திறமை கவனிக்கப்படும். சிலர் உயர்கல்விக்காக வெளிநாடு செல்ல வாய்ப்பு வரும்.

**சிம்மம்:** சிலருக்கு நல்ல வரன் அமைந்து திருமணம் நிச்சயமாகும். பூரம்: மனதில் சிறு சிறு குறைகள் இருப்பதைத் தவிர்க்க முடியாது. பெண்களுக்கு நற்செய்தி உண்டு. கடன் வாங்க வேண்டாம்.

**கன்னி:** பொறுப்புடன் பணியாற்றுவீர்கள். குடும்பம் மகிழும். குடும்ப விவகாரங்களுக்காக அலைய வேண்டியிருக்கும். கொடுக்கல் வாங்கலில் கவனமாக இருப்பீர்கள்.

**துலாம்:** நெருங்கிய சிலர் உங்களிடம் மனம் விட்டுப் பேசுவார்கள். உழைப்பு எதுவும் வீணாகாது. பயணங்களால் லாபம் உண்டு. பெருந்தன்மையும், சகிப்புத்தன்மையும் அதிகரிக்கும்.

**விருச்சிகம் :** உழைப்பால் உயர்வீர்கள். முன்பிருந்த சிரமங்கள் குறையும். பெரும்பொறுப்பை நீங்களே நிறைவேற்ற வேண்டியிருக்கும். யாரையும் பகைத்துக் கொள்ள வேண்டாம்.

**தனுசு:** எல்லா இடங்களிலும் முக்கியத்துவம் எதிர்பார்க்காதீர்கள். பணியிடத்தில் இருந்து வந்த பிரச்னைகள் குறையும். உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகரம்:** உடல் ஆரோக்கியத்தில் இருந்த பாதிப்புகள் மறையும். பொருளாதாரம் சிறப்பாக இருப்பதால் மனம் நிறையும். அக்கம் பக்கத்தினரின் செயல்பாடுகளால் எரிச்சல் வரலாம்.

**கும்பம்:** சிறு ஏமாற்றம் வந்தாலும் சமாளித்து நிமிர்ந்து விடுவீர்கள். குடும்பத் தேவைகளை சுலபமாக நிறைவு செய்ய முடியும். மேலதிகாரியுடன் மோதல்கள் வேண்டாம்.

**மீனம்:** எதிர்பாராத உதவி கிடைப்பதால் கடன் சற்றுக் குறையும். குடும்பத்தில் சிறு சிறு வாக்கு வாதங்கள் ஏற்படும். பெருந்தன்மையான நட்பு வரும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும்.

ரூ.1,000 விவகாரம்

# வர்த்தமானிக்கு எதிரான மனு வெள்ளியன்று விசாரணைக்கு

**கொழும்பு,மார்ச் 24**

**தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற சம்பள அதிகரிப்பு வர்த்தமானிக்கு எதிரான மனு, நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.**

தேயிலை மற்றும் இறப்பர் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படைச் சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக நிர்ணயம் செய்து வெளியிடப்பட்டுள்ள, வர்த்தமானியை வலு இழக்கச் செய்யும் வகையில், 20 பெருந்தோட்டக் கம்பனிகளால் இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேன் முறையீட்டு நீதிமன்றின் தலைமை நீதிபதி அர்ஜுன ஒபேசேகர மற்றும் நீதிபதி மாயதுன்ன கொரயா ஆகியோர் அடங்கிய இருவர் கொண்ட நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த மனு நேற்று முன்தினம் ஆராயப்பட்டது.

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மனு வெள்ளியன்று பரிசீலனைக்கு எடுக்கப்படும் என்று நீதிபதிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த 12 ஆம் திகதி, மேன் முறையீட்டு நீதிமன்றில் இந்த ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் பிரதிவாதிகளாக தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, தொழிலாளர் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்ர கீர்த்தி மற்றும் தேயிலைத் தொழிற்றுறை சம்பள நிர்ணய சபையின் தலைவர் ஆகியோர் உள்ளிட்ட 18 பேர் பிரதிவாதிகளாகப் பெய ரிடப்பட்டுள்ளனர். (கு-இ)

## இலங்கையில் விபத்தால் உயிரிழப்புக்கள் அதிகரிப்பு

### தடுக்க முறையான திட்டம் அவசியம் என்கிறார் கரு

கொழும்பு,மார்ச் 24

இலங்கையில் வீதி விபத்துக்களால் அதிக அளவானோர் உயிரிழக்கும் நிலைமை தற்போது அதிகரித்துள்ளது. இவற்றைத் தடுப்பதற்கு முறையான திட்டங்களை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜய சூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஆரம்பத்தில் முன்னெடுக்கப்பட்ட வீதிப் பாதுகாப்புச் செயலணியின் செயற்பாடுகள் குறைக்கப்பட்டுள்ளன. தற்போது அவை வெறுமனே கட்டாயக் கடமையாக மாத்திரமே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே இலங்கை மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்கு ஜனாதிபதி செயற்றிறனான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார். (கு-இ)

## மலையகத்தை வளப்படுத்துவோம்

### சமுதாயப் பேரவை நம்பிக்கை

ஹற்றன்,மார்ச் 24

பின்தங்கியுள்ள மலையகத்தை சகல துறைகளிலும் முன்னேற்றுவதற்கு, அனைவருடனும் இணைந்து பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம் என்று இலங்கை இந்திய சமுதாயப் பேரவையின் தலைவர் ராஜ் சிவராமன் தெரிவித்தார்.

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர், சௌமிய மூர்த்தி தொண்டமானால் அமைக்கப்பட்ட இந்த அமைப்பால், மலையகத்தில் பல மாணவர்களுக்கு கல்வி கற்பதற்கான நிதியுதவியளித்து அவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கான வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைவாக மலையகத்தில் அபிவிருத்திகள் ஏற்பட வேண்டும் என்ற இலட்சியப் பாதையில், பேரவையின் அனைத்து திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. மலையத்துக்காகச் சேவையாற்றும் ஏனைய நிர்வாகங்களுடனும் இணைந்து எமது சேவைகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (கு-இ)

## தவக்கால சிந்தனை

## அறமே கிறிஸ்தவ அணிகலனாகட்டும்

கிறிஸ்தவ அறத்தின் இலக்கணம் கடவுள் மட்டுமே. ஒரு சாதாரண மனிதன் கிறிஸ்தவத்தின் அளவுகோலாக மாற முடியாது. கடவுளே நன்மைத் தனத்தின் நிறைவு என்பதால் அவர் மட்டுமே கிறிஸ்தவர்களின் அளவு கோல். இதனையே இயேசு "உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்" எனக் கூறி எம்மை இரக்கத்தின் மாதிரியாகக் கருக்கொள்ள அழைப்பு விடுக்கிறார்.

இரக்கம் கொள்ளுதல், தீர்ப்பிடாதிருத்தல், கண்டனம் செய்யாதிருத்தல், மன்னித்தல், கொடுத்தல் என அனைத்துப் பண்புகளும் ஊற்றெடுக்கும் இடமாக கிறிஸ்தவ அற வாழ்வு அமைந்திட வேண்டுமென இறைவன் விரும்புகிறார்.

இவற்றை நாம் முன்னெடுக்க சமகால சமூத்தில் பல சந்தர்ப்பங்கள் விரிந்து கிடக்கின்றன.

புதுமைகளைப் புகுத்துவோரே வெற்றியாளர்கள் எனப்படுவர். கிறிஸ்தவ வாழ்வும் அவ்வாறே. நாம் அனைவரும் அறவாழ்வில் புதிய வழியில் நடக்க அழைக்கப்படுகின்றோம். எனவே உலகு முன்வைக்கும் எதுவும் எடுத்துக்காட்டாக முடியாது.

வேறு எடுத்துக்காட்டுக்களே இல்லாத இடத்தில் உலகு முன்வைப்பது ஒரு வழிகாட்டுதலாகத் தோன்றாம்.

ஆனால் கிறிஸ்தவ அறத்தின் முழுமையும் நிறைவுமாக கடவுளே விளங்குவதால் அவரே நம் அற வாழ்வுக்கு முன்மாதிரி என்பதை இயேசு கோடிட்டுக் காட்டுகிறார். இதுவே கிறிஸ்தவர்களின் அணிகலனாக அமையட்டும்.

**எஸ்.யேசுதாஸ்,**
**கொழும்புத்துறை.**

## சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாணம், நீர்வேலி கந்த சுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்த சிறப்புச் சொற்பொழிவு - ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த சிறப்பு சொற்பொழிவில் சைவப்புலவர் சிவநெறிச்செம்மல் கா.கமலநாதன், 'அக்கினிப்பூ' எனும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றவுள்ளார் என ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

நல்லூர், மார்ச் 24

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டமும், நிர்வாகத் தெரிவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. இதன்போது தலைவராக பெ.கனகசபாபதியும், உபதலைவராக சி.பத்மராசாவும் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களுடன் நெறியாளர் குழு உறுப்பினர்களாக த.ஆனந்தநடராசா, இ.இந்திரராசா, தி.கெங்கேஸ்வரன், ஐ.சுபாகரன் மற்றும் க.பிரசாத் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ)

### மீன் சந்தையிலிருந்து வெளியேறும்

# கழிவு நீரால் துர்நாற்றம்

### பொதுமக்கள் விசனம்



வவுனியா,மார்ச் 24

**வவுனியா, மன்னார் வீதி- குருமன்காடு சந்தியில் அமைந்துள்ள மீன் சந்தையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் அப்பகுதி எங்கும் துர்நாற்றம் வீசிகின்றது. இதனால் அருகிலுள்ள தேவாலயம், இந்து ஆலயம் மற்றும் பஸ் தரிப்பிடம் போன்றவற்றுக்குச் செல்லும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் பொதுமக்கள் கருத்து தெரிவிக்கையில்,

மன்னார் வீதி , குருமன்காட்டு சந்தியில் அமைந்துள்ள மீன் சந்தைக்கு கழிவு நீர் சேமிக்கும் தொட்டி சிறியதாக அமைக்கப்பட்டுள்ளதால் அத்தொட்டியில் சேரும் கழிவு நீர் நிரம்பி வழிவதுடன் மேலதிகமாக அங்கு சேமிக்க முடியாததால் அதிகளவான கழிவு நீர் வீதி ஓரமாக வெளியேறி வருகின்றது . இதனால் குறித்த மீன் சந்தைப்பகுதி எங்கும் துர்நாற்றம் வீசுகின்றது. அருகருகே அமைந்துள்ள கத்தோலிக்க தேவாலயம் மற்றும் இந்து ஆலயம் ஆகியவற்றுக்குச் செல்லும் பக்தர்கள் உட்பட பல்வேறு திணைக்களங்களில் பணியாற்றுவதற்கு செல்லும் பணியாளர்களும் அங்கு அமைந்துள்ள பஸ் தரிப்பிடத்தில் காத்திருப்பதால் தினமும் அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர். எனவே இவ்வாறு மீன் சந்தையிலிருந்து வெளியேறும் கழிவு நீரைத்தடுத்து சேமிப்புத் தொட்டியில் பேணி அதனை நகரசபையால் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம். என்றனர். (ஐ-110)



## குளத்தின் நீரேந்துப் பரப்பில் வீதி அமைக்க வேண்டாம்!

### மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 24

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளத்தின் நீரேந்துப் பரப்பின் ஊடாக வீதி அமைக்க வேண்டாம் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். குளத்தின் வான் பாயும் பகுதியில் இருந்து நிரந்தர வீதிப் புனரமைப்புகள் முன்னெடுக்கப்படவுள்ளன என பெயர்ப் பலகை வான்பாயும் பகுதியில் நடப்பட்டுள்ளது.

இந்த வீதி குளத்தின் அணைக்கட்டைக் கடந்து அமையவுள்ளதால் இந்த வீதியை அணைக்கட்டைக் கடந்து செல்லாமல் குளத்தின் நீரேந்துப் பரப்பில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் இருந்து வேலைகளைத் தொடங்குமாறும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதி நீரேந்துப் பரப்பின் ஊடாக அணைக்கட்டை பிளந்து வீதி அமையுமானால் எதிர்காலத்தில் குளத்தின் அணைக்கட்டை அபிவிருத்தி செய்யவோ வாய்க்கால்களை அமைக்கவோ முடியாது.

எனவே குளத்தின் அணைக்கட்டின் 200 மீற்றர் தூரத்தில் இருந்து நிரந்தர வீதியை அமைப்பதற்கு இவ்வீதிப் புனரமைப்புடன் தொடர்புடைய பொறியியலாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அம்பலப் பெருமாள்குளம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

1968 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அம்பலப்பெருமாள் குளம் குடியேற்றத் திட்டத்தில் இக் குளத்தை நம்பியே 110 வரையான குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். குளத்துக்கும் குளத்தின் கட்டுமானங்களுக்கும் பாதிப்புகள் ஏற்படாத வகையில், கிராம மக்களுடன் கலந்துரையாடி வீதிப் புனரமைப்புகளை முன்னெடுக்குமாறு அம்பலப்பெருமாள்குளம் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ற-13)

## சுகாதார அறிவுறுத்தலை மீறி ஆலயங்களில் அன்னதானம்

### *சுகாதாரத் திணைக்களத்தினர் அதிருப்தி*

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள ஆலயங்கள் சிலவற்றில் கடந்த பங்குனித் திங்கள் உற்சவத்தின் போது கொரோனாக் கட்டுப்பாடுகளை மீறி அன்னதானம் வழங்கப்பட்டுள்ளது என தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அன்னதானம் வழங்குவது தடை செய்யப்பட் டுள்ள நிலையில் அதனை மீறிச் செயற்படுவது தண்டனைக்குரிய குற்றமாகும். ஆலயங்களில் பொங்கலுக்கு மட்டுமே எம்மால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அன்னதானம் வழங்குவதால் கொரோனாத் தொற்று ஏற்படும் பட்சத்தில் ஆலய நிர்வாகத்தினரும், பூசகருமே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும். கடந்த வருடம் கொரோனாப் பரவலால் முதல் பங்குனித் திங்கள் மட்டுமே இடம்பெற்றது. ஏனைய திங்கள்களில் பொங்கல் நடத்தக்கூட அனுமதி வழங்கப்படவில்லை. இம்முறை உற்சவத்தை குறைந்தளவு அடியார்களுடன் நடத்த வழங்கப்பட்ட அனுமதியை நாம் உதாசீனம் செய்யாமல் செயற்படவேண்டும். அன்னதானம் வழங்குவது சுகாதாரப் பகுதியினரால் கண்டு பிடிக்கப்பட்டால் அடுத்து வரும் வாரங்களில் பொங்கலுக்கும் தடை விதிக்கப்பட்டு ஆலய நிர்வாகத்தி னர், பூசகர் அன்னதானத்தை வழங்குவோர் மற்றும் அதில் பங்கு பற்றுவோர் என அனைவர் மீதும் தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளனர். (வ-9)



வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் மலசல கூட வசதிகள் இன்றி வசித்து வரும் ஏழு குடும்பங்களுக்கு அபிராமி உபாசகி ஆலய நிர்வாகத்தால் மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு பயனாளிகளிடம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கையளிக்கப்பட்டன. (ற-12)

## தரம் 6 வகுப்புக்கள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் தரம் 6 மாணவர்களுக்கான வகுப்புக்கள் நாளை வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. அனுமதியைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் அனைவரும் கல்லூரிக்கும் சமூகமளிப்பதை அவர்களின் பெற்றோர்கள் உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்துடன் 2021 இல் அனுமதியைப் பெற்றுக் கொண்ட மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை மதியம் 12 மணிக்கு பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 50,000 ரூபா பெறுமதியில் 68 மாணவர்களுக்கு கொப்பிகள்!

வவுனியா, மார்ச் 24

ஊரெழு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் தற்போது கனடாவில் வசிப்பவருமான வசந்தராணி மோகனின் 44 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, அவரது கணவர் ஆறுமுகம் மோகன் நிதிப்பங்களிப்பில் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் 68 பேருக்கு கொப்பிகள் வழங்கப்பட்டன.

முதலாம் கட்டமாக நெடுங்கேணி மாமடுச் சந்தி வெள்ளைப்பிள்ளையார் ஆலய கற்பகா அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கும் மாண வர்களுக்கே ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியில் இந்த அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன. (ற-222)



# புதன் பொய்கை

○ கே.ஆர். டேவிட்

## சமகால இலக்கியம்

ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வரலாறு இருப்பதுபோல இலக்கியத்திற்கும் நீண்ட வரலாறு உண்டு. தனி மனிதனிலிருந்து தேசியம் வரையான மாற்றங்கள் அனைத்தும் இலக்கியப் போக்கிலும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. இன்று எம்மால் பேணப்படுகின்ற இலக்கியங்கள் யாவும் எதிர்காலத்திலும் பேணப்படும் எனக் கொள்ள முடியாது. ஆனால் பேணப்படாவிட்டாலும் பேசப்பட்டுப் பாதுகாக்கப்படும் என்பது உறுதியானது.

இலக்கியங்கள் சமுதாயத்தின் பிரதிபலிப்புக்களாகும். ஒரு காலத்தில் எழுகின்ற இலக்கியங்கள் அக்காலத்தில் மேலோங்கியுள்ள பிரச்சினைகள் பற்றிக் கூறுவனவாகவே அமைகின்றன. அதேநேரத்தில் பிரச்சினைகள் ஒவ்வொன்றும் மாறுபட்ட தளங்களிலிருந்தே நோக்கப்படுகின்றன.

எனவே ஒரு குறிப்பிட்ட காலத்தின் சரியான நிலையைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கு அக்காலத்தில் எழுந்த சகல இலக்கியங்களையும் விளங்கிக் கொள்வதும், அக்காலத்து சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்களை விளங்கிக் கொள்வதும் அவசியமாகும்.

இந்த அடிப்படையில் சமகால இலக்கியத்தை மதிப்பீடு செய்வதற்கு சமகாலத்தில் எழுந்த சகல இலக்கியங்களையும் விளங்கிக் கொள்வதோடு, இவ்விலக்கியங்களின் இருப்பு நிலை பற்றிய விளக்கமும் எமக்கு அவசியமாகின்றது.

இலக்கியங்கள் காலத்தின் பதிவுகளாக இருப்பினும், இலக்கியங்களில் அவ்விலக்கியத்தின் சிருஷ்டிகர்த்தாவின் மனப்பதிவுகளும் மறை பொருளாய் கலந்திருக்கும் என்பதையும் நாம் ஒதுக்கிவிட முடியாது. சமகால இலக்கியங்களையும் அவற்றுக்கு அடிநாதமாகவும், ஆதார சுருதியாகவும் இருந்த காரணிகளையும் பகுத்துப் பார்க்கின்றபோது இலங்கையில் ஏற்பட்ட தமிழீழப் போராட்டமே தலையாய காரணியாகத் தென்படுகின்றது.

**“இலங்கைத் தேசியம்” என்ற நீண்டகால வழக்கு நிலையில் மாற்றம் ஏற்பட்டு “தமிழீழத் தேசியம்” என்றதொரு புதிய எண்ணக்கரு தோன்றி விரிந்து வழக்க நிலைக்கு வந்துவிட்டதையும், அதன் தோற்றம், வளர்ச்சி, பண்பு, பயன் என்பவற்றையும் விளங்கிக் கொள்வது சிறப்பானதாகும். ஏனெனில் தமிழீழத் தேசியமும், சமகால இலக்கியமும் வெகுவாகப் பின்னிப் பிணைந்துள்ளன. கடந்த இரு தசாப்தகால இலக்கிய வளர்ச்சிப் படிமங்களின் புதிய வடிவமே சமகால இலக்கியமாகும்.**

சமகால இலக்கியப் பரப்பை மூன்று பிரிவுகளாகப் பிரித்து நோக்குவதன் மூலம், சமகால இலக்கியத்தின் போக்கை ஓரளவு தீர்மானிக்கலாம்.

இன்னமும் வாழ்ந்து, படைப்பிலக்கியத்தில் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்ற மூத்த எழுத்தாளர்களின் சமகால இலக்கியங்களை முதலாவது பிரிவாகவும், தமிழீழத் தேசியப்பரப்பில் உருவான இளந் தலைமுறை எழுத்தாளர்களின் இலக்கியங்களை இரண்டாவது பிரிவாகவும், தமிழீழத் தேசியத்தை உருவாக்கி அதைப் பாதுகாத்து வருகின்ற போராளிகளுக்குள் படைப்பு இலக்கியத் திறனுள்ளவர்களால் படைக்கப்பட்ட இலக்கியங்களை மூன்றாவது பிரிவாகவும் கொள்ளலாம்.

இலக்கியக் கூறுகள் ஒவ்வொன்றுக்கும் உரிய இலட்சணங்கள் ஏற்கனவே வகுக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றன.

இலக்கிய வரலாற்றில் தடம்பதித்த மூத்த எழுத்தாளர்கள், தங்களுக்கென்று இலக்கியக் கொள்கைகளையும், எல்லைகளையும் வகுத்துக் கொண்டு அதற்குட்பட்டு இலக்கியம் படைத்துப் பழகியவர்கள். அரசியல், சமூகவியல், பொருளியல், புவியியல், மொழியியல் போன்ற விடயங்களிலும், பாத்திரப்படைப்பு, மண்வாசனை, அறிவியல், உளவியல் சார்ந்த யதார்த்த நிலை, மனோ தர்மம், ஆளுமை போன்ற விடயங்களிலும் வெகுவாக அக்கறை கொண்டிருந்தவர்கள். இவர்களால் முன்வைக்கப்பட்ட தனி மனிதம் சார்ந்த, சமூகம் சார்ந்த, இலங்கைத் தேசியம் சார்ந்த அனைத்துப் பிரச்சினைகளையும் மேவி தமிழீழப் போராட்டம் முனைப்புப் பெற்றதையும் முதன்மை பெற்றதையும் ஏற்றுக் கொண்டு தங்களைத் தமிழீழத் தேசியத்திற்கேற்றவாறு மாற்றிக் கொள்ளவோ, அல்லது அதை மறுதலிக்கவோ அவர்களால் முடியாதுள்ள தொரு நிலையை அவர்களின் சமகால இலக்கியங்களில் அவதானிக்கலாம்.

தமிழீழப் போராட்டத்தின் உட்கட்டுமானப் பிரச்சினையை விட போராட்டத்தினால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட அவலங்களே இவர்களது இலக்கியக் கருவூலங்களாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன எனலாம்.

தமிழீழத் தேசியம் என்ற கருத்து நிலை உருவாகி வியாபித்த பின் உருவான எழுத்தாளர் களின் இலக்கியங்களும் முதலாவது பிரிவைச் சார்ந்த அணியினரின் இலக்கியங்களையே பெருமளவு ஒத்திருந்தாலும் இலக்கிய வடிவத்தில் பெருமளவு வேறுபாடுகள் காணப்படுகின்றன; நேரடியாகச் சம்பவங்களைக் கூறி, அதிலுள்ள அவலங்களை வெளியாகக் கூறிவிடுகின்ற ஒருபாங்கை அவதானிக்கலாம். அதேநேரத்தில் காரியங்களைத் தெளிவாகக் கூறுகின்ற இவர்களால் அதற்கான காரணங்களையும் கர்த்தாக்களையும் கூறிக் கொள்வதில் நலிவுத் தன்மையையே அவதானிக்க முடிகின்றது.

**இலங்கைத் தேசியம் என்ற நிலை இருந்த காலத்தில் இருந்த தனிமனித சமூக அரசியல் பிரச்சினைகள் யாவும், தமிழீழத் தேசியப் பரப்பிலும் காணப்படுகின்றன. தவிர்க்க முடியாத காரணங்களினால் சில பிரச்சினைகள் தணிந்து போயுள்ளன எனக் கொள்ளலாமே தவிர, அவை அற்றுப் போய் விட்டன எனக் கொள்ள அனுகூலமான எந்தக் காரணங்களும் இல்லை.** இருந்தபோதும் இவர்களின் இலக்கியங்களில் போராட்டத்தால் ஏற்பட்ட சமூக அவலங்களையே கருப்பொருளாகக் காண முடிகின்றது.

ஆனால் கருவூலங்களை இலக்கியமாக்குகின்ற புதிய துணுக்கங்கள், குறியீட்டுச் செய்திகள், மிகப்பெரும் செய்திகளை இரண்டொரு வார்த்தைகளில் சம்பவத்தின் கூர்மையைக் குறைக்காமல் கூறுகின்ற திறன் காணப்படுவது இவர்களிடமுள்ள குறிப்பிடக்கூடிய சிறப்பம்சங்களாகும்

மேற்கூறப்பட்ட இருசாராரின் இலக்கியங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, கருவூலத்தைப் பதிக்கின்றமுறை, பாத்திர வளர்ப்பு, மொழியாட்சி, தீர்வு கூறுவதில் கையாளப்பட்ட உத்தி என்பவை போன்ற விடயங்களில் வெளிப்படையான இடைவெளிகள் காணப்படினும், மையப் பொருளிலும் உளவியல் உடன்பாட்டு நிலையிலும் ஒத்த பண்புகளே பெருமளவில் காணப்படுகின்றன.

போராட்டத்தின் அவசியம் பற்றியோ, போராட்டத்தின் எதிர்காலம் பற்றியோ அல்லது போராட்டத்தின் தன்மை பற்றியோ இவர்களது இலக்கியங்கள் பேச மறந்து விட்டனவென்றே கூறவேண்டியுள்ளது.

அதேநேரத்தில் இவர்களது இலக்கியங்களில் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் தன்மையும் இருக்கவில்லை என்பதையும் நாம் மனங்கொள்வது அவசியமாகும். குடும்ப சமூக உறவுகளை ஒதுக்கி, தமிழீழத் தேசியச் சொத்துக்களாகத் தங்களை மாற்றிக் கொண்ட போராளிகளில் பலர் எழுத்தாளர்களாகி இலக்கியம் படைத்துள்ளனர். இவர்களுக்கு முதல் கூறப்பட்ட இருசாராரும், போராட்ட எல்லைக்குள் இறங்காமல் பார்வையாளர்களாக மட்டும் நின்று போராட்டத்தினால் ஏற்பட்ட சமூக விளைவுகளையும் போராளிகளின் அர்ப்பணிப்பு, தியாகம், மரணம் போன்ற விடயங்களையும் பற்றியே கூறியுள்ளனர். ஆனால் போராளிகளால் படைக்கப்பட்ட இலக்கியங்களில் போராட்ட உட்கட்டுமான விடயங்களையும் மக்களால் ஆச்சரியப்படத்தக்கதுமான விடயங்களுமே பெருமளவில் உள்ளடங்கியுள்ளன.

அரசியல் பொருளாதார யதார்த்த நிலைத் தெளிவும் கடந்தகால இலக்கியங்களின் அறிவியல் அனுபவங்களும் நிகழ்கால தேடல் அனுபவங்களும் இணைத்த அனுபவக் கூர்மையிலிருந்தே புனிதமான இலக்கியங்கள் பிரசவிக்கின்றன என்பது இலக்கியப் பிரசவத்தின் மூலதத்துவமாகும்.

**கடந்தகால இலக்கிய வளர்ச்சிப் படிமங்களின் புதிய வடிவங்களே சமகால இலக்கியமாகும். “இலங்கைத் தேசியம் ‘ என்ற வடிவத்திலிருந்து உருவான ‘தமிழ்த் தேசியம்‘ என்ற வடிவமே சமகால இலக்கியத்தின் அடித்தளமாகும்.**

இந்த வகையில் கண்நேரம் தவறாமல் களத்தில் நிற்கின்ற போராளிகளால் கணநிலை பற்றியும் களத்தில் நடமாடுகின்ற பாத்திரங்கள் பற்றியும், இப்பாத்திரங்களின் இயக்கம், பேச்சு மொழி பற்றியும் கூறப்படுகின்ற இலக்கியங்களில் இலக்கிய இலட்சணங்கள் இயல்பாகவே அமைத்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

“தமிழீழத் தேசியம்“ என்ற கருத்து நிலை உருவாவதற்கு முன்பு இலக்கிய வெளியீட்டு வசதிகள் மிகவும் குறைவாகவே காணப்பட்டன. இலக்கியகாரர்கள் தங்கள் சொந்த முயற்சியிலேயே பதிப்பித்து வெளியீடு செய்கின்ற அவல நிலைக்கு உள்ளாகியிருந்தனர். போராளிகளின் இலக்கியங்களைப் பொறுத்தவரை அவர்களே பதிப்பித்து அவர்களே வெளியீடு செய்யுமளவுக்கு ஸ்தாபன ரீதியான பதிப்பகங்கள் இருந்தமை அவர்களின் வெளியீடுகள் முழுவடிவத்துடன் வெளிவர வழிகோலியது .

தமிழர்களிடம் பதிப்பகங்கள் இருந்தாலும் , அவைகள் போராட்ட இலக்கியங்களை வெளியிடுவதில் அரசியல் ரீதியான நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியதொரு நிலை இருந்தது. மரணபயத்தை அறுத்து போராட்டத்தையே வாழ்க்கையாகவும், நம்பிக்கையை ஆயுதமாகவும் கொண்ட போராளிகளால் தங்கள் எண்ணத்தை முழு வடிவுடனும் சுதந்திரத்துடனும் எழுதவும் வெளியிடவும் முடிந்துள்ளதற்குப் பதிப்பக வசதியும் முக்கிய காரணியாகும்.

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம், வர்க்க, சமய, சாதி, வயது. பால் வேறுபாடின்றி ஏதோவொரு வகையில் சகல தமிழ் மக்களையும் உள்ளடக்கியிருந்ததாலும், மரணபயம் கலந்த பீதியை உருவாக்கியிருந்ததாலும், சகல மக்களும் போராட்டத்தைப் பற்றியே சிந்திக்கின்ற ஒரு சூழ்நிலை காணப்பட்டது.

சமகால இலக்கிய நிலைக்கு அடித்தளமிட்ட முக்கிய காரணிகளில் இதை முதற்காரணியாகக் கொள்ளலாம். தவிர இலக்கிய விமர்சன நிலை பற்றி நோக்கும்போது இரு தசாப்த காலத்துக்கு முற்பட்ட காலத்திலும் ஆரம்பகாலத்திலும் இலக்கிய விமர்சனங்கள் காரசாரமாகவே நடைபெறும். பல்கலைக் கழகத்தைச் சார்ந்த கல்வியியலாளர்களே இலக்கிய விமர்சனங்களில் பெரும்பங்கு வகித்தனர். அவர்களிடம் இலக்கிய “அளவு கோல்கள்“ நிறையவே காணப்பட்டன.

அந்த இலக்கியங்கள் சமூகம், அரசியல் சார்ந்தவையாகக் காணப்பட்டதும், கல்வியியலாளர்கள் சமூகத்தில் பெரும் மதிப்பைப் பெற்றிருந்ததும், பெரும்பான்மையான இலக்கியப் பிரச்சினைகளுக்கு அவர்களின் முடிவையே இறுதியானதாகக் கொள்ள வைத்தது.

சமகால இலக்கியப் பரப்பில், வெளியாகியுள்ள இலக்கியங்கள் பற்றிய அளவு கோல்களை சமகால விமர்சகர்கள் புதுப்பிக்க வேண்டியதொரு அவசியத்தையும் சமகால இலக்கியம் உருவாக்கியுள்ளது.

தமிழீழத் தேசியம் என்ற கருத்து நிலை உருவாவதற்கு முன்பு தமிழ் நாட்டு இலக்கியங்களையும் தமிழ் நாட்டு இலக்கிய கர்த்தாக்களையுமே போற்றிப் பூசித்த காலம் மாறி இலங்கைத் தமிழ் இலக்கியகாரர்களின் இலக்கியங்களைத் தமிழ்நாட்டு இலக்கியகாரர்கள் பார்த்து ஆச்சரியப்படும் அளவுக்கான ஒரு புதிய பரிமாணத்தை சமகால இலக்கியம் ஏற்படுத்தியுள்ளது எனலாம். ■

○ இராமபுரத்தூர் நிஷாந்தன்

# இராமாயணம் காட்டும் இலங்கையின் அழகியல்



இலங்கை இயற்கை எழில் சூழப்பெற்றது. இலங்கையின் அழகியல் பற்றி பல்வேறுபட்ட நூல்களிலும், வரலாற்றுக் குறிப்புக்களிலும் கூறப் பட்டுள்ளது. இராமாயணம் எனும் இதிகாசத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரமாக இழையோடும் இராவணன் இலங்கையைத் தனது ஆட்சிக்குரிய நாடாக கொண் டிருந்தான் எனக் குறிப்பிடப்படுகின்றது. இந்தக் கார ணம் கொண்டு இராவணன் இலங்கேசன் எனவும், இலங்காபுரியின் வேந்தன் எனவாறு அழைக்கப்பட் டுள்ளான். இலங்கைத் திருநாட்டின் அழகியலையும், செல்வச்செழிப்பினையும் கம்பர்தனது கம்பராமாய ணத்தில் அழகுறக் காப்பியம் செய்திருக்கின்றார்.

கம்பராமாயணத்தின் சுந்தரகாண்டத்தில் இடம் பெற்றுள்ள ஊர்தேடு படலத்தில் இலங்கையின் அழகினை அழகுற எடுத்துரைத்துள்ளார் கம்பர்.

கற்பனைக்குள் அடங்காத இலங்கையின் அமைப்பில் சீதையைத் தேடி அஞ்சனை மைந்தன் அனுமன் இலங்கையை வந்த டைகின்றான். அப்போது இலங்கையின் அழகைக் கண்டு வியக்கின்றான் அனுமன். அவ்வண்ணமே அனுமனின் வியப்பை கம் பர் பாடலில் காட்டுகின்றார்.

**'பொன் கொண்டு இழைத்த
மணியைக் கொடு பொதிந்த
மின்கொண்டு அமைத்த
வெயிலைக் கொடு சமைத்து
என் கொண்டு இயற்றிய எனத்
தெரிகிலாதவன் கொண்டல் விட்டு
மதி முட்டு வன மாடம்'**

இலங்கை நகர வீதிகளில் உள்ள மாடங்கள் யாவும், பொன்னால் வேயப்பட்டனவோ அல்லது இரத்தினங் கள் பதிக்கப்பட்டனவோ? அல்லது மின்னலைக் கொண்டு வேயப்பட்டனவோ? அல்லது வெயிலைக் கொண்டு வேயப்பட்டனவோ? என மயங்கும் வண் ணம் வானை மூட்டும் அளவுக்கு ஒளி வீசிக் காணப் பட்டன. தவிர, எவ்வளவு உயரிய மாணிக்கக் கற்க ளும் திருமால் தன் மார்பில் அணிந்துள்ள கௌத் துபம் எனும் மணியை விடச் சிறந்தவை இல்லை. அதைப்போல தேவதச்சன் தன் கைகளாலேயே உருவாக்கிய சிறப்பான நகரம் இலங்கையாகும் எனக் கம்பர் கவியுறுத்துகின்றார்.

இது தவிர, ஊழிக் கால முடிவில் திருமாலின் திரு வயிற்றை வந்தடையும் உயிர்க் கூட்டங்களைப் போல இலங்கையில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிகின் றதாம். சூரியனின் தேரில் பூட்டப்பட்ட குதிரைகளைத் தவிர ஏனைய குதிரைகள் அனைத்தும் இலங்கை யில் இருக்கின்றனவாம். மேலும் இலங்காபுரியில் நாற்புறமும் சூழ்ந்துள்ள கடல் அலைகளின் முழக்க மும், நகரின் நாலாபுறமும் முரசு அறையும் ஒலியும், யானைக் கூட்டங்களின் பிளிறல் ஓசையும், அழகு பொருந்திய பெண்களது இனிய இசை போன்ற குரல்களும், அவர்கள் தம் கால்களில் அணிந்துள்ள சிலம்புகளின் ஒலியும் கேட்பவர் உள்ளங்களை மயங்கச் செய்துவிடும். இத்தகு சிறப்பு வாய்ந்த நாடு இலங்கையாம் என்கின்றார் கம்பர்.

நீலக் கடலின் மத்தியில் விளங்கிடும் இலங்காபுரி



பெரும் அலைகளைத் தன்பால் கொண்டுள்ள எந்நேரமும் ஒலித்துக் கொண்டுள்ள நீலக்கடலின் மத்தியில் அமைந்துள்ள அழகு பொருந்திய நகர் இலங்கையாகும். எங்கள் நினைவுக்கு உட்படாத வாறு வானத்தைத் தொடும் படியாக உயர்ந்து நின்று ஒளி வீசுகின்ற இந்நகரின் மாட விமானங்கள் மேலும் அழகு சேர்க்கின்றன. இத்தகு அழகிய இலங்கை யின் அமைப்பானது, பாம்புப் படுக்கையில் பள்ளி கொண்டுள்ள திருமால் தனது திருவுந்தியில் இருந்து தோற்றுவித்த பொன்மயமான முட்டையைப் போன்றி ருந்தது என்கின்றான் கம்பநாடன். (திருமால் தனது உந்தியில் இருந்து பிரம்மாவை தோற்றுவித்தான் என்பது புராணக் கருத்தாடல்).

### இலங்கையில் வாழும் மக்களின் செயல்கள்

இலங்கா நகரில் வாழும் மக்கள் ஒவ்வொருவரின் செயல்கள் எப்படி இருந்தன எனக் கம்பன். அழ குறக் கூறுகின்றான்.

**'பாடுவார் பலர் என்னின்,
மற்று அவரினும் பலரால் ஆடுவார்கள்,
மற்று அவரினும் பலர் உளர்,
அமைதி கூடுவார் இடை
இன்னியம் கொட்டுவர்,
முட்டு இல் வீடு காண்குறும்
தேவரால் விழ நடம் காண்பார்'**

அங்கு, பாடலைப் பாடுபவர்கள் பலர் என்றால், பாட லுக்கேற்றவாறு ஆடுபவர்கள் அவர்களிலும் பல ராம். ஆடுபவர்களிலும் சமயம் சேர்ந்து பொருந்தி அவையில் கூடியிருப்பர்கள் இடையில் பலவகை இசைக்கருவிகளை இசைப்பவர்கள் அதிகம். தேவ மங்கையரால் ஆடப்பெறும் சிறந்த நாட்டியத்தைக் காண்பவர்களும் பலர் அங்கு உள்ளனர்.

### இலங்கையின் செல்வச்செழிப்பு

நவநிதிகளும், பணியாளர்களைப் போல ஒதுங்கி நின்று ஆபரணங்களையும், ஆடைகளையும், மாலைகளையும், சந்தனத்தையும் கைகளில் தாங்கிக் கொடுக்கின்றன. இலங்கையில் வாழ்பவர் ஒவ்வொருவரும் அனுபவிக்கும் போகமாகும் இது. இத்தகு செல்வ வளங்களை எடுத்துச் சொன்னால் அதைக் கேட்பவர்களின் மன உறுதிப்பாடு தளர்ச்சி அடையும்.

இலங்கையின் மாட்சிமை என்றும் குறையாது கம்பராமாயணத்திலே சிறப்புறும் இலங்கையின் அழகினையும், அதன் பெருமையினையும் கம்பன் பாடல்களில் இங்கு கண்ணுற்றோம். கம்பன் பாடிய வண்ணமே இன்றும் நாம் வாழும் தாய்நாடான இலங்கையின் அழகும், எழிலும், அதன் வளங்க ளும் அளவிட்டுக் கூறி விடவோ அல்லது எண்ணிக் கணக்கிடவே முடியாத வண்ணம் விளங்குகின்றன என்றால் அது மிகையாகாது.

# நிணக் கவிதைகளில் அப்பிய சொற்கள்

## மொழியாளுமை மிக்கதான படைப்பு

○ மிஸ்ரா ஜப்பார்




ஈழத்து கவிதை மரபின் புதிய வீச்சு அல்லது வடிவ மாற்றங்களினால் எழுந்த புதிய எழுத்தின் கற்பி தங்களையும் பின்நவீனத்துவ மரபின் ஆளுமைக் கட்டமைப்பினையும் சப்னாஸ் ஹாஷிமின் 'நிணக் கவிதைகளில் அப்பிய சொற்கள்' கவிதைத் தொகுப் பில் காணலாம்.

கனவுகளின் தோரணையில் அசைவற்றுப் பிதுங்கும் நிசப்தத்தின் கடைசிப் பனித்துளியாய் 'நிணக் கவிதை களில் அப்பிய சொற்கள்' எனும் தலைப்பு விசித்திர ஈர்ப்பைக் கொண்டு சேர்க்கிறது.

பூடகமான அர்த்தப் படிமங்களால் நிறைந்து வழியும் சொல்லாளுமை வியப்பானது. கடும் கோடையில் சிலிர்த்திடும் ஒற்றைப் பனித்துளியின் யாகமாய், அவரின் மொழிமை முதல் வாசிப்பில் அகப்படாத மீள் வாசிப்புக்குரிய நுண்மையான கவிதைகளாகும். வடிவமற்ற ஒவ்வொன்றும் தனக்கான வடிவத்தை தேடிக் கொண்டுதான் இருக்கும்.

அந்த வகையில் சப்னாஸ் ஹாஷிம் தனக்கான முதல் தடத்தை நிலை நிறுத்தி விட்டார் என்றே கூற வேண்டும்.

சமகால தேர்ந்த எழுத்தாளர்களோடு சரி நிகராய் தனதெழுத்தாற்றலை இறுக்கமான சொல்லா டலினூடாக உணர்வலைகளை தூண்டும் விதமானது அழகு. புத்தகம் மீதான அவரின் தீராக்காதலும் தேடலுமே அவரின் சொல் லாட்சியின் அழகை மேலும் மெருகூட்டு கின்றன.

**'சிதிலமடைந்து அதிர்ந்து பாயும்
காட்டு வெள்ளமாய்
உணர்வாய்
கணங்களின் பெருக்காய்
நுரைத்துப் போகிறேன்'**

இவரின் கவிதைகளில் தென்படும் ஆழ்ந்த மனக் கிளர்ச்சி, தூர சிந்தனை, மெய்ப்படாக்கனவுகள், அழியா அனுபவங்கள், வாழ்வின் மீதான நுண்மை அத்துணையினதும் கூட்டு மொத்தத்தை இதில் நுக ரலாம்.

**'என் தேசத்தின்
விடுதலையின் பாடல்கள்
அதன் சுயாட்சியின் வரைபுகள்
என் காதுகளை
எட்ட வேண்டுகின்றேன்'**

ஆன்மாவின் நிறை வுக்கான பயணத்தில் பிரக்ஞை பூர்வமான அவ தானம் அவரின் மொழி மைக்கு மேலும் உயிரூட்டு கின்றது.

ஒவ்வொரு கவிதைக்கும் அவர் தேர்ந்துள்ள தலைப்புக் கள் மலைக்க வைக்கின்றன. புதிர்மையின் வியாக்கியானங் களுக்கு அர்த்தம் தேடுகின்றது என் ஆன்மா. முதல் தொகுப்பெனும் எண்ணம் கடந்து பூரணத்துவம் கொண்டு நிறைந்து நிற்கிறது.

இலக்கியவாதிகளால் பேசப்படக் கூடிய ஒரு தொகுப் பாகத் திகழும் என எதிர்வு கூறுகிறேன். பனிமலையில் உறைந்தும் பாலைவனங்களில் தீர்ந்தும் போகாத கவிகள் நித்தியமான எல்லைகளைக் கடந்து நிச்சல னமொன்றின் தேடலில் பவனி வருகிறது. 'நிணக்கவி தைகளில் அப்பிய சொற்கள்' மரத்துப் போன வெளி களை உயிர்ப்பிப்பதற்காய் சிறகடித்துப் பறக்கின்றன கவிதையின் யாகம்.

**கா ல த் தி ன் ப தி வு க ள்**

# ஒட்டுசுட்டானில் சிறப்பாக நடைபெற்ற வயல் விழா





முல்லைத்தீவு, மார்ச் 24

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அண்மையில் வயல் விழா சிறப்பாக நடைபெற்றது. இதன்போது சிறந்த விவசாய செய்கையாளர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், சின்ன வெங்காய விதை உற்பத்தியும் அறிமுகம் செய்யப்பட்டது.

ஒட்டுசுட்டான் விவசாய பயிற்சி பண்ணையில் பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் பூ.உகநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் மற்றும் மாவட்ட விவசாய பணிப்பாளர், ஒட்டுசுட்டான் உதவி பிரதேச செயலாளர், மன்னார் மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது சின்ன வெங்காய விதை உற்பத்தி மற்றும் சிவப்பு நெல் அறுவடை, காளான் செய்கை, லீக்ஸ் செய்கை ஆகியவை அறுவடை செய்யப்பட்டன.

இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட லீக்ஸ், கார்கில் நிறுவனத்துக்கு விற்பனை செய்யப்பட்டது.

மாவட்டத்தில் சிறந்த விவசாய செய்கையாளர்கள் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

எதிர்காலத்தில் பணப்பயிரான வெங்காய உற்பத்தியை முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகரிக்கும் நோக்கில் இந்த வயல் விழா ஏற்பாடு செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-19)

# இசை உலகின் ஜாம்பவான், மூத்த இசைக்கலைஞர், சங்கீத பூஷணம், கலா பூஷணம்



○ கே. எஸ். சிவஞானராஜா

பொன்னாலை எஸ். கணபதிப்பிள்ளை அவர்கள் 82 ஆவது வயதில் காலமானார்.

அனேக இசை விருதுகளைப் பேறாக்கிய பெருமையும், நூற்றுக் கணக்கான சீர்களை உருவாக்கிய உயர்ந்த இசை ஞானமும் கொண்டு விளங்கிய மனோதர்ம சங்கீத இசைப்பேரொசான் இவராவார்.

சங்கீத பிரதிக் கல்விப் பணிப்பாளராக இவர் கடமையாற்றிய காலம் இலங்கையின் இசை வரலாற்றில் பொற்காலமாகும்.

சுருதி லய பாவ சாகித்திய பிரமனாகச் சகல ஊடகங்களிலும் பிரகாசித்த இவரது மறைவு இசை உலகுக்கு ஒரு பேரிழப்பாகும்.



# சஞ்சிகை வெளியீடும் கண்காட்சியும்

கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தின் தரம் நான்கு மாணவர்களின் கையெழுத்தில் வெளிவந்த அரமியம் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வும், கண்காட்சி நிகழ்வும் நேற்று இடம்பெற்றன.

சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரியர் முருகேசு மைதிலி பிரியங்காவின் நெறிப்படுத்தலிலும், தொடர்ந்து இடம்பெற்ற கண்காட்சி நிகழ்வு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரியர் தியாகராசா சங்கவியின் நெறிப்படுத்தலிலும் சிறப்பாக நடைபெற்றன.

(ற-222)

கணபதி சர்வானந்தா

# அசைவின் அசைவின்மையாய்... ஆடல் இழைமங்கள்

இடர்வுற்றிருக்கின்ற நெருக்கடி மிக்க இந்தக் கால கட்டத்திலும் மனித மனங்களை ஆற்றுப்படுத்தும் வகையில் கலை கலாசார செயற்பாடுகள் நடைபெற்றுவருவது மன மகிழ்ச்சியைத் தருகிறது. அவ்வாறான நிகழ்வுகள் பல யாழ்ப்பாண - ஜேர்மன் கலாசார நிலையமான "கலம்" வளாகத்திலுள்ள அரங்கிலும் நடைபெற்றிருக் கின்றன. அந்த வரிசையில் "ஆடல் இழைமங்கள்" என்ற நிகழ்வின் தொடக்க விழா கடந்த 20.03.2021 சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

அவ்விழாவில், யாழ்ப்பாண மண்ணைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் சுயாதீன ஒளிப்படப் பிடிப்பாளரான தர்மபாலன் ரிலக்ஸனின் ஆடல் அசைவுகள் மற்றும் நளினங்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட ஒளிப்படங்களின் கண்காட்சியும், தொடர்ந்து அந்தப் படங்களில் அபிநயித்தவர்களது நாட்டிய நிகழ்வுகளும் இடம்பெற்றன.



அன்று தொட்டு இன்று புதன் கிழமை வரை மாலை 7 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை அக் கண்காட்சி மக்கள் பார்வைக்காகத் திறந்திருக்கும் என அந்த நிறுவனத்தின் இயக்குனர் நிக்லஸ் தெரிவித்தார்.

உடலும், உடல் எடுக்கின்ற பரிமாணங்கள் உடலுக்குள்ளால் வெளிப்படுகின்ற ஆடல் நளினங்கள் போன்றவை புகைப்படங்களாக எடுக்கப்பட்டிருக்கின்றன.

பாரம்பரிய நடன வகை ஒன்றை நவீன புகைப்படக் கலை ஊடாகப் பிரதிபலிப்பதே இந்த நிகழ்வின் விசேட அம்சம் எனலாம்.

நடனத்தின் முழு அசைவுகளிடையே ஒரு கணத்தைக் கண்டறிந்து இயல்பினை மாற்றாது, ஒளிச் சமநிலையைப் பேணி அதனை உலகுக்கு வெளிப்படுத்துகின்ற ஆற்றல் ரிலக்ஸனிடம் இயல்பிலேயே இருப்பதை அவ் ஒளிப்படங்கள் நிரூபித்திருக்கின்றன.

இந்த ஒளியும், வெளியும் கறுப்பும் வெள்ளையும் அவரது ஒளிப்படங்களில் காண்பிய அதிகாரபூர்வத் தன்மையை மேலும் அதிகரிக்கின்றன. அத்துடன் தீர்க்கமான கோட்டுத் தன்மையையும் பாரியத் தன்மையையும் கடைப்பிடிக்கும் அவரது ஒளிப்பதிவு இதன் காரணமான காண்பிய நிறையின் அதிகரிப்பையும் கோடிட்டுக் காட்டி நிற்கிறது.

வெளிக்கும் அதன் கனபரிமாண மேடையிலான உறவினைப் பரத நாட்டியத்தை முன்வைத்து பரிசோதிக்கும் இவர் ஒருவகையில் பல்பரிமாண கட்புல அனுபவங்களை நோக்கி அதனைத் திறப்பவராயும் இன்னொரு புறம் ஒரு வெளிக்கும் பொருளுக்குமான உறவு பற்றிய தத்துவார்த்தக் கேள்விக்கான பதில் தேடியதொரு பணயமாகவும்



தன்னுடைய ஒளிப்படங்களை முன்மொழிகிறார் என "ஆடல் இழைமங்கள்" தொடர்பில் வெளியிடப்பட்ட கைநூல் ஒன்றுக்கான முகவுரையிலே யாழ். பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளர் அகிலன் பாக்கிய நாதன் குறிப்பிட்டிருக்கிறார்.

# போர்க்களமாகும் தண்ணீர் வளம்

■ ஏ.டினேஷ்

விஞ்ஞானம் மெய்பித்த இன்றுவரையான உண்மைகளில் பூமியெனும் கோளில் மட்டுமே நீர்வளம் உள்ளது என்பதும் ஒன்றாகும். நீர்வளம் கொண்டதால் தான் இப்பூமி உயிர் உலவும் ஒன்றாக விளங்குகிறது. இதனை "நீரின்றி அமையாது உலகு" என வள்ளுவம் இயம்பும். இதற்கேற்ப மனிதனுக்கு மட்டுமல்ல சகல உயிரிகளுக்கும் அவற்றின் உயிர் நிலவுகைக்கான சகல செயற்பாடுகளுக்கும் நீர் தவிர்க்க முடியாதது.

இத்தகைய நீர் இன்று போட்டிப் பொருளாக, சந்தைப் பொருளாக, அருகிவரும் வளமாக பல்வேறு காரணங்களால் மாற்றப்பட்டுள்ளது. இந்தப் பேராபத்தை அடுத்துத்தான் ஐக்கிய நாடுகள் சபையால் 1992ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 திகதி முதன்முதலாக உலக தண்ணீர்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

நீர் திண்மம், திரவம், வாயு எனும் மூன்று வேறுபட்ட நிலைகளில் புவியில் காணப்படுகிறது. நீர் இன்று படிப்படியாக அழிந்து வருகின்றது. இந்த அழிவுக்கு நாடுகளுக்கிடையிலான போர், வறுமை, தகுந்த நீர் முகாமை இன்மை என்பவற்றை காரணங்களாகக் குறிப்பிடலாம். இப்பிரச்சினைகளுக்கு பின்னணி யாக பெருகிவரும் சனத்தொகை, நகர மயமாக்கல், காடழிப்பு, நீர் நிலைகளில் கழிவுப் பொருள்களின் வெளியேற்றம், தூர நோக்கற்ற விவசாய நடவடிக்கைகள் கனிய எண்ணெய் மற்றும் வளங்களின் அகழ்வு, கனியச் சுத்திகரிப்பு, நீர் போக்குவரத்தில் ஏற்படும் விபத்துக் கள், அசம்பாவிதங்களைக் குறிப்பிடலாம்.







### நீரும் உலகும்

நீருக்கான போர் இன்று உலகளாவிய பிரச்சினையாக கருதப்படுகின்றமையால் உலகளாவிய தீர்வுகளை நோக்கிய செயற்பாடுகள் உலக சுகாதார ஸ்தாபனம் போன்ற பொது நிறுவனங்கள், நாடுகள் மற்றும் தன்னார்வ அமைப்புகளால் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றின் தொழிற்பாடுகளும் நோக்கங்களும் நீர்ச் சிக்கனம், நீர்த்தூய்மை, நீர்சேரிப்பு தொடர்பான விழிப்புணர்வு, நீர்விரயமாகும் வழிகளை தடைசெய்தல், நீர் வளமுள்ள பிரதேசங்களைப் பாதுகாத்தல், மாசடைந்த நீரை மீண்டும் தூய்மைப்படுத்தல் எனும் நடவடிக்கைகளை அடிப்படையாக கொண்டமைந்தவை.

### நீரும் இலங்கையும்

எம் நாட்டைப் பொறுத்தவரையில் நீரைப் பேணிப்பாதுகாக்கும் பாரம்பரியம் காலங்காலமாக வரலாற்றில் இருந்து வந்துள்ளது. அந்தக் அரசர்களின் பிரதான கடமையாக நீர்ப்பாசனத்தை மேம்படுத்தல், நீரைப் பாதுகாத்தல் என்பவையே அமைந்தன. அவற்றுக்கு உறுதுணையாக குளங்களை சிறந்த தொழில்நுட்பத்தில் கட்டுவித்தமை, வாய்க்கால்களை அமைத்தமைக்கு இன்றும் சான்றுகள் உள்ளன. தற்போது இலங்கையின் நீர்வழங்களில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை பிரதானமாக பங்குகொள்கிறது. நீர்ப்பாசன திணைக்களமும் நீர்தொடர்பான பிரச்சினைகளைக் கையாள்வதுடன் நீர்ப் பாதுகாப்பிலும் அங்கம் வகிக்கின்றது.

இலங்கையின் நீர் முகாமைத்துவ நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதில் பல வெளி நிறுவனங்கள் அனுசரணை வழங்குகின்றன. இலங்கை ஒரு சிறிய தீவு நாடாகும். ஆகையால் கடல்நீர் நிலப்பரப்புக்குள் ஊடுருவி நன்னீரை மாசுபடுத்தும் சூழல் நிலவுகிறது. அதேசமயம் மக்களின் பொறுப்பற்ற நீர்ப்பாவனையாலும் பயன்படுத்தக்கூடிய நீரினளவு வெகுவாகக் குறைந்து வருகின்றது.

### யாழ்ப்பாணமும் தண்ணீரும்

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் நிலத்தடி நீர் வளமே பிரதானமாகக் காணப்படுகிறது. தீவக பிரதேசங்களில் ஒப்பீட்டளவில் நீர் பற்றாக்குறை அதிகமாகக் காணப்படுவதால் அந்தப் பிரதேசங்களில் மழை நீர் அறுவடை நடைமுறைபடுத்தப்படுகிறது. அதாவது இது தொட்டிகள், கிணறுகளில் மழை நீரைச் சேமித்தல் ஆகும்.

குடாநாட்டை அச்சுறுத்தும் நீர்ப்பிரச்சினைகளாக சவர்த்தன்மை அதிகரித்தல், நீரில் நைத்திரேற்று, நைத்திரைன்று உப்புக்கள் அதிகரித்தமையை குறிப்பிடலாம். சவர்த்தன்மையானது பிரதேசத்துக்குப் பிரதேசம் கடல் நீரின் தூரத்துக்கேற்ப மாறுபடுகின்றது. அதிகரித்த நிலக்கீழ் நீர் மூலங்களின் நுகர்வினால் சவர்த்தன்மை அதிகரிக்கின்றது. இதற்கு குழாய் கிணறு, நீர்ப்பம்பிகளின் தொழிற்பாடே காரணமாகும். எனவே கடல் நீர் ஊடுருவல் ஆரம்பித்த நிலையில் காலப்போக்கில் முழு நன்னீரும் மாசுபடும் அவல நிலைக்கு இந்தச் செயற்பாடுகள் இட்டுச் செல்லும் நிலை நிலவுகின்றது. குழாய்க் கிணறுகள் அமைக்க துறைசார் அனுமதி பெறுதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளபோதிலும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு மிகக் குறைவாகவே காணப்படுவதோடு மீறுவோர்க்கு தண்டனை நடவடிக்கைகளும் போதுமானதாக இல்லை.

ஏற்கனவே குறிப்பிட்டது போல நீரில் உப்புகள் அதிகரித்ததற்கு அதிகரித்த இரசாயன விவசாய உரப்பாவனையும் காரணமாகும். யூரியா போன்றவை குடாநாட்டில் அதிகம் பாவிக்கப்படுவதால் இந்த நிலை ஏற்படுகிறது. இந்த நீர் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வாக திருப்திகரமான கழிவுநீரகற்றும் மற்றும் சுத்திகரிப்புத்திட்டம் அறிமுகப்படுத்தப்படல், இரசாயன உரங்களுக்கு பதிலாக சேதன உரங்களை ஊக்குவித்தல், நிலத்தடி நீர் மீள் நிரம்பலுக்கு உரிய பொறிமுறைகளை பின்பற்றல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இங்கு நிலத்தடி நீர் மீள் நிரம்பலுக்கு மழை வீழ்ச்சியே ஒரே மூலமாகும். பருவ மழை வீழ்ச்சியின் 30-32 சதவீதம் மட்டுமே நிலத்தடி நீராகிறது. இது மனித செயற்பாடுகளால் குறைக்கப்படுகின்றது.

### நீரும் நாமும்

உலகளாவிய ரீதியில் நீரானது விவசாயம், மீன்பிடி, அல்காக்களின் வளர்ச்சி, கனிய வளப் பிரித்தெடுப்பு, நீர்மூலப் போக்குவரத்து, கைத்தொழில் மூலப் பொருள்கள், சுற்றுலாத்துறை எனப் பல்வேறு வழிகளில் பயன்படுகிறது. மேலதிகமாக கொரோனாப் பெருந்தொற்றுக்குப் பின்னர் உயிர்வாழ்தலை உறுதிப்படுத்த கைகழுவுதலுக்கு விசேடமாக பயன்படுவதையும் குறிப்பிடலாம். நீரின் பயன்பாட்டை நோக்கும் போது 85 வீதம் விவசாயத் துறையிலும் 10 வீதம் கைத்தொழிலிலும் 5 வீதம் வீட்டுப்பாவனைக்கும் பயன்படுகின்றது. இவ்வாறு அன்றாட வாழ்வில் தவிர்க்க முடியாத நீர் வளத்தின் இன்றைய சவால் 'நீர் மாசடைதல்' ஆகும். நீர் மாசடைதல் என்பது நீரின் பண்பு மற்றும் தரத்தில் ஏற்படும் மாற்றமாகும். இதனால் அந்த நீர் பயன்படுத்த முடியாத நிலையை அடைவதுடன் சூழலுக்கும் உயிரிகளுக்கும் பாதகமான விளைவை ஏற்படுத்துகிறது. தண்ணீர் படிப்படியாக அழிந்து வருவதைப்பற்றி "தாத்தா ஆற்றில் பார்த்தார், நான் கிணற்றில் பார்த்தேன், மகன் போத்தலில் பார்க்கிறான், பேரன் எங்கு பார்ப்பானோ!' என்று யாரோ புலம்பியது நெஞ்சை வதைக்கின்றது.

புலம்பல்கள் தீர்வைத் தருவதில்லை. நீர் எமது உயிர் நாடி எனும் கருத்தியலை எமக்குள் வலுப்படுத்துவோம். ஒவ்வொரு துளித் தண்ணீரையும் பாதுகாப்போம். தண்ணீர் எனும் அரிய வளத்தை எம்மால் முடிந்த வழிகளில் எல்லாம் பேணிப்பாதுகாத்து அதன் பெறுமதியை உணர்ந்து எதிர்காலச் சந்ததிக்கு விட்டுச் செல்வோம். ■



# நீதி கிடைக்காது போனால் தீக்குளிக்கவும் தயங்கோம்

## கண்ணீர் மல்க கதறினர் உறவுகள்

**திருகோணமலை, மார்ச் 24**
**காணாமல் ஆக்கப்பட்ட ஒருவரன் தந்தையொருவர் யாழ். மண்ணில் போராட்டத்தில் ஈடுபட்டு உயிரிழந்துள்ளார். இப்படியாக நாங்களும் இறக்க வேண்டி வரலாம், இனிமேல் தொடர்ச்சியாக இப்படியே இருக்க முடியாது. நீதி கிடைப்பதற்கு தீக்குளிக்க வேண்டியும் ஏற்படலாம், என்று காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டறிந்து தருமாறு கோரி திருமலையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவினர்கள் தெரி வித்தனர்.**

காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டறிந்து தருமாறு திருகோணமலை சிவன் கோயில் முன்றலில் இடம் பெற்று வந்த சாகும்வரை உணவு தவிர்ப்பு போராட்டம் நேற்றும் தொடர்ந்தது. மதியம் 12 மணிக்கு திருகோணமலை சிவன் ஆலய குருக்கள் மற்றும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பிரமுகர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட சங்கத்தின் தலைவி திருமதி நா.ஆசா மற்றும் திருமதி கோசளா தேவி ஆகிய இருவருக்கும் இளநீர் வழங்கி போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தனர்.

இது தொடர்பில் உறவுகள் தெரிவித்ததாவது;

எங்களுக்கான நீதியான முடிவுகள் இதுவரை எதுவும் கிடைக்கவில்லை. அரசு எங்களுக்கு விரைவான முடிவுகளைத் தருவதாக ஏமாற்று கின்றது.

தீர்க்கமான முடிவுகளைத் தரக் கோரியே இந்தப் போராட்டம் முன் னெடுக்கப்படுகிறது. சர்வதேச விசாரனண மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை போன்றன வற்றை வைத்து அரசு பதில் ஒன் றைத் தர வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளில் ஒருவர் யாழ். மண்ணில் போராட் டத்தில் ஈடுபட்டு உயிரிழந்துள்ளார்.

இப்படியாக நாங்களும் இறக்க வேண்டி வரலாம். இனிமேல் தொடர்ச்சியாக இப்படி இருக்க முடியாது. தீக்குளிக்க வேண்டியும் ஏற்படலாம். எங்களைத் தொடர்ந் தும் அரசு ஏமாற்றி வருகிறது. இதற்கான நீதியான சர்வதேச விசாரணை தேவை.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தைக் கை விடுங்கள் என்றும் இதற்கான தீர்வைப் பெற் றுத் தருகின்றேன் எனவும் கூறிய தால் இந்தப் போராட்டத்தை கைவிடுகிறோம் - என்றனர். (ப)

## நிரந்தர உத்தியோகத்தர் இல்லாததால் சேவை வழங்கலில் பின்னடைவு

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் தெரிவிப்பு

ஒட்டுசுட்டான், மார்ச் 24

ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கென நிரந்தர கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இல்லாததால், பொது அமைப்புக்களைத் தெரிவு செய்வதில் தாமதங்கள் ஏற்படுகின்றன என்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் சங்கங்கள் நீண்டகாலமாகத் தெரிவு செய் யப்படாமல் உள்ளன.

பொது அமைப்புகள் சீராக இயங்காததால் கிரா மங்களுக்குக் கிடைக்க வேண்டிய உதவித் திட் டங்கள் கிடைப்பதில்லை. அல்லது கிடைப்பதில் தாமதங்கள் ஏற்படுகின்றன. சில பொது அமைப் புகளிடம் இருக்கின்ற சொத்துகள் நீண்ட கால மாக பொது அமைப்புகள் தெரிவு செய்யப்படா ததன் காரணமாக முறைகேடாகப் பயன்படுத்தப் படுகின்றன என்று மக்கள் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் த.அகிலனிடம் கேட்ட போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த ஒரு ஆண்டு காலத்துக்கு மேலாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எமது பிரதேச செய லகத்தில் இல்லை.

துணுக்காய் பிரதேச செயலகத்தில் பணிபுரிபவர் துணுக்காயில் மூன்று நாள்களும் ஒட்டுசுட்டா னில் இரு நாள்களும் பணியாற்றுகின்றார்.

இதன் காரணமாகவே பொது அமைப்புகளைத் தெரிவு செய்வதில் தாமதங்கள் உள்ளன. கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கி ணைப்புக் குழுக் கூட்டத்திலும் மாவட்டத்தில் நிலவுகின்ற கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் களின் வெற்றிடங்கள் தொடர்பாக ஆராயப்பட் டுள்ளது - என்றார். (ஐ-13)

## சபைக்கு வருமானமெனில் திட்டத்துக்கு முன்னுரிமை

*வலி.தென்மேற்கு பிரதேச சபையில் தீர்மானம்*

வலி.தென்மேற்கு, மார்ச் 24

நிதி உதவி வழங்கும் நிறுவனங்களின் அறிவுறுத்த லுக்கு அமைய வலி.தென்மேற்கு பிரதேசத்தில் மக் களின் பங்களிப்புடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டங்களில் பிரதேச சபைக்கு வருமானம் கிடைக்கக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன் னுரிமை வழங்கப்படவுள்ளன.

இதற்கான தீர்மானம் பிரதேச சபையின் மாதாந்த அமர்வில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மக்களின் பங்களிப்பு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்ட வேலைத்திட்டங்களில் வீதி அபி விருத்தி தொடர்பான வேலைத்திட்ட முன்மொழிவுகளை தவிர்க்குமாறும், சபைக்கு வருமானம் கிடைக்கும் வேலைத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குமாறும் நிதி உதவி வழங்கும் நிறுவனங்கள் பிரதேச சபைக்கு அறிவுறுத்தியிருந்தன.

இதற்கமைய மக்களால் தெரிவு செய்யப்பட்டு முன் னுரிமை அடிப்படையில் பட்டியலிடப்பட்ட வீதி அபிவி ருத்தி வேலைத்திட்டங்களுக்குப் பதிலாக, வருமானம் தரக்கூடிய வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளன. இதேவேளை வலி.தென்மேற்கு பிரதேச சபையின் நிர்வாக பிரதேசம் நகர அபிவிருத்தி பிரதே சமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து இப்பிரதேசங்களில் அமைக்கப்படும் கட்டடங்களுக்கு அனுமதி வழங்கும் போது நகர அபி விருத்தி அதிகார சபையின் சட்ட திட்டத்துக்கு அமைய குழு அமைத்துச் செயற்படுவது என்றும் அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ-115)

## ஊடக சுதந்திரம் மீதான எச்சரிக்கை சமிக்ஞையே ஜனாதிபதியின் கருத்து

ஊடக இயக்கங்களின் கூட்டமைப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அண்மையில் ஊடகம் தொடர்பில் வெளியிட்ட கருத்தானது ஊடக சுதந்திரம் மற்றும் கருத்து தெரிவிக் கும் உரிமைக்கும் பெரும் அச்சுறுத் தல் விடுக்கும் சமிக்ஞை என்று ஊடக இயக்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் கவலை தெரிவித்து, அந்த அமைப்பு அனுப்பிவைத் துள்ள செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது;

ஊடக சுதந்திரம் என்பது ஊடக உரி மையாளர்களின் சுதந்திரம் அல்ல மற்றும் கருத்துக்களை திரிபுபடுத்தி அறிக்கையிடுதல் தவறான செயற் பாடு என்ற ஜனாதிபதியின் கூற்று டன் எமக்கு எந்தவித மாற்று கருத் தும் இல்லை. எனினும் ஜனாதிபதி குறிப்பிட்ட கூற்றின்படி ஏதோ சில ஊடக நிறுவனங்களை குறிவைத்து குறிப்பிடப்பட்டுள்ளதுடன், குறிப் பாக அரசுக்கு எதிராக விமர்சனக் கருத்துக்களைத் தெரிவிக்கும் ஊட கங்களை அச்சுறுத்தும் நடவடிக்கை யாகவே ஊடக இயக்கங்களின் கூட்டமைப்பு இச்செயலை காண் கின்றது. குறிப்பாக அந்த விடயம் எம்மிடம் நடக்காது. பாடம் பயில வேண்டுமாயின் பாடம் புகட்ட எமக்கு தெரியும். போர் காலங்க ளில் எமக்கு எதிராக பணியாற்றிய வர்களும் இதில் உள்ளனர் அவர் கள் மீள எழுந்துள்ளனர் போன்ற சொற் பிரயோகங்கள் கடந்த காலங் களில் பொது ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ள நேரிட்ட இன்னும் தீர்க்கப்படாத குற் றங்களின் நினைவூட்ட லாகும் என் பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த நிலைமை ஊடக வியலாளர்கள் மற்றும் ஊடக உரி மையாளர்கள் உட்பட சம்பந்தப்பட்ட அனைவரையும் அச்சுறுத்துவதாக வும், இதன் மூலம் ஊடக சுதந்திரம் மற்றும் தகவல் தெரிவிக்கும் உரிமை மீறப்படுகின்றது எனவும் ஊடக கூட்டணி நம்புகின்றது.

எனவே, ஊடக சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரத்து க்கான உரிமை தொடர்பான பிரச்சினை களை உண்டாக்கும் இத்தகைய அணுகுமுறைகளிலிருந்து விலகி, அதற்கான சுயாதீனமான, சுதந்தி ரமான சூழலை உருவாக்குமாறு ஜனாதிபதி, அரசு மற்றும் சம்பந்தப் பட்ட அனைத்துத் தரப்பினரையும் இலங்கை உழைக்கும் பத்திரிகை யாளர்கள் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம், இளம் பத்திரிகையாளர் கள் சங்கம், இலங்கை தமிழ் ஊட கவியலாளர் ஒன்றியம், ஊடக தொழிலாளர் தொழிற்சங்க சம்மே ளனம் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் போன்ற இயக்க ங்களின் ஒன்றிணைப்பான ஊடக இயக்கங்க ளின் கூட்டமைப்பு கேட்டுகொள்கின்றது - என்றுள் ளது. (ப)



## சுகாதார பரிசோதகருக்கு அறிவியலுக்கான விருது

**மிருசுவில், மார்ச் 24**

**பொதுச் சுகாதாரப் பரிசோத கர் ஆ.ஜென்சன் றொனால்ட் டினால் (கவிஞர் சூரியநிலா) எழுதப்பட்ட "சுகவிழி" எனும் சுகாதார மேம்பாட்டு நூலுக்கு மாகாண ரீதியான தெரிவில் அறிவியலுக்கான சிறந்த நூல் விருது வழங்கப்பட் டுள்ளது.**

**வடக்கு மாகாண கல்வி, பண் பாட்டலுவல்கள் விளையா ட்டுத்துறை மற்றும் இளை ஞர் விவகார அமைச்சு இந்த விருதை நேற்றுமுன்தினம் வழங்கியது.**

2020 ஆம் ஆண்டுக்கான பண்பாட்டுப் பெருவிழா நிகழ் வில் வைத்து இந்த விருது வழங்கப்பட்டது. (ஐ.9)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### வவுனியா...

போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது என்று வவுனியா குளத்துக்கான மக்கள் செயலணி தெரிவித்துள்ளது,

செயலணி அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

வவுனியாவிலுள்ள பல குளங்கள் மற்றும் விவசாய நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு, எங்கள் கண்முன்னேயே இல்லாமல் போய்க்கொண்டிருக்கின்றன. வவுனியா எனப் பெயர்வரக் காரணமான வவுனியன் விளாங்குளம் (வவுனியாக்குளம்) பலவழிகளாலும் கொஞ்சம் கொஞ் சமாக இல்லாமல் செய்யப்படுவது பெரும் ஆபத்தான நிலையை உருவாக்கியுள்ளது. நாங்கள் எதிர்வு கூறி யது போன்றே துரதிஷ்டவசமாக மக்கள் எதிர்ப்பை மீறியும் பொழுதுபோக்கு என்ற போர்வையில் குள ஆக்கிரமிப்பு விஸ்தரிக்கப்பட்டு க்கொண்டே செல்கிறது. நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் நகரசபையின் எதிர்ப்பையும் மீறி குளத்தில் மேலும் 2 ஆயிரம் சது ரமீற்றரிலும் அதிகமான நீரேந்து பகுதி மண்ணிட்டு நிரப்பப்பட்டு சிற்றுண்டிச்சாலை அமைக்கப்பட்டுள்ளது. எனவே இதனை படிப்பனையாகக் கொண்டு சுற்றுலா மையம் என்ற பெயரில் குளத்தில் கொட்டப்பட்ட மண் முற்றாக அகற்றப்பட்டு நீரேந்து பகுதி பழைய நிலைக் குக் கொண்டுவரப்படவேண்டும் என்பது எமது உடனடிக் கோரிக்கையாக உள்ளது. எழுத்து மூலமும் நேரிலும் இக் கோரிக்கைகள் அரச அதிகாரிகளிடமும் மக்கள் பிரதிநிதிகளிடமும் பலமுறை வழங்கப்பட்டும் சரியான நடவடிக்கைகள் இன்மையால் போராட்டம் ஒன்றுக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். பல்வேறு சமூகம் சார்பான அமைப்புகள் சந்தித்துக் கலந்துரையாடியதன் அடிப்ப டையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை பண்டார வன்னியன் சிலை முன்றலில் அமைதியான முறையில் சத்தியாக் கிரகப் போராட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு தீர்மா னித்துள்ளோம் என்றுள்ளது. (ஜ-110)

### உருத்திரபுரீஸ்வரர்...

வித்துள்ள நிலையில் எதிர்ப்புத் தெரிவித்து நேற்று இரண்டாவது நாளாகவும் மக்கள் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்தில் அனைத் துத் தமிழ் மக்களுக்கும் கலந்துகொண்டு பலம் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரர் ஆலய வளாகத்தில் தொல்பொருள் எச்சங்கள் உள்ளன என்று தெரிவித்து தொல்பொருள் திணைக்களம் அகழ்வுப் பணிக்கான ஆயத்தங்களைச் செய்து வருகின்றது. தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளும், பொலிஸாரும் அந்த இடத்துக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டிருந் தனர். இன்று அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் திணைக்களத்தின் இந்த நடவடிக்கை, தமிழ் மக்கள் பூர்வீகமாக வழிபட்டுவரும் இடங்களைப் பௌத்த மயமாக்கும் திட்டமிட்ட செயல் தமிழ் மக்க ளால் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

உருத்திரபூரீஸ்வரத்தில் அகழ்வு நடத்த எடுக்கப்பட் டுள்ள முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் நேற்றுமுன்தினம் சுழற்சிமுறையிலான கவனவீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். இந்தப் போராட் டம் நேற்றும் தொடர்ந்தது.

ஆலய நிர்வாகத்தினர், கிராம மக்கள், அரசியல்வாதி கள், ஒன்றிணைந்து நேற்று இந்தப் போராட்டத்தைக் காலை முதல் மாலைவரை மேற்கொண்டனர். (எ-ப)

### யாழ்.நகர...

வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அதிக சன நெரிசல் கொண்ட சந்தையாகக் காணப்ப டும் யாழ்ப்பாணம் நகர மரக்கறிச் சந்தையில் தொற் றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், இது புதிய கொத்தணியாக உருவெடுக்கலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது.

யாழ்ப்பாணம் நகரில் உள்ள மரக்கறிச் சந்தையில் 60 பேருக்கு எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவற்றின் முடிவுகள் நேற்றிரவு கிடைத்த நிலையில், 9 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றுடன் இனங்காணப்பட்ட 6 பேர் பனை உற்பத் திப் பொருள் விற்பனையாளர்கள். 3 பேர் மரக்கறி விற்பனையாளர்கள்.

தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியோரை இனங்கண்டு தனிமைப்படுத்தும் நட வடிக்கைகள் சுகாதாரப் பிரிவினரால் நேற்றிரவு ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

சந்தை வியாபாரிகள் அனைவரையும் சுயதனிமை ப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மரக் கறி, பழங்கள், உள்ளூர் உற்பத்திகள் மற்றும் வெற் றிலைக் கடைகள் உள்ள பகுதிகள் நேற்றிரவு முதல் முடக்கப்பட்டன. (எ-26)

### குருந்தூரில்...

பௌத்த பூமியாக சுவீகரிக்கும் நடவடிக்கையை தொல் பொருள் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. குருந்தூர்மலையைச் சுற்றியுள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் அமைந்துள்ள பகுதிகளை தம்மிடம் ஒப்படைக்குமாறு கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளருக்கு தொல்பொருள் திணைக்களம் எழுத்து மூலமாக அறிவித்துள்ளது. முல்லைத்தீவு மாவட்டத் தின் குருந்தூர் மலையில், 1932 ஆண்டு உறுதியின் படி தொல்பொருள் என்ற பெயரிலான வரைபடம் ஒன்றின்படி 78 ஏக்கர் காணி வழிபாட்டிடம் ஒன்றுக் காக ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த இடத்தை மீள அள வீட்டுக்காக அறிவிக்கும்படி பிரதேச செயலாளரிடம் தொல்லியல் திணைக்களம் கேட்டது. இதன்படி கொழும்பிலிருந்து வந்த நில அளவையாளரால் கடந்த வருட இறுதிப் பகுதியில் இப்பிரதேசம் அளவீடு செய் யப்பட்டு குருந்தாவ விகாரை தொல்லியல் பிரதேசம் என குறிப்பிட்டு 78 ஏக்கர் வரையான நிலம் அதில் உள்ளடக்கபட்டிருந்தது. இதன் தொடர்சியாக கடந்த ஜனவரி 18 ஆம் திகதி இராணுவமும் தொல்லியல் திணைக்

களமும் இணைந்து தொல்லியல் ஆய்வு பணிகளை குருந்தூர் மலையில் ஆரம்பித்திருந்தன. இந்த நிலை யில், குருந்தூர் மலையை சுற்றியுள்ள 400 ஏக்கர் காணியை தொல்பொருள் திணைக்கத்துக்கு வழங் கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த 400 ஏக்கரில், சுமார் 150 ஏக்கர் காணி, தண்ணி முறிப்பு கிராமத்துக்குரிய தமிழ் மக்களுடையதாகும் , மிகுதிக் காணிகள் நாகஞ்சோலை வனப்பகுதியில் உள்ளடங் குகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் தமது காணிகளை சுத்தம் செய்து விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் நோக்கோடு தண்ணிமுறிப்பு கிராம மக்கள் வேலைகளில் ஈடுபட்டி ருந்த நிலையில் பௌத்த தேரர்கள் தலைமையிலான தொல்லியல் திணைக்களக் குழுவினரால் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்டிருந்தனர். தற் போது அவசர அவசரமாக இந்தக் காணிகளைக் கோரி பிரதேச செயலகத்துக்கு கடிதம் அனுப்பபட் டுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி முல்லைத்தீவு மாவட்ட ஒருங் கிணைப்புக்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்த கூட்டத்தில், தொல்பொருள் திணைக்களத்தால் கோரப்பட்டுள்ள 400 ஏக்கர் காணி விடயமும் ஆராயப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

## கணினி வகுப்பறை திறப்பு

வவுனியா,மார்ச் 24

வவுனியா ஒலுமடு நெடுங்கேணி பிரதேசத்தில் இயங்கிவரும் சிவனருள் இலவச கல்வி நிலை யத்தில் புதிதாக கணினி வகுப்பறை கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு அண்மையில் திறக்கப் பட்டது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா வடக்கு வலய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆசிரிய ஆலோசகர் ச.சிவராசா கலந்துகொண் டார்.

இரட்ணம் பவுண்டேசன் நிறுவனத்தால் இந்த வகுப்பறை கட்டடம் அமைக்கப்பட்டு மாணவர்க ளின் பயன்பாட்டுக்கு கையளிக்கப்பட்டது. (ஐ)



## காடழிப்புக்கு எதிராக இன்று ஆர்ப்பாட்டம்

### கோத்தாவுடன் மோதுவதற்கு தயாராகும் எதிர்க்கட்சிகள்

கொழும்பு,மார்ச் 24

நாட்டில் தற்போது முன்னெடுக்கப்படும் வன அழிப் புக்கள் மற்றும் சுற்றாடல் சீரழிவு கள் தொடர்பில் உண் மைகளை வெளிப்படுத்துமாறு கோரி, கொழும்பு விஹாரமாதேவி பூங்காவில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்ப டவுள் ளது. ஐக்கிய மக்கள் சக்தி இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது.

அதேவேளை பொது மக்களுக்கும் , ஊடகங்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடி யாது.

நாட்டில் தற்போது மேற்கொள்ளப்படுகின்ற வன அழிப்பு மற்றும் சுற்றாடல் சீரழிவுகள் தொடர்பில் மக் களைத் தெளிவுபடுத்துவதற்கான மாநாடுகளை சகல மாவட்டங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களில் நடத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத் துள்ளது. அத்துடன் அரசின் மோசடிகளுக்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளார். காடழிப்புத் தொடர்பில் தனக்கு எதிராக போலியான பரப்புரைகள் முன்னெ டுக்கப்படுவதாக ஜனாதிபதி கோத்தாபய தெரிவித்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)



## யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு சைக்கிள்!

நெல்லியடி, மார்ச் 24

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 52 மாணவர்களுக்கு நெல் லியடி மைக்கல் நேசக்கரத்தால் சைக்கிள்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன.

மைக்கல் நேசக்கரத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, யாழ்ப்பாணம் மற்றும் வன்னியில் யுத் தத்தில் தாய் அல்லது தந்தையை இழந்த மாணவர் களுக்கே இந்தச் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இதன்போது மேற்படி அமைப்புக்கென தயாரிக்கப்பட்ட ரிசேட் செயற்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்டதுடன் அமைப்பின் கொள்கை விளக்கப்பாடல் ஒன்றும் வெளியிடப்பட்டது. (ற-இ)

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியை
திருமதி
**பிரபாலினி வரதராஜன்**
(S.L.T.S. - I, Primary Trd, B.Ed, M.Ed
குரு பிரதீபா பிரபா விருது)

அவர்களின் திடீர் மரணச் செய்தி அறிந்து மிகவும் மனவருத்தம் அடைகின்றோம். துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரிற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ யாழ் இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 30-03-1954
மறைவு 10-03-2021

எமது ஆலய பரிபாலன சபைத்
தலைவர் **திரு.ஐ.சிவபாலசுந்தரம்**
அவர்களது சகோதரி
**அமரர் செல்வமனோகரி புஸ்பநாதன்**

அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றோம்.

**பரிபாலன சபை
ஓடையம்பதி கற்பகவிநாயகர் ஆலயம்
உரும்பிராய்.**

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## ஆதனப் பெயர்மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம்: 10,கண்டிவீதி, 457, 457A என்னும் வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனம் கந்தையா வேலுப்பிள்ளை என்னும் பெயரில் ஆதனவரிப் பதிவேட்டில் காணப்படுகிறது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை சாவகச்சேரி கந்தையா வேலுப்பிள்ளையும் பெண் நாகம்மாவும் பிரசித்த நொத்தாரிசு கிருஷ்ணபிள்ளை துரைசிங்கம் முகதாவில் 1957.05.31 ஆம் திகதியிடப்பட்ட 8958 ஆம் இலக்க சீதன உறுதி மூலம் மகள் நடேசன் பெண் அன்னலட்சுமிக்கு சீதனமாக வழங்கியுள்ளனர்

பின்னர் 1957.05.31 ஆம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு கிருஷ்ணபிள்ளை துரைசிங்கம் முகதாவில் 8958 ஆம் இலக்கத்தில் 2ஆம் பெயரின் மாதா காலஞ்சென்ற நடேசன் பெண் அன்னலட்சுமி பெயரில் நிறைவேறிய சீதன உறுதிப்படி அவரின் ஏக புதல்வியாகிய 2ஆம் பெயரை வந்தடைந்த மாதாவழி முதுசமும் ஆட்சியுமானது என கண்டிவீதி, பெரியரசடி, சாவகச்சேரி தில்லையம்பலம் சிவானந்தனும் பெண் செல்வறஜனியும் பிரசித்த நொத்தாரிசு மு.சே.இராசையா முகதாவில் 2018.08.01 ஆம் திகதியிடப்பட்ட 8904 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் சிவானந்தன் திருவரங்கனுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோயிற் பற்று, சாவகச்சேரி இறை "கரடிக்குளி வளவும் செல்லாத்தை வளவு 2 பிரிவும்" நிலப்பரப்பு- 9. இது உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வல்லிபுரம் சிவராசா 06.03.1990 ஆம் திகதியில் அளந்து வரைந்த 976 இலக்க அளவைப்படத்தின்படி நிலப்பரப்பு 9 குழி 4.85. இதற்கு எல்லை;

வடக்கு : சுப்பிரமணியம் ஜெயருபனுக்குரிய ஆதனம்

கிழக்கு: கண்டிவீதி

தெற்கு: சிவானந்தம் செல்வறஜனிக்குரிய ஆதனம்

மேற்கு: பெரியரசடி ஒழுங்கை

தற்போது சிவானந்தன் திருவரங்கன் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்கமுடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப்பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சிமன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தவிசாளர்,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்



### திருமதி பிரபாலினி வரதராஜன்

(MED, BED (Primary) Primary Trained)

ஆசிரியர், பகுதித் தலைவர், யா / இந்து ஆரம்பப் பாடசாலை)

சாவகச்சேரி மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிரபாலினி வரதராஜன் கடந்த ஞாயிற்றுக்கிழமை 21.03.2021 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கந்தசாமி - சிவஞானம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி செல்லத்துரை - சேதுப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகளும், வரதராஜன் அவர்களின் அன்பு மனைவியும், உமையாள் (மருத்துவபீட மாணவி, பங்களாதேஸ்) அவர்களின் ஆருயிர் தாயாரும், சுபாஸ்கரன் (பிரான்ஸ்), சுரேஸ்கரன் (நோர்வே), சுதேஸ்கரன் (ஆசிரியர் யா/ மீசாலை விக்னேஸ்வரா ம.வி), சுபாலினி (ஆசிரிய ஆலோசகர் வவு. வடக்கு வலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, திலகவதி, ராஜலக்ஸ்மி, சாந்தநாயகி, கமலாம்பிகை (லண்டன்), புவனேஸ்வரி (ஆசிரியை - யா / நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வி), லதா (பிரான்ஸ்), திலகா (நோர்வே), சு.தேவரதி (பிரதி அதிபர் யா/ டிறிபேக் கல்லூரி- சாவகச்சேரி), வசந்தகுமார் (தபாலகம் வவுனியா) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.03.2021) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் (இல. 138/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்) இடம்பெற்று தகனக் கிரியைகளிற்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கோட்டுக் கொள்கின்றோம்.

**138/1, பருத்தித்துறை வீதி,**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### இராசரத்தினம் பரிமளகாந்தன்



**பிறப்பு** **25.07.1961**

**இறப்பு** **17.03.2021**

யாழ் மானிப்பாய் உடுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், நோர்வே Oslo வை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் (செல்லப்பா துரைசிங்கம், பேப்பர் ஏஜன்ட்) பரிமளகாந்தன் அவர்கள் (17.03.2021) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசதுரை நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பாலறஞ்சினி அவர்களின் அன்புக் கணவரும், பானுஷா உஷநாத் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிரோஸ் அவர்களின் பாசமிகு மாமனாரும், பரிபூராணந்தன், சிவானந்தன், செல்வானந்தன், ஜெயரூபி, சுந்தரலட்சுமி, தயாளினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் பாலச்சந்திரன், பாலபாஸ்கரன், விஜயகுமார், மங்களேஸ்வரி (ராணி), சரோஜினிதேவி (மணி), சந்திரமலர் (வதனி), யோகரஞ்சினி, காலஞ்சென்ற சரோசினி மற்றும், உமாமகேஸ்வரி, உதயகுமார், சந்திகுமார், வரதலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2021) புதன்கிழமை மு.ப 9.00 மணியளவில் நோர்வே (Helsfyr graveland) இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பரிபூராணந்தன்-077 614 4129**
**சிவானந்தன்- 077 983 9429**

**தகவல்:**
**சகோதரர்கள்**

# 1ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 18 . 05 . 1953

மறைவு 24 . 03 . 2020

காரைநகர், நீலிப்பந்தனையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்து சித்தன் கேணியில் வசித்து வந்த கதிரவேலு சிறீகரன் அவர்களின் 1ம் ஆண்டு நினைவு அஞ்சலி

## அமரர் கதிரவேலு சிறீகரன்

**(ஓய்வுநிலை கிராம சேவை அலுவலர்)**

குடும்பத்தின் ஒளி விளக்காய், குல மகனாய், தலை மகனாய்,
கணவனாய், சகோதரனாய், மாமனாய், மைத்துனனாய்,
தாத்தாவாய் அனைவரையும் அன்போடும், பண்போடும்,
பாசத்தோடும் அரவணைத்து நல்வழி நடத்தி இல்லறமே நல்லறம்
என ஊர்போற்ற உழைத்த உத்தமனே!
கிராம சேவை அலுவலர் என்ற அரச பதவி ஊடாக பலரும்
போற்றும்படி இரவு பகல் பாராது பணியாற்றிய சமூகத் தொண்டனே!
இறை பணியில் ஈடுபட்டு பல ஆலயங்களின் வளர்ச்சிக்கு
உழைத்த இறைவனின் தொண்டனே!
உறவினர்கள், நண்பர்கள், ஊரவர்கள் அனைவரதும் கருமங்களை முன்னின்று நடாத்தி
வந்த நல்லுள்ளம் கொண்ட மக்களின் சேவகனே!
நீங்கள் இல்லாத வெறுமை எம் நெஞ்சில் சுமையாக கனக்கிறது.
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு நீங்கள் எங்கும் செல்லவில்லை எங்கள் மனங்களில்
என்றென்றும் நீக்கமற வாழ்ந்து கொண்டே இருப்பீர்கள்.
தங்களது ஆத்மா சாந்தியடைய நீலிப்பந்தனை துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிள்ளையார் கோயிலடி,**
**சித்தன்கேணி.**

**குடும்பத்தினர்.**

# ஈராண்டு நினைவுகள்



தோற்றம் 11.04.1927

மறைவு 16.03.2019

அமரர்

## கனகரத்தினம் தம்பாபிள்ளை

(முன்னாள் உப அதிபர் – யா/ விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம்)

எங்கள் அன்புத் தெய்வமே!
ஈராண்டுகள் சென்றாலும்
ஈரவிழிகள் காயவில்லை....

உங்கள் பிரிவால் வாடும்
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

# இந்தியா செய்தது துரோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

இலங்கைக்கு எதிரான பிரேரணையில் கலந்துகொள்ளாமல் விட்டமையானது தமிழர்களுக்கு பா.ஜ.க. அரசு (இந்தியா) செய்த பச்சைத் துரோகம் என்று தி.மு.க.வின் தலைவரான மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டில் தேர்தல் இடம்பெறவுள்ளதால் தான் இந்திய அரசு நடுநிலை வகித்தது. இல்லையென்றால் இலங்கைக்கு ஆதரவாகவே வாக்களித்திருக்கும். இதைத் தமிழர்கள் மன்னிக்க மாட்டார்கள் என்றும் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார். (ம)

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## ஆதனப் பெயர்மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் - 09, கண்டுவில் 2ம் ஒழுங்கை, 17 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சச்சிதானந்தம் பெண் வசந்தாதேவி என்னும் பெயரில் ஆதனவரிப் பதிவேட்டில் காணப்படுகிறது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை சாவகச்சேரி தெற்கு கதிரவேலு செல்லையாவும் பெண் செல்லம்மாவும் பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் கந்தசாமி முகதாவில் 05.06.1968 ஆம் திகதியிடப்பட்ட 2281ம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதி மூலம் சிதம்பரநாதர் சச்சிதானந்தம் பெண் வசந்தாதேவி என்பவருக்கு சீதனமாக வழங்கியுள்ளார்.

பின்னர், சாவகச்சேரி தெற்கு தற்போது கனடா சச்சிதானந்தம் முகுந்தன் அதே முகவரி பிரபாகரன் பப்ரிஸ்ற் உம் மனைவி சிறோமியும் அதே முகவரி சச்சிதானந்தம் மகள் ஆரணி ஆகியோர் 24.12.2016ம் திகதிய S.கணபதிப் பிள்ளை பிரசித்த நொத்தாரிசு அவர்களது அற்றோனித்தத்துவத்தின் பிரகாரம் கண்டுவில் 2ம் ஒழுங்கை, சாவகச்சேரி என்னும் முகவரியைக் கொண்ட தம்பிராஜா இராசமலர் மூலம் பிரசித்த நொத்தாரிசு செல்லையா கணபதிப் பிள்ளை முகதாவில் 21.02.2017 ஆம் திகதியிடப்பட்ட 3751ம் இலக்க அறுதி உறுதி மூலம், மாதா இறந்த பின்னர் மேற்குறித்த முதலாம் மூன்றாம் நான்காம் பெயர்களின் சொந்தமும் மாதா வழி முதுசொமும் என வெளிப்படுத்தி கண்டுவில் 2ம் ஒழுங்கை, சாவகச்சேரியைச் சேர்ந்த கனகசபை உதயகுமாரும் மனைவி மகிந்தாவும் என்பவர்களிற்கு அறுதியாக வழங்கியுள்ளனர்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று சாவகச்சேரி இறை“அதிகமான்பறுகு” நிலப்பரப்பு (4,1/2) நான்கரை. இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் வல்லிபுரம் சிவராசா அவர்கள் 14.01.2017 ஆம் திகதியில் அளந்து வரைந்த 5447 ஆம் இலக்கப்படத்தின் படி துண்டு 1 எனச்சுட்டப்பட்ட பாகம் நிலப்பரப்பு நான்கு(4) குளி பூச்சியம் ஒன்பது தசம் பூச்சியம் பூச்சியம் (09.00).இதற்குள்ளிருக்கும் பழைய வீடு அடங்கலும் இதைச்சேர்ந்தவைகளும் இதற்கு எல்லை

கிழக்கு: கதிரவேலு செல்லையாவினதும் மனைவி செல்லம்மாவினதும் பிள்ளைகளுக்குரிய மிகுதி ஆதனம்
வடக்கு: சின்னத்தம்பி நடராசலிங்கத்திற்குரிய ஆதனம்
மேற்கு: கதிரவேலு செல்லையாவினதும் மனைவி செல்லம்மாவினதும் பிள்ளைகளுக்குரிய மிகுதிஆதனம்
தெற்கு: கண்டுவில் 2ம் ஒழுங்கை

தற்போது கனகசபை உதயகுமாரும் மனைவி மகிந்தாவும் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப் பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சனைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தவிசாளர்
நகராட்சி மன்றம்
சாவகச்சேரி.

# மரண அறிவித்தல்

மலர்வு 15 . 10 . 1943



உதிர்வு 22 . 03 . 2021

## திருமதி மேரிதிரேசா வின்சஸ்லோஸ்

**(யோகரட்ணம் - யோகா)**

யாழ். இளவாலையைப் பிறப்பிடமாகவும், யாழ். அச்சுக்கூட வீதி, பிரதான வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. மேரி திரேசா வின்சஸ்லோஸ் (யோகா) அவர்கள் 22.03.2021 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - நேசம்மா தம்பதிகளின் அன்பு புதல்வியும் காலஞ்சென்றவர்களான ஜோசப் அன்னம்மா தம்பதிகளின் அன்புமருமகளும், காலஞ்சென்ற ஜோசப் புஸ்பராஜா வின்சஸ்லோஸ் அவர்களின் அன்பு மனைவியும் Bernadine Vinothini (Australia), Bettina Eshanthini (Norway), Polinus Jehan (London) ஆகியோரின் பாசமிகு தாயாரும், Johnson Jesuthasan (Australia), Roy Kengakaran (Norway), Tharany (London) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற ஜோர்ச் ராஜேஸ்வரி (பேபி - பிரான்ஸ்), அன்ரன் ஜோசப் (ஜெயராஜா - பிரான்ஸ்), ஜேசுதாசன் (செல்வராஜா - கனடா), பத்திநாதர் (ஜோகராஜா - கனடா), பெனடிற் (பேபிராஜா - இலங்கை), விமநாதன் (ராஜன் - பிரான்ஸ்), காலஞ்சென்ற புஸ்பராணி (மலர் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு சகோதரியும், Angelo, Jeramy, Jayden, Jovitta, Patricia ஆகியோரின் அன்பு பேர்த்தியும்ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக நாளை (25.03.2021) வியாழக்கிழமை காலை 8.00 மணி முதல் 2.30 மணி வரை பிரதான வீதியில் அமைந்துள்ள White House மண்டபத்தில் வைக்கப்பட்டு பின்னர் 3.00 மணிக்கு யாழ் தூய மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**மகள் - Bernadine Vinothini (Australia)**
**மகள் - Bettina Eshanthini (Norway) - 004740604446, 0773771473**
**மகன் - Polinus Jehan (London) - 00447985124608**

# குருதிக்கொடையும் மருத்துவ முகாமும்

சாவகச்சேரி, மார்ச் 24

மீசாலை தெற்கு மதுவன் சமூக நிலையத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவையொட்டி குருதிக் கொடை நிகழ்வும் இலவச மருத்துவ முகாமும் நிலைய மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. குருதிக் கொடை வழங்க விரும்புவோரும் இலவச மருத்துவ முகாமில் கலந்துகொள்ள விரும்புவோரும் காலை 8 மணிக்கு நிலையத்துக்கு வருகை தருமாறு நிர்வாகத்தினர் கோரியுள்ளனர். இதேவேளை, நிலையத்தின் ஆண்டு விழா நிகழ்வுகளும் பரிசில்கள் வழங்கலும் நிலைய மண்டபத்தில் நாளை நடைபெறும். நிலையத் தலைவர் சிறிகரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் கலந்துகொள்வார்.

(த-9)

# வாழைப்பழத்தால் பறிபோனது உயிர்

கொழும்பு, மார்ச் 24

குருநாகல் பிரதேசத்தில் வாழைப்பழத்தின் விலை அதிகம் எனக்கூறி வன்முறையில் ஈடுபட்ட வாடிக்கையாளர் ஒருவர், வர்த்தக நிலையமொன்றின் ஊழியரைத் தாக்கிக் கொலை செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் குருநாகல் நகரின் பெரகும்பா வீதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் இடம்பெற்றது. கடந்த 20 ஆம் திகதி மேற்படி சந்தேகநபர் குறித்த வர்த்தக நிலையத்துக்கு சென்று வாழைப்பழத்தின் விலை தொடர்பில் விசாரித்துள்ளார். அதன்போது, பழம் ஒன்றின் விலை 30 ரூபா என வர்த்தக நிலைய உரிமையாளர் தெரிவித்துள்ளார். அதன்போது, கோபமடைந்த வாடிக்கையாளர், வர்த்தக நிலைய உரிமையாளரையும் ஊழியரையும் தாக்கியுள்ளார். அதனைத் தொடர்ந்து போத்தலால் குறித்த ஊழியரைத் தாக்கிக் கொலை செய்துள்ளார் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. கொலைக் குற்றச்சாட்டில் அந்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று குருணாகல் பொலிஸார் தெரிவித்தனர்.

(த-இ)


## மரண அறிவித்தல்

தோற்றம்
31 . 12 . 1937



மறைவு
23 . 03 . 2021

### நாகலிங்கம் சிற்றம்பலம்

(அரச ஒப்பந்தகாரர்)

வீரவாணி வாதரவத்தை புத்தூரைப் பிறப்பிடமாகவும். இல:47. ஆடியபாதம் வீதி திருநெல்வேலியை வசிப்பிடமாகவும். கொண்ட நாகலிங்கம் சிற்றம்பலம் நேற்று (23.03.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம். தங்கம்மா தம்பதிகளின் மகனும். காலஞ்சென்றவர்களான சரவணமுத்து இளையபிள்ளை தம்பதிகளின் மருமகனும். காலஞ்சென்ற கமலவேணியின் அன்புக் கணவரும். சிவராணியின் அன்புத் தந்தையும். சற்குணேஸ்வரன் (வீதி அபிவிருத்தி அதிகாரசபை. யாழ்ப்பாணம்) அவர்களின் மாமனாரும். கார்த்திகா. விவேகா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் பேரனும். காலஞ்சென்றவர்களான அழகம்மா. நவரத்தினம் மற்றும் நவமணி. மகேஸ்வரி. கனகசபை. காலஞ்சென்ற இராசையா ஆகியோரின் சகோதரனும். காலஞ்சென்றவர்களான கதிரவேலு. நவரட்ணம் மற்றும் கணேசலிங்கம் (T.O) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2021) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 1.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 601 3591

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நல்லையா நதீஸ்குமார்



மண்ணில் 16.04.1979
விண்ணில் 19.03.2021

கோண்டாவில் கிழக்கு. சென் செபஸ்தியார் வீதியினைப் பிறப்பிடமாகவும் கனடா மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா நதீஸ்குமார் அவர்கள் 19.03.2021 வெள்ளியன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயன்- நல்லையா மற்றும் பூரணம் ஆகியோரின் அன்பு மகனும் இலட்சுமணன் (மன்னன்). புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும் நுதாசினி அவர்களின் அன்புக்கணவரும். சிரோமி. அஸ்வினி. சர்வின் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சரோஜினி(பதில் விடுதி லிகிதர். யாழ் போதனா வைத்தியசாலை) சதீஸ்குமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் புவீந்திரன் (பரிசாரகர். யாழ் போதனா வைத்தியசாலை). ஸ்ரீபிரியா (கனடா). தீபா. உஷா (பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்டச் செயலகம். யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெகதீஸ்வரன் (மேற்பார்வையாளர். யாழ் மாநகர சபை) பதீஸ்ராஜா (ஆசிரியர். உயரப்புலம் மெதடிஸ்த மிசன் பாடசாலை) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் யோசலா. அபிநாத். சேழினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிவேதா. ருபிஷன். பியஷான். தனுஜா. யதுசன். வருண் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 24.03.2021 புதன் கிழமை அன்று கனடா நேரம் பி.ப 2.00-பி.ப 5.00 (இலங்கை நேரம் பி.ப 11.30-மு.ப 2.30) வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக்கிரியைக்காக 25.03.2021 அன்று வியாழக்கிழமை கனடா நேரம் பி.ப 1.30 - பி.ப3.00 (இலங்கை நேரம் பி.ப 11.00-மு.ப 12.30) limit relative.AETERNA Complexe funeraire 55, rue Gince, Montreal, Quebec H4N1J7 என்ற இடத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குறிப்பு: அஞ்சலி நிகழ்வு. தகனக்கிரியை நிகழ்வு என்பன கீழ் குறிப்பிடும் இணைய வழி ஊடாக நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படும்.

Complexeaeterna.com
User Name:Aeternaweb
Password:20210320D
http://complexeaeterna.com

சென் செபஸ்தியார் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

## English Personal Class for Kids

தரம் 1 முதல் தரம் 5 வரையான மாணவர்களுக்கான ஆங்கில பிரத்தியேக வகுப்புக்கு தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு 076 372 5887

## மரண அறிவித்தல்

மண்ணில்
15 . 09 . 1939



விண்ணில்
22 . 03 . 2021

### திரு.கனகசபை புவனேந்திரநாதன்

(இளைப்பாறிய பிரதி அதிபர் - யாழ்/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

யாழ்ப்பாணம் கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கனக புவனேந்திரநாதன் 22.03.2021 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை. பாறுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் இரத்தினம்மாவின் அன்பு மருமகனும். காலஞ்சென்ற சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும் ஆவார். அன்னார் காலஞ்சென்ற நாகேந்திரநாதன். மற்றும் சோதிநாதன். அற்புதமலர். ஞானமலர்(London). மங்களேஸ்வரி. கோமளேஸ்வரி (Canada) ஆகியோரின் சகோதரனும் ஆவார். கீதாஞ்சலி (Canada). Dr. ஆதவன் (சத்திரசிகிச்சை நிபுணர் கொழும்பு தேசிய வைத்தியசாலை). சகுந்தலவாணி (France) ஆகியோரின் அன்புத் தந்தையும். ரவிச்சந்திரன் சிவசக்தி. கிரிதரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும். வெண்ணிலா. பௌர்ணமி. செங்கதிர். கீதன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 24.03.2021 புதன்கிழமை பிற்பகல் 2.00மணியிலிருந்து 8.00 மணிவரை அஞ்சலிக்காக பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் **25.03.2021 வியாழக்கிழமை** காலை 8.00 மணியளவில் ஆரம்பமாகி காலை 10.00 மணிக்கு **பொரளை கனத்தை இந்து மயானத்தில்** தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு
16 . 10 . 1935



இறப்பு
22 . 03 . 2021

### திருமதி ராணி ஒலிவெற் றீற்றா அரசநாயகம்

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராணி ஒலிவெற் றீற்றா அரசநாயகம் 22.03.2021 அன்று மிருசுவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்ற மார்சேல் பிலோமினா தம்பதியரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற மார்சல் அரசநாயகம் (புகையிரத தலைமைப் பாதுகாவலர்) அவர்களின் அன்பு மனைவியும். காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் லீலா பிறிச்சற். இராஜசிங்கம். மேபிள்றூபி. இரத்தினசிங்கம். ஜெயசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்றவர்களான றுக்மணி. பூமணி. செல்வநாயகம். மனோன்மணி. அருட்தந்தை இராஜநாயகம் (முன்னாள் பதுளை மறை மாவட்ட குருமுதல்வர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும். ரஞ்சிதநாயகம். யோகநாதன். விமலராணி (டென்மார்க்). கமலராணி (ஆசிரியர். யா/மீசாலை வீரசிங்கம் ம.வி). தேவநாயகம். வினித்தராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும். கொண்சி. றொஷானி. அன்ரனி ஜெயராசா (டென்மார்க்). கிறிஸ்ரி ரஞ்சன். ஜெயக்குமாரி (ஆசிரியர்-யா/ குட்டியப்புலம் அ.த.க. பாடசாலை). அன்ரனி ரவீந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும். கொன்சன். துஷானா. அக்சனா. அபிசனா. எல்சி. எல்வீனா. எல்விஸ். எல்றோய். கபோனா. ரெறோன். ஸ்ரெபனி. சொபினா. ஸ்ரெபான் ஆகியோரின் அன்பு பேர்த்தியும். இஷாயாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இரங்கற்திருப்பலி இன்று (24.03.2021) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு புனித நீக்கிலார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித நீக்கிலார் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:- 077 128 9113
077 944 8623
077 544 8161

தகவல்:
குடும்பத்தினர்.

## ABI அபி பஷன் வேல்ட் இன்

Fashion World

**தமிழ் சிங்கள புதுவருட மாபெரும் விலைக்கழிவுகள்...**



எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை வரவேற்கும் முகமாக

**22.03.2021 முதல்**
**14.04.2021 வரை**

**70% சிறப்பு விலைக் கழிவுகளுடன் புத்தாண்டை மகிழ்வுடன் வரவேற்போம்.**

சிறுவர் முதல் பெரியவர்கள் வரையான அனைவருக்கும் ஏற்ற உடைகள் ஒரே இடத்தில்

திருமணப் பட்டுப் புடைவைகளுக்கு பிரத்தியேக காட்சியறை அண்மையில் தரவிறக்கப்பட்ட புத்தம் புதிய டிசைன்களுடன்




அபி பஷன் வேல்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
112, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

021 222 3738



## நாகபூஷணி திருமண சேவை

1976 இல் பிறந்த லண்டன் பிரஜாவுரிமை பெற்ற BSC, MSC Civil Engineer க்கு மணமகளும்.
1993 இல் பிறந்த அவுஸ்ரேலியாவில் வதியும் Doctor மணமகளுக்கு மணமகனும் எதிர்பார்க்கப்படுகிறது.
Doctors, Engineers, Accountants, Teachers, Bankers, Lawyers, SLAS, BSC, MSC, CIMA, மற்றும் அரச உத்தியோகத்தர். தனியார் துறையினர். மற்றும் உள்நாட்டு / வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்களை உடன் பெற்றுக் கொள்ளலாம்.

5 ஐந்தாம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

021 222 9306
077 138 7596


## ஓராண்டு நினைவலைகள்



அமரர் **நாகமுத்து தம்பியையா**
(ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26.12.1939 | 24.03.2020 |

திதி : அமாவாசை


காலன் இட்ட கட்டளையை காப்பாற்ற வேண்டுமென்று
கண்ணுக் கெட்டாத தூரத்தே சென்றீரோ!
பாசத்தை முடித்துவிட்டு சென்று விட்டீர்களே!
உம் பிரிவால் எம் உணர்வுகளில் ஏதோவொன்று
இழந்தது போல் ஏங்கித் தவிக்கின்றோம்.
கள்ளமில்லாத புன் சிரிப்பையும்
கனிவான பார்வையையும் அன்பு கனிந்த பேச்சையும்
எளிமையான தோற்றமும் எம் கண்முன் நிலைக்கவிட்டு
இறைவனின் பாதங்களைச் சென்றடைந்தீரோ!
போதும் இவ்வாழ்வென ஓய்வெடுத்துக்கொண்டீரோ!
ஒரு மனதாய் இறைவனை இறைஞ்சுகின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அராலி வீதி, சங்கானை.
குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 13.12.1978 | 04.04.2020 |



அமரர்
**சிருஸ்ணசாமி சியாமளன்**
(நிறுவுனர் இந்துஇளைஞர் மன்றம் மீசாலை)

திதி : 24.03.2021 பங்குனி பூர்வ பக்க ஏகாதசி

கரும்பி மாவடியான் அருகிருந்து
நாளும் பணி செய்தாய்!
விரும்பி நீ செய்த சேவை யெல்லாம்
நாம் மறவோம் சியாமளனே!
திரும்பக் கிடைத்திடா உன் நினைவுகள்
பசுமையாய் என்றும் அரும்பும்
ஓராண்டு நிறைவில் பெறுக மயில்
முருகன் அடியில் அமைதி


ஓம் சாந்தி!

டச்சு வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை.

உங்கள் நினைவில்
குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29.11.1961 | 24.02.2021 |



அமரர்
**ஸ்ரீராமநாதன் சந்தானலட்சுமி**

கடந்த 24.02.2021 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தின் ஒளி விளக்கு அமரர் ஸ்ரீராமநாதன் சந்தானலட்சுமி அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (24.03.2021) புதன் கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிரியைகள் எதிர்வரும் 26.03.2021 வெள்ளிக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

1ம் ஒழுங்கை
பரமன் கிராய், பூநகரி.

குடும்பத்தினர்
077 736 0095

## இலங்கை...

இலங்கை அரசால் கடுமையாக எதிர்க்கப்பட்ட இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறல் மற்றும் அவை மீள நிகழாமை என்பவற்றை உறுதிப்படுத்தல் போன்ற விடயங்களை உள்ளடக்கியுள்ள இந்தப் பிரேரணை (46/1) மீதான வாக்கெடுப்பை நேற்றுமுன்தினம் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் நேற்று வரை வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்டு, நேற்று வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை தலைமையகத்தில் இலங்கை நேரப்படி பிற்பகல் 4 மணிக்கு தீர்மானத்தை முன்வைத்து பிரிட்டன் பிரதிநிதி உரையாற்றினார். அதைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் சார்பில் ஒஸ்ரியா நாட்டுப் பிரதிநிதி பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்து உரையாற்றினார்.

அதைத் தொடர்ந்து பிலிப்பைன்ஸ் நாட்டுப் பிரதிநிதி பிரேரணை தொடர்பாக அதிருப்தி தெரிவித்தார். இந்தப் பிரேரணை இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடும் வகையில் அமைந்திருக்கின்றது என்று குறிப்பிட்ட அவர், இந்தத் தீர்மானத்தை உறுப்பு நாடுகள் நிராகரிக்க வேண்டும் என்றும் கோரினார்.

அதன்பின்னர் சீனா நாட்டுப் பிரதிநிதி பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். ஐ.நா. பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்கும் நிலையில், இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான 2.8 மில்லியன் டொலரை ஐ.நா. எவ்வாறு பெற்றுக்கொள்ளும் என்று அவர் கேள்வி எழுப்பினார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 47 நாடுகள் வாக்களிக்கும் தகமை கொண்டவை. இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக பிரான்ஸ், ஜேர்மனி, ஆஸ்திரேலியா, பிரிட்டன், டென்மார்க் மற்றும் பிரேசில் உட்பட 22 நாடுகளும், எதிராக சீனா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் உட்பட 11 நாடுகளும் வாக்களித்தன. இந்தியா, ஜப்பான் உட்பட 14 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

பிரிட்டன், கனடா உட்பட 6 நாடுகளால் இந்தப் பிரேரணை முன்மொழியப்பட்டிருந்தது. அதில் பல விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை என்று தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தி காணப்பட்ட அதேவேளை, தீர்மானத்தில் உள்ள விடயங்கள் இறுதிப்போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களைச் சேகரிக்கவும், எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய நீதி விசாரணைகளுக்குத் தேவையான ஆதாரங்களை ஒருங்கிணைத்துப் பகுப்பாய்வு செய்வதற்கும் மனித உரிமைகள் சபையை நிர்ப்பந்திக்கும் என்று கூறப்படுகிறது.

சர்வதேச ரீதியில் அதிக கவனவீர்ப்பைப் பெற்ற இந்தத் தீர்மானம் சர்வதேச விசாரணைப் பொறிமுறை நோக்கிய நகர்வுகளுக்கான ஒரு தொடக்கம் என்று நிபுணர்கள் கருதுகின்றனர். இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த 2.8 மில்லியன் டொலர் தேவை என்று கணிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிதியை வழங்க ஆஸ்திரேலிய அரசு ஒப்புதல் தெரிவித்துள்ளது.

அதேவேளை, 2012ஆம் ஆண்டு இலங்கைக்குஎதிராகமுன்வைக்கப்பட்ட தீர்மானத்துக்கு 24 நாடுகள் ஆதரவாகவும், 15 நாடுகள் எதிராகவும், 8 நாடுகள் நடுநிலையாகவும் வாக்களித்திருந்தன. 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவாக 23 நாடுகளும், 12 நாடுகள் எதிராகவும், 12 நாடுகள் நடுநிலையாகவும் வாக்களித்திருந்தன. (ஏ-ஒ)

## தீர்மானத்தின்...

யும், பிரேரணை, தீர்மானமாக நிறைவேறுவதற்கு ஆதரவு கொடுத்த நாடுகளும் ஒன்றுசேர்ந்து ஒன்றுகூடி தீர்மானத்தின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46 ஆவது அமர்வில் பிரிட்டன் தலைமையிலான நாடுகளால் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தீர்மானம் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இது தொடர்பில் இரா.சம்பந்தன் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொறுப்புக்கூறல், சமாதானம் மற்றும் அரசியல் தீர்வு போன்ற கருமங்களை இலங்கை முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்விதமான கருமங்கள் நடைபெற வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். எமது முழுமையான ஒத்துழைப்புகளையும் வழங்குவோம். ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 22 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேறியுள்ள இந்தத் தீர்மானம் ஒரு நல்ல தீர்மானம். இதை நாங்கள் வரவேற்கின்றோம். தீர்மானத்திலுள்ள பரிந்துரைகள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதுதான் முக்கியம் என்றார். (ஏ-22)

## ஐ.நா.வின்...

டுள்ள தீர்மானம், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி பெறும் நடவடிக்கையின் ஒரு படிக்கல் என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

நேற்று ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வில் இலங்கை அரசுக்கு எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குப் பொறுப்புக் கூறுவதில் இருந்து தப்பிக்கொள்ள முனையும் இலங்கை அரசுக்கு, ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒரு அடியாகவே இருக்கும். இந்தத் தீர்மானத்தில் தமிழ் மக்கள் எதிர்பார்த்த பல விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை. இது தமிழ் மக்களுக்கு ஏமாற்றமாக இருந்தாலும், இந்தத் தீர்மானம் சரியான முறையில் செயற்படுத்தப்பட்டால் எதிர்காலத்தில் இலங்கை அரசை சர்வதேச விசாரணைப் பொறிமுறையை நோக்கி உந்தித் தள்ள முடியும். தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி பெறும் நடவடிக்கையின் ஒரு படிக்கல் இந்தத் தீர்மானம் என்று கூறமுடியும். இலங்கை தொடர்ந்தும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கண்காணிப்பில் இருப்பதற்கும் இந்தத் தீர்மானம் உதவும்.

ஐ.நாவில் பிரேரணையைக் கொண்டு வந்த நாடுகளும், அதற்கு ஆதரவளித்த நாடுகளும் அத்தோடு நின்றுவிடாது இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும். தீர்மானத்தில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்த ஆவன செய்ய வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்ப்பார்ப்பு- என்றார். (ஏ)

## எதிர்பார்த்தவை...

யளிக்கும் விடயம்.

இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நேற்று இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

வாக்கெடுப்பில் இந்தியா நடுநிலைமை வகித்தது. இலங்கையைப் பகைத்தால், இலங்கை சீனாவின் நேரடிக் கட்டுப்பாட்டில் செல்லும் அபாயம் இருக்கின்றது. எமது எதிர்ப்பார்ப்புக்கு அமைய தீர்மானம் அமையாவிட்டாலும், இலங்கைத் தொடர்ந்தும் ஐ.நா. சபையால் கண்காணிக்கப்படும் என்பது மகிழ்ச்சியான விடயம்.

ஐக்கிய நாடுகளின் சிறப்புப் பிரதிநிதிகள் இலங்கை வந்து, இங்கு நடைபெறுபவற்றை அவதானிக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. தமிழ் மக்கள் யாரிடம் தங்கள் துயரங்களைச் சொல்வது என்ற பிரச்சினை இருக்கின்றது. வெளிநாட்டுப் பிரதிநிதியோ, ஐக்கிய நாடுகள் சபைப் பிரதிநிதியோ இங்கு வந்தால் மக்கள் தங்கள் பிரச்சினைகளை வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றனர். அண்மையில் காணி அபகரிப்புத் தொடர்பாக நாங்கள் கூறியிருந்தோம். பல காணிகள் அபகரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை அந்தப் பிரதிநிதிகள் கேட்க வேண்டும்.

இலங்கை அரசின் நடவடிக்கைகள் தீக்கோழித் தலையை மண்ணுக்குள் புதைத்துக்கொள்வதைப் போன்றது. இனியும் தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் இல்லை என்று பேசிக் கொண்டிருக்கக் கூடாது. சர்வதேசம் அவதானித்துக் கொண்டிருக்கின்றது என்ற உண்மையைப் புரிந்துகொண்டு, தங்கள் பிழையை உணர்ந்து, தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையைக் கொடுக்க முன்வர வேண்டும். என்றார். (ஏ-319)

## விழுந்தும்...

நாடுகள் தோல்வியுற்றுள்ளன என்று இலங்கை அரசின் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக ஐ.நாவில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 47 உறுப்பு நாடுகள் உள்ள நிலையில், பிரிட்டனுக்கு 22 நாடுகளின் ஆதரவை மாத்திரமே பெற்றுக்கொள்ள முடிந்தது. தீர்மானத்துடன் தொடர்புடைய நாட்டின் அனுமதி இன்றி ஐ.நா. மனித உரிமைகள் சபை, ஒரு நாட்டின் மீது விசேட தீர்மானத்தைக் கொண்டுவர முடியாது. தீர்மானத்துக்கு 22 நாடுகள் ஆதரவு தெரிவித்திருந்த நிலையில், ஏனைய 25 நாடுகளும் தீர்மானத்தைக் கொண்டு வந்த நாடுகளின் பக்கத்தில் இல்லை. அவர்கள் "ஆம்" எனக் கூறவில்லை என்றார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர், ஐ.நாவில் இலங்கைக்கு ஆதரவு தெரிவித்த மற்றும் வாக்களிப்பில் கலந்துகொள்ளாத நாடுகளுக்கு நன்றியும் தெரிவித்துள்ளார். (ஏ-22,44)

## ஐக்கிய...

தின் பிரகாரம் இலங்கைக்கு எதிராக எதுவும் செய்யமுடியாது. இவ்வாறு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்கு எதிராக பிரிட்டன், ஜேர்மன் உள்ளிட்ட நாடுகளே பிரேரணை கொண்டுவந்தன. அதில் ஒரு நாட்டைத் தவிர ஏனையவை நேட்டோ நாடுகளாகும். இந்தநாடுகளே அரபு வசந்தம் என்ற போர்வையில் ஈராக், லிபியா, சிரியா, ஆப்கானிஸ்தான், யேமன் ஆகிய நாடுகளில் அழிவை ஏற்படுத்தின, ஏற்படுத்தியும் வருகின்றன. யேமனில் இன்று நடத்தப்படும் தாக்குதல்களுக்கு பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் பிரிட்டன் மற்றும் ஜேர்மன் நாடுகளுக்குரியவையாகும்.

இவ்வாறு உலகில் இடம்பெறும் பெரும் போர்க்குற்றங்களுடன் தொடர்புடைய நாடுகளே இலங்கைக்கு எதிராக பிரேரணை முன்வைத்தன. அப்பிரேரணை சட்டவிரோதமாகும். இலங்கையில் நடைபெற்ற போர் இரு நாடுகளுக்கிடையிலான போர் கிடையாது. எனவே, சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மட்டுமே இதனுடன் தொடர்புபடும். இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடும் அதிகாரம் மனித உரிமைகள் பேரவைக்கு கிடையாது.

இறுதிப்போரின்போது மக்கள்மீது புலிகளே தாக்குதல் நடத்தினர். படையினரிடம் சரணடைய வந்தவர்கள் கொல்லப்பட்டனர். அவ்வாறு சரணடைய வந்த ஒருவரே பிரபாகரனின் இருப்பிடத்தை காண்பித்தார். எமக்கு எதிரான குற்றச்சாட்டுகள் போலியானவையாகும்- என்றார். (ஏ-44)

## முறையற்ற...

தீர்மானம் நிறைவேற்றப்படக் காரணமாக அமைந்தது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினரான லக்ஸ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த நல்லாட்சி அரசு, இலங்கைக்கு எதிராகத் தீர்மானங்களைக் கொண்டுவராதவாறு சர்வதேச நாடுகளுடன் நற்புடன் நடந்துகொண்டபோதும், தற்போதைய அரசு சில நாடுகளுடன் மாத்திரம் கைகோர்த்துக்கொண்டு மற்றைய நாடுகளுடன் முரண்பாடான கொள்கைகளையே பின்பற்றுகின்றது.

இதனால் ஜெனிவாவில் இலங்கை நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. இது நாட்டுக்கு அபகீர்த்தியானது. ஐரோப்பிய நாடுகளால் பொருளாதாரத் தடைக்கு உள்ளாகும் நிலையும் ஏற்படக் கூடும் என்றார். (ஏ-22)

© 2000 Agfa-Gevaert N.V.

# வடக்கில் 23 பேருக்கு கொரோனாத் தொற்று

யாழ்ப்பாணம், மார்ச் 24

வடக்கு மாகாணத்தில் நேற்று 23 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும் 21 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர்

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடம் ஆகியவற்றில் நேற்று 600 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

கொரோனா வைரஸ் தொற்று அறிகுறி காணப்பட்டதை அடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் சேர்க்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் 2ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணிய 9 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நகர மரக்கறி சந்தை வியாபாரிகள் 9 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் காரைநகர் இ.போ.ச. சாலைப் பணியாளர் ஒருவரின் குடும்ப உறுப்பினர்களாவர்.

கிளிநொச்சி கண்டாவளையைச் சேர்ந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மன்னார் மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-26)

## சந்தை முடக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாணம் நகர சந்தையில் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்து, சந்தை மூடப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

சந்தை வியாபாரிகள் 60 பேருக்கு எழுமாற்றாக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது அவர்களில் 9 பேருக்கு நேற்றுத் தொற்று உறுதி செய்யப்பட்டது. அதையடுத்தே சந்தை பகுதியளவில் மூடப்பட்டுள்ளது.

சந்தையின் உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனைப் பகுதி, பழ விற்பனைப் பகுதி, வெற்றி விற்பனைப் பகுதி என்பனவே மூடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சந்தை வியாபாரிகள் அனைவரும் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். (எ)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் பலாலி வீதி, கோண்டாவில் கொட்டைக்காடு வீதியில் 15 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும்
(பலாலி வீதியிலிருந்து 120M தூரம் காணி உள்ளது)

தொடர்பு: - 077 623 4204
077 505 8561
077 235 2656

**வேலையாட்கள் தேவை**

987/2, KKS Road, எனும் முகவரியில் இயங்கிக்கொண்டிருக்கும் தனியார் நிறுவனமொன்றிற்கு Machinary ல் வேலை செய்யக்கூடிய ஆண், பெண் இருபாலார் தேவை.
ஆர்வமுள்ளவர்கள் மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்கவும்

e-mail:nobertpriska2019@gmail.com
Phone No: 077 973 4816, 021 4927539

**இரண்டாம் மொழி**
**சிங்கள மற்றும் ஆங்கில கற்கை நெறிகள்**
**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்
- சகலருக்குமானது (வயதெல்லை கிடையாது)
- மூன்றாம் நிலை தொழிற் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ISO தரச்சான்றிதழ் மிக்க நிறுவனம்

**Diploma in Sinhala (06 மாதங்கள்)**
**Diploma in English (06 மாதங்கள்)**

அரச உத்தியோகத்தர்கள் மற்றும் இரண்டாம் மொழி சிங்கள பரீட்சை எடுப்போருக்கு தனிப்பட்ட கால அட்டவணைப்படி வகுப்பு ஒழுங்கு செய்து தரப்படும்.

பதிவுகளுக்கு:-
077 543 8086 | 021 468 0964 | 077 028 8711
DTPE CAMPUS
925, K.K.S. றோட், தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். (Multy Farm அருகில்)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவபாக்கியன் நல்லம்மா



அல்வாய் மேற்கை பிறப்பிடமாகவும் அரியாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியன் நல்லம்மா அவர்கள் நேற்று (23.03.2021) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா தம்பதியரின் பாசமிகு மகளும், தம்பு தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவபாக்கியன் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா, சரஸ்வதி, மகாலிங்கம், தங்கச்சியம்மா, கனகமணி, சோதிமலர் மற்றும் கந்தசாமி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ராணி (ஆசிரியை சென்.ஜோசப் கல்லூரி, திருகோணமலை), சிவநாதன் (சுகாதார மேற்பார்வையாளர்) மற்றும் மீரா (ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர், யாழ் வலயம்), சிவமோகன் (கிராம உத்தியோகத்தர்), சியாமா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), யோசுவா சிவயோகன் (போதகர், நாற்சதுர சுவிசேஷ சபை, நல்லூர், ஓய்வுபெற்ற பொறுப்புத் தாதி உத்தியோகத்தர்), சிவரூபன் (லண்டன்), சிவவாசன் (பிரான்ஸ்), சிவகாந்தன் (லண்டன்), கஜனி (முகாமைத்துவ உத்தியோகத்தர், பிரதேச செயலகம், வேலணை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெகசோதி (சட்டத்தரணி), அன்ரனி றோஸ், காலஞ்சென்ற அருள்நேசன் (முன்னாள் வங்கி உத்தியோகத்தர்), யஸ்ரஸ் (ஓய்வுபெற்ற சுகாதார மேற்பார்வையாளர்), சிஸ்ரர் ஆன் யூலிற் (நாற்சதுர சுவிசேஷ சபை) மற்றும் சசிகலா (லண்டன்), செல்வி (பிரான்ஸ்), ஜான்சிராணி (லண்டன்), றொபேட் பிறேமதாஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும், மதன், பிரதீஷ், அமிதாப், சிந்தனா, டெஸ்மன் ரஜீவன், ஆருணியா, நந்திகா, நிருத்திகா, நிதுஷன், ஜெரு டிலக்ஷன், பில்ஷான், தாருண்யா, விதுஷிகா, விரோக்ஷன், எழிலன், நிவேதன், நிதன், மிதா, அன்றூ பிளஸ்சியன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அவரது நல்லடக்க ஆராதனை 25.03.2021 வியாழக்கிழமை 5.00 மணியளவில் அவரது இல்லமாகிய இல.24, வேலப்பர் வீதி, யாழ்ப்பாணத்திலிருந்து இல.673, பருத்தித்துறை வீதி, முத்திரச் சந்தியில் அமைந்துள்ள நாற்சதுர சுவிசேஷ சபையில் 10.30 மணிக்கு நடைபெற்று, 11.30 மணியளவில் இருபாலை காணான் சேமக்கலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மழலையாய்
28.11.1936

மகிமையாய்
23.03.2021

தொடர்பு:
077 395 0266 (சிவயோகன்)

தகவல் :
குடும்பத்தினர்



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 36[illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.